




# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:176 | 10-01-2026 | சனிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

10.01.2026 மார்கழி 26
சனிக்கிழமை

-------------------

சூரிய உதயம் 6.33

-------------------

திதி:
சப்தமி நண்பகல் 12.33 வரை
பிறகு அஷ்டமி

-------------------

நட்சத்திரம்:
இன்று மாலை 6.06 வரை
உத்திரம் பின்பு அஸ்தம்

-------------------

யோகம் :
மரண யோகம்

-------------------

நல்ல நேரம்
காலை 7–8 மணி
மாலை 5–6 மணி.
இராகு காலம்
காலை 9.00–10.30 மணி
எமகண்டம்
நண்பகல் 1.30–3.00 மணி

-------------------

குளிகை
காலை 7.30 – 9.00

-------------------

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

### உங்க கனவ சொல்லுங்க' திட்ட தொடக்க விழாவில்

# இதுவரை 404 வாக்குறுதிகள் நிறைவேற்றம்:முதலமைச்சர்



**சென்னை, ஜன.10:** உங்க கனவ சொல்லுங்க என்ற புதிய திட்டத்தை திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம் பாடியநல்லூரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (ஜன.9) தொடக்கி வைத்தார்.

மக்களின் கனவுகளைக் கேட்டறிந்து அதனை செயல்படுத்தித் தருவதாக முதல்வர் ஸ்டாலின் உறுதியளித்துள்ளார்.

கடந்த 2021-ஆம் ஆண்டில் திமுக அரசு பொறுப்பேற்றது முதல் தற்போது வரை செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு சமூக நலத் திட்டங்களின் பயனாளிகளுடைய தரவுகள் மற்றும் விவரங்களை உறுதிப்படுத்தவும், திட்டங்களின் தற்போதைய செயல்பாட்டு நிலை குறித்து பொதுமக்களின் கருத்தை அறியவும், மக்களின் எதிர்காலக் கனவுகள் மற்றும் தேவைகளைக் கண்டறியவும், அவர்களது வசிப்பிடங்களுக்கே சென்று நேரடியாக அறிந்து கொள்ளும் பொருட்டு இந்தத் திட்டம் அறிமுகமாகிறது.

சுமார் 1.91 கோடி கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள குடும்பங்களைச் சந்தித்து, அவர்கள் பயன்பெற்ற திட்டங்கள் மற்றும் கனவுகளை 50,000 தன்னார்வலர்களை ஈடுபடுத்தி கணக்கெடுத்து ஒவ்வொரு குடும்பத்துக்கும் தனித்துவ அடையாள எண்ணுடன் கனவு அட்டை வழங்க அரசு திட்டமிட்டுள்ளது.

இப்பணிக்காக மகளிர் சுய உதவி குழுக்களைச் சேர்ந்த சுமார் 50,000 உறுப்பினர்கள் தன்னார்வலர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இப்பணிகளை மேற்கொள்ள உரிய பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தெரிவிக்கும் கருத்துகளை பதிவு செய்ய தமிழ்நாடு மின்-ஆளுமை முகமை (TNeGA) மூலம் தனியாக கைபேசி செயலி இதற்கென உருவாக்கப்பட்டுள்ளது.

2021 சட்டப்பேரவை தேர்தலில் கொடுத்த 505 வாக்குறுதிகளில் 404 வாக்குறுதிகளை நிறைவேற்றி இருக்கிறோம். இந்த சாதனையை செய்தது திராவிட மாடல் என்று 'உங்க கனவ சொல்லுங்க..' திட்டத்தை இன்று திருவள்ளூர் மாவட்டம் பாடியநல்லூரில் தொடங்கி வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

தமிழக அரசு கடந்த 5 ஆண்டுகளில் அமல்படுத்தப்பட்ட பல்வேறு அரசு திட்டங்களில் பயனடைந்துள்ள பயனாளிகளின் தரவுகள் மற்றும் விவரங்களை உறுதிப்படுத்தவும், அத்திட்டங்களின் தற்போதைய செயல்பாட்டு நிலை குறித்து பொதுமக்களின் கருத்தை அறியவும், மக்களின் எதிர்கால கனவுகள் மற்றும் தேவைகளைக் கண்டறியவும் அவர்களது வசிப்பிடங்களுக்கே சென்று நேரடியாக அறிந்து கொள்ளும், 'உங்க கனவ சொல்லுங்க' என்ற புதிய திட்டம் தொடக்க விழா இன்று காலை திருவள்ளூர் மாவட்டம், செங்குன்றம் அருகே பாடியநல்லூரில் நடைபெற்றது.

இதில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட உள்ள, 'உங்க கனவ சொல்லுங்க..' திட்டத்தை தொடங்கி வைத்தார்.

**உங்க கனவ சொல்லுங்க திட்டம்**

இத்திட்டத்தின் செயலாக்கம் குறித்த விவரங்கள் அனைத்து ஊரகம் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளிலும், நாளிதழ்கள், சமூக ஊடகங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் முன்கூட்டியே முறையாக விளம்பரப்படுத்தப்பட்டு, விழிப்புணர்வு பணிகளை செய்தி மக்கள் தொடர்புத் துறை ஒருங்கிணைக்கும்.

தன்னார்வலர்கள், தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் இரண்டு முறை செல்வர். முதல் முறை வீட்டிற்கு செல்லும் போது விண்ணப்ப படிவத்தினை குடும்பத் தலைவர் / உறுப்பினரிடம் வழங்குவர். அவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள அரசு திட்டங்களின் பெயர் பட்டியல் விவரங்களை அவர்களிடம் தெரிவித்து, படிவத்தினை பூர்த்தி செய்து தரும்படி கோருவர்.

தன்னார்வலர்கள், இரண்டு நாள்களுக்குப் பிறகு ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று பூர்த்தி செய்யப்பட்ட படிவத்தினை சரிபார்த்து கைபேசி செயலியில் பதிவேற்றம் செய்வர். கைபேசி செயலியில் பதிவேற்றியப் பின்னர் அக்குடும்பத்திற்கு தனித்துவமான அடையாள எண்ணுடன் கூடிய கனவு அட்டையினை வழங்குவர்.

இந்த அட்டை மூலம் www.uks.tn.gov.in என்ற இணையதளத்தில் தங்களது கனவு /கோரிக்கையின் நிலை குறித்து தெரிந்துக் கொள்ளலாம்.

## தமிழகத்தின் 14 மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு!

### தயாரிப்பு நிறுவனம் வேதனை



**சென்னை, ஜன.10:** தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் பூமத்திய ரேகையை ஒட்டிய இந்திய பெருங்கடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், வடமேற்கு திசையில் நகர்ந்து தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில், இலங்கை மட்டகளப்புக்கு தென்கிழக்கே சுமார் 170 கிமீ தொலைவிலும், சென்னைக்கு தென்கிழக்கே 710 கிமீ தொலைவிலும் நிலை கொண்டுள்ளது.

இதன் காரணமாக நாளை (ஜன.10) தமிழக கடலோர பகுதிகளில் பெரும்பாலான இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும், உள் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 11-ம் தேதி வட தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களிலும், தென்தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

13 முதல் 15-ம் தேதி வரை ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

கனமழை வாய்ப்பு: திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் நாளை (ஜன.10) கன முதல் மிக கனமழையும், சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, அரியலூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

11-ம் தேதி சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்கள் மற்றும் புதுச்சேரியில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

## ஜன.28-ல் கூடுகிறது நாடாளுமன்ற கூட்டத் தொடர்; பிப்.1-ல் பட்ஜெட் தாக்கல்



**புதுடெல்லி, ஜன.10:** நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் வரும் 28-ம் தேதி கூடுகிறது. அடுத்த நிதி ஆண்டுக்கான பட்ஜெட் பிப்.1-ம் தேதி தாக்கல் செய்யப்பட இருக்கிறது.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் தொடர்பாக நாடாளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவால் இறுதி செய்யப்பட்ட தற்காலிக அட்டவணையை மேற்கோள்காட்டி, அதிகாரிகள் கூறி இருப்பதாவது: நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் வரும் 28-ம் தேதி கூட உள்ளது. ஆண்டின் முதல் நாடாளுமன்றக் கூட்டத் தொடர் என்பதால் வழக்கம்போல் குடியரசுத் தலைவரின் உரையுடன் கூட்டத் தொடர் தொடங்கும். ஜன.28-ம் தேதி நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் குடியரசு தலைவர் திரவுபதி முர்மு உரையாற்றுவார்.

குடியரசு தின விழாவில் பங்கேற்கும் முப்படைகள், மீண்டும் படைக்குத் திரும்பும் பீட்டிங் ரீட்ரீட் விழா ஜன.29-ம் தேதி நடைபெற உள்ளதால் அன்றைய தினம் நாடாளுமன்றம் கூடாது. ஜன.30-ம் தேதி நாடாளுமன்றம் கூடும். அன்றைய தினம் பொருளாதார ஆய்வறிக்கை தாக்கல் செய்ய வாய்ப்புள்ளது. ஜன. 31 அன்று நாடாளுமன்ற இரு அவைகளும் கூடாது.

மத்திய பட்ஜெட் பிப்.1-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று தாக்கல் செய்யப்பட உள்ளது. நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பட்ஜெட்டை தாக்கல் செய்வார்.

குடியரசுத் தலைவரின் உரை மற்றும் மத்திய பட்ஜெட் ஆகியவற்றுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதங்களுக்குப் பிறகு பிப். 13 அன்று நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்படும். ஏறக்குறைய ஒரு மாத கால ஒத்திவைப்புக்குப் பிறகு மார்ச் 9-ம் தேதி நாடாளுமன்றம் மீண்டும் கூடும். கூட்டத்தொடர் ஏப்ரல் 2-ம் தேதி முடிவடையும். வழக்கமாக நாடாளுமன்ற கூட்டத்தொடர் வெள்ளிக்கிழமைகளில் ஒத்திவைக்கப்படும். ஆனால், ஏப்ரல் 3-ம் தேதி புனித வெள்ளி என்பதால் ஏப்ரல் 2-ம் தேதியே நாடாளுமன்றம் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்படும். இவ்வாறு அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'ஜனநாயகன்' வழக்கை ஜன.21-க்கு ஒத்திவைத்தது ஐகோர்ட் : விஜய் பட ரிலீஸ் மேலும் தாமதம்



**சென்னை, ஜன.10:** ஜனநாயகன்' பட தணிக்கைச் சான்று தொடர்பான வழக்கின் விசாரணை ஜனவரி 21-க்கு ஒத்திவைத்துள்ளது சென்னை உயர் நீதிமன்றம். விஜய்யின் பட ரிலீஸ் மேலும் தாமதம் ஆகிறது.

முன்னதாக, இன்று காலை விஜய்யின் 'ஜனநாயகன்' திரைப்படத்துக்கு உடனடியாக யு/ஏ சான்று வழங்க தணிக்கை வாரியத்துக்கு சென்னை உயர் நீதிமன்றம் தனி நீதிபதி அமர்வு உத்தரவிட்டது. மேலும், படத்தை மறு ஆய்வுக்கு அனுப்பிய தணிக்கை வாரிய உத்தரவையும் ரத்து செய்யவதாக அறிவித்தது.

தனி நீதிபதி பிறப்பித்த இந்தத் தீர்ப்புக்கு எதிராக, தணிக்கை வாரியம் தரப்பில், தலைமை நீதிபதி ஸ்ரீவஸ்தவா தலைமையிலான அமர்வில் முறையீடு செய்யப்பட்டது.

அப்போது, மனுவாக தாக்கல் செய்தால் விசாரணைக்கு ஏற்பதாக தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து தணிக்கை வாரியம் தரப்பில் உடனடியாக மேல்முறையீட்டு மனு தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மேல்முறையீட்டு மனு இன்று பிற்பகல் 3.30 மணியளவில் தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா, நீதிபதி அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது தணிக்கை வாரியத் தரப்பில், "தணிக்கை சான்று வழங்கக் கோரி மட்டுமே படக்குழு தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், படத் தயாரிப்பு நிறுவனம் கோராத நிவாரணம் எல்லாம் நீதிமன்றம் வழங்கி இன்று காலை உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேலும், படத்துக்கு எதிரான புகாரை மும்பை அலுவலகத்தில் இருந்து பெற்று சமர்ப்பித்திருக்கிறோ, எங்கள் தரப்பில் பதில் மனு தாக்கல் போதிய அவகாசம் கோரினோம். அதுவும் அளிக்கப்படவில்லை" எனத் தெரிவிக்கப்பட்டது.

அதற்கு தயாரிப்பு நிறுவனம் தரப்பில், "தணிக்கை வாரியக் குழுவின் உறுப்பினரே எப்படிப் புகார் அளிக்க முடியும்?" என்று வினவப்பட்டது. அதற்கு நீதிபதி, "இது வாதத்துக்கு உரிய விஷயம்" என்று கூறினார். மேலும், "தணிக்கை வாரியத் தரப்புக்கு நியாயமான அவகாசம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். அதன்பின் பரிசீலித்திருக்க வேண்டும். படத்தை மறு ஆய்வு செய்ய பிறப்பித்த உத்தரவை ரத்து செய்யக் கோராத நிலையில் அந்த உத்தரவு ரத்து செய்யப்பட்டது ஏன்?" என்று நீதிமன்றம் வினவியது. மேலும், "தணிக்கை சான்றிதழுக்காக பொறுமையாக காத்திருக்க வேண்டும். அதை விடுத்து நீதிமன்றத்துக்கு அழுத்தம் கொடுத்துள்ளீர்கள்.

நீங்கள் தேதியை அறிவித்துள்ளீர்கள் என்பதற்காக எல்லாரும் உங்கள் விருப்பத்துக்கு ஏற்ப செயல்பட வேண்டுமா?" என்று படத் தயாரிப்புக் குழுவுக்கு தலைமை நீதிபதி கேள்விகளை முன்வைத்தார்.

ஜன.21-க்கு ஒத்திவைப்பு: தொடர்ந்து, 'ஜனநாயகன்' படத்துக்கு தணிக்கைச் சான்று வழங்கும்படி தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவுக்கு தடை விதித்தார். மேல் முறையீட்டு மனுவுக்கு பதிலளிக்க பட நிறுவனத்துக்கு நோட்டீஸ் அனுப்பியதோடு, வழக்கு விசாரணையை ஜனவரி 21-ம் தேதிக்கு தள்ளி வைத்தார். இதனால், பொங்கலையொட்டி ரிலீஸ் ஆக வேண்டிய இந்தப் படத்தின் வெளியீடு மேலும் தாமதம் ஆகிறது.

## தவெக தேர்தல் அறிக்கை தயாரிக்க 12 பேர் கொண்ட குழு அமைப்பு

**சென்னை, ஜன.10:** 'தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றத்தையும், மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியையும் நோக்கமாகக் கொண்டு நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு தமிழக வெற்றிக் கழகம் சார்பில் தேர்தல் அறிக்கை தயாரிக்கப்பட இருக்கிறது.

தமிழ்நாட்டு மக்களையும், ஒட்டுமொத்த மாநிலத்தையும் வளர்ச்சி பாதையில் கொண்டு செல்லும் வகையில் தேர்தல் அறிக்கையினை தயார் செய்ய உள்ளது.

தேர்தல் அறிக்கை குழு விவரம்: கே.ஜி.அருண்ராஜ், ஜே.சி.டி.பிரபாகர், ஏ. ராஜ்மோகன், டி.எஸ்.கே.மயூரி, ஏ.சம்பத்குமார், எம்.அருள் பிரகாசம், விஜய் ஆர். பரணி பாலாஜி, முகமது பர்வேஸ், டி.கே.பிரபு, கிறிஸ்டி பிரித்வி, தேன்மொழி பிரசன்னா, எம்.சத்ய குமார்.

மேற்கண்ட குழுவினருக்கு கழகத் தோழர்கள் முழு ஒத்துழைப்பு நல்குவதோடு, அந்தந்த பகுதிகளில் சம்பந்தப்பட்ட அமைப்புகளை சந்திக்கும் பொழுது தேவையான உதவிகளை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.







## திருக்குறள் குறள்-496

**கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து**



வலிய சக்கரங்களையுடைய பெரியத் தேர்கள் கடலில் ஓடமுடியாது, கடலில் ஓடுகின்ற கப்பல்களும் நிலத்தில் ஓடமுடியாது.

## சிந்திக்க ஒரு நொடி



பூட்டை விட பெரியது கதவு சாவியை விட பெரியது பூட்டு வீட்டை திறக்க சிறிய சாவியே போதும் அதுபோல் பல பிரச்சனைகளுக்கு சிறிய செயலே தீர்வாக அமையும்.

**ராஜகோபாலன்.J**
பெங்களூரு

## மயிலாடுதுறையில் சமய நல்லிணக்கத்திற்கு சான்றாக விளங்கும் புனித அந்தோணியார் திருத்தல ஆண்டு திருவிழா கொடியேற்றத்துடன் தொடக்கம்

**மயிலாடுதுறை ,ஜன,10:**
மயிலாடுதுறையில் உள்ள பிரசித்தி பெற்ற புனித பதுவை மற்றும் வனத்து அந்தோணியார் திருத்தல ஆண்டுத் திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது. பங்குத் தந்தை அருட்திரு.தேவதாஸ் இக்னேஷியஸ் அடிகளார் தலைமையில் ஆலய வளாகத்தில் கொடி பவனி நடைபெற்றது. உதவி பங்குதந்தை மனோஜ் சேவியர் அடிகளார் பவனியை வழி நடத்தினார்.



தஞ்சை மறை மாவட்ட வேந்தர் அருட்திரு.ஜோதி நல்லப்பன் அடிகளார் கொடியை புனிதம் செய்து புனித அந்தோணியார்களின் திருஉருவ கொடியை ஏற்றி திருவிழாவை தொடங்கி வைத்தார். தொடர்ந்து, ஆலயத்தில் சிறப்பு திருப்பலி நடைபெற்றது.

"அழைப்பை ஏற்று அர்ப்பணிப்பு" என்ற இறை வார்த்தையை மையமாகவைத்து நடைபெற்ற திருப்பலியை புனித அந்தோணியார் தொடக்க மற்றும் உயர்நிலைப்பள்ளியினர் பங்கு மக்களோடு இணைந்து சிறப்பித்தனர்.

இத்திருப்பலியில் உலக அமைதிக்காகவும், சமத்துவம் சகோதரத்துவம் தழைத்தோங்கவும் வேண்டி சிறப்பு பிரார்த்தனை வழிபாடுகள் நடைபெற்றன.

இதில் விச்சூர் பங்குத்தந்தை அருட்திரு.ஆரோக்கியசாமி அடிகளார், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள், அன்பிய குழுவினர், பாடகற்குழுவினர், இறைமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

கொடியேற்றத்துடன் தொடங்கிய புனித அந்தோணியார் திருத்தல ஆண்டு திருவிழா தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெற உள்ளது. இதில் தினமும் மாலையில் ஜெபமாலை, நவநாள் ஜெபம், மன்றாட்டுமாலை, திருப்பலி உள்ளிட்ட பல்வேறு வழிபாட்டு நிகழ்வுகள் நடைபெறுகின்றன. வருகின்ற 16-ஆம் தேதி மாலை 6 மணிக்கு திருவிழா சிறப்பு திருப்பலியும், அதனைத் தொடர்ந்து திருத்தேர் பவனியும் நடைபெற உள்ளது.

17-ஆம் தேதி காலை கொடியிறக்கத்துடன் திருவிழா நிறைவு பெறவுள்ளன. விழாவிற்கான ஏற்பாடுகளை புனித அந்தோணியார் திருத்தல பங்குத்தந்தை அருட்திரு. தேவதாஸ் இக்னேஷியஸ் அடிகளார் தலைமையில் விழாக்குழுவினர் மற்றும் பங்கு மக்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

## வேலூர் தூய விண்ணேற்பு அன்னை பேராலய வளாகத்தில் ஜனவரி 10 முதல் 18 ஆம் தேதி வரை மகா புனிதர்களின் அருளீக்கங்களின் அருங்காட்சி



**வேலூர், ஜன. 10:**
வேலூர் மாவட்டம் ஆர். சி.சர்ச் ரோடு தூய விண்ணேற்பு அன்னை பேராலய வளாகத்தில் ஜனவரி 10 முதல் 18 ஆம் தேதி வரை மகா புனிதர்களின் அருளீக்கங்களின் அருங்காட்சி நடைபெற உள்ளது.

இதைக் குறித்து விண்ணேற்பு அன்னை பேராலயத்தின் பங்கு தந்தை ராய் லாசர் கூறுகையில் 1500க்கும் மேற்பட்ட புனிதர்களின் நினைவுச்சின்னங்கள் மற்றும் அவர்கள் பயன்படுத்திய பொருட்கள் ஒரே இடத்திலே கண்காட்சிக்காக வைக்கப்பட இருக்கிறது. மக்கள் அனைவரும் இந்த கண்காட்சியை கண்டு புனிதர்களின் வரலாற்றையும் அவர்கள் வாழ்ந்த வாழ்வு முறையையும் கற்றுக் கொள்ளலாம் அதுமட்டுமல்லாமல் புனிதர்களைப் போல நாமும் நல்லவர்களாக வாழ்ந்து ஜெயித்து காட்ட முடியும் என்ற தன்னம்பிக்கை பெற்றுக் கொள்ளலாம். அனைத்து மதத்தினரும் இக்கண்காட்சியை இலவசமாக காலை 7:00 மணி முதல் இரவு 9 மணி வரை கண்டு வணங்கி செல்லுமாறு கேட்டுக்கொண்டார்.

அருட்தந்தை ஜோசப் மற்றும் பங்கு பேரவை உப தலைவர் ரொசாரியோ உடன் இருந்தனர் .

## உத்தராயண புண்ணியகால உற்சவம் 4ஆம் நாள்



**திருவண்ணாமலை, ஜன.10:**
திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் உத்தராயண புண்ணிய கால உற்சவம் 4-ஆம் நாள் காலை வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, வெள்ளி கவசத்துடன் மாட வீதி உலா நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## கூத்தப்பன்குடிகாட்டில் நியாய விலை கடையை அமைச்சர் கணேசன் திறந்து வைத்தார்

**கடலூர், ஜன.10:**
கடலூர் மாவட்டம், மங்களூர் ஒன்றியம், திட்டக்குடி நகராட்சி கூத்தப்பன்குடிகாட்டில் சுமார், 500க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. கூத்தப்பன்குடிகாடு பகுதியில் நியாய விலைக் கடை வாடகை கட்டிடத்தில் இயங்கி வந்ததால் நியாய விலைக் கடைக்கு சென்று அரிசி, சர்க்கரை, பாமாயில் உள்ளிட்ட பொருட்களை அப்பகுதிவாசிகள் வாங்கி வந்தனர்.



இதனால் கூத்தப்பன்குடிகாடு நியாய விலைக் கடை அமைக்க வேண்டும் என, நகராட்சி கவுன்சிலர் மீனாட்சி மற்றும் பொதுமக்கள் நீண்ட நாட்களாக தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் கணேசனிடம் கோரிக்கை வைத்து வந்தனர்.

இதையடுத்து, கூத்தப்பன் குடிகாடு காலி இடத்தில், திட்டக்குடி சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டம் 2023 - 24ன் கீழ், 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக நியாய விலைக் கடை கட்டடம் அமைக்கப்பட்டது. கட்டுமான பணிகள் முடிந்த நிலையில் நியாய விலைக் கடை திறப்பு விழா, நேற்று மாலை நடைபெற்றது.

இதில், திட்டக்குடி சட்டமன்ற உறுப்பினரும் தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் பங்கேற்று, நியாய விலைக் கடையை திறந்து வைத்தார்.

இதில் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கிராம மக்கள் ஏராளமானோர் பங்கேற்றனர்.

## அவலூர்பேட்டையில் பொது சுகாதார கட்டிடம் திறப்பு



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் அவலூர்பேட்டையில் பொது சுகாதார கழிப்பிட கட்டிடத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ திறந்து வைத்தார் இந்நிகழ்வில் ஒன்றிய சேர்மன் கண்மணி நெடுஞ்செழியன் மற்றும் துறைச் சார்ந்த அதிகாரிகள் பொதுமக்கள் கலந்துகொண்டனர். **அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

## மார்கழி மாதம் சுக்கர வாரம் சிறப்பு வழிபாடு

**பொள்ளாச்சி , ஜன.10:**
பொள்ளாச்சி ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் மார்கழி மாதத்தை முன்னிட்டு சுக்கிர வாரம் நன்னாளில் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளுடன்,தங்க ஆபரணங்களுடன் பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், வேத மந்திரங்கள் ஒலிக்க, பெண்கள் அனைவரும் பாட்டுக்கள் பாடி மகாதீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## தேமுதிக மக்கள் உரிமை மாநாட்டு திடலில் கொடி



கடலூர் மாவட்டத்தில் நேற்று நடந்த , தேமுதிக மக்கள் உரிமை மாநாட்டு திடலில் பொதுச் செயலாளர் பிரேமலதா கொடி ஏற்றினார்.

## விருத்தாசலம் விருதகிரிஸ்வரர் திருக்கோயிலில் பிரேமலதா தனது மகன்களுடன் சாமி தரிசனம்



விருத்தாசலம் அருள்மிகு விருதகிரிஸ்வரர் திருக்கோயிலில் நேற்று தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா தனது மகன்களுடன் சாமி தரிசனம் செய்தார்.

## வைகோவின் சமத்துவ நடைபயண பொதுக்கூட்டம்



மதுரை மாவட்டம் மேலூரில் நேற்று நடந்த மதிமுக பொதுச்செயலாளர் வைகோவின் சமத்துவ நடைபயண பொதுக்கூட்டத்தில் வேல்முருகன், திருமுருகன் காந்தி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சி



கிருஷ்ணகிரி அரசு ஆடவர் கலைக்கல்லூரியில், விடுதிகளில் தங்கிப் பயிலும் கல்லூரி மாணவ, மாணவியருக்கு சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சியில், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் பத்மலதா ஆலோசனை வழங்கினார்.

## ஆண்டாள் கள்ளழகர் திருக்கோலத்தில் அருள் பாலித்தார்



ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் மார்கழி நீராட்ட விழாவில் எண்ணெய் காப்பு உற்சவத்தின் 2-ம் நாளான நேற்று ஆண்டாள் கள்ளழகர் திருக்கோலத்தில் அருள் பாலித்தார்.

## மாணவிகள் பொங்கல் விழா



சென்னை பிராட்வே, கன்யகா பரமேஸ்வரி மகளிர் கல்லூரியில் நேற்று மாணவிகள் பொங்கல் விழா கொண்டாடினர்.

## கல்லூரியில் பொங்கல் விழா



கோவை கொங்குநாடு கலை, அறிவியில் கல்லூரியில் பொங்கல் விழா நேற்று நடந்தது.

## நீதிபதிகள் – வழக்கறிஞர்கள் இடையிலான கயிறு இழுக்கும் போட்டி



மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவில் நீதிபதிகள் - வழக்கறிஞர்கள் இடையிலான கயிறு இழுக்கும் போட்டியை உயர் நீதிமன்ற நீதிபதி வடமலை தொடங்கி வைத்தார்.

## நன்னிலம் சட்டமன்ற தொகுதிக்கு திருவாரூர் மாவட்ட பாமக செயலாளர் வேணு பாஸ்கரன் விருப்ப மனு

**திண்டிவனம், ஜன.10:**
நன்னிலம் சட்டமன்ற தொகுதிக்கு திருவாரூர் மாவட்ட பாமக செயலாளர் வேணு. பாஸ்கரன் விருப்ப மனு தாக்கல் செய்தார்.



நேற்று திண்டிவனம் தைலாபுரத்தில் வருகிற 2026 சட்டமன்ற தேர்தலில் திருவாரூர் மாவட்டம் நன்னிலம் சட்டமன்ற தொகுதியில் போட்டிட விருப்ப மனுவை,பாட்டாளி மக்கள் கட்சியின் கௌரவ தலைவர் ஜி.கே.மணி எம் எல் ஏ, செயல் தலைவர் ஸ்ரீகாந்தி ராமதாஸ், பொதுச் செயலாளர் முரளி சங்கர் ஆகியோர் முன்னிலையில் மருத்துவர் எஸ்.ராமதாஸ் அவர்களிடம் பாட்டாளி மக்கள் கட்சி திருவாரூர் வடக்கு மாவட்ட செயலாளர் சேங்காலிபுரம் வேணு.பாஸ்கரன் வழங்கினார்.

அவருடன் திருவாரூர் மாவட்ட மாநில செயற்குழு உறுப்பினர் வலஙகை என். மாரிமுத்து, உழவர் பேரியக்க திருவாரூர் மாவட்ட செயலாளர் உலகநாதன், வடக்கு மாவட்ட பாமக தலைவர் பழனி, வன்னியர் சங்க மாவட்ட செயலாளர் கணேச.சண்முகம், மாநில துணைத் தலைவர் காசிநாதன், குடவாசல் நகர செயலாளர் இளங்கோவன் ஆகியோர் இருந்தனர்.

# கலைஞர் கைவினை திட்டத்தின் கீழ் 286 பேருக்கு கடன் ஒப்புதல் ஆணை

**கிருஷ்ணகிரி, ஜன.10:**

கலைஞர் கைவினைத் திட்டத்தின் கீழ், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 286 பேருக்கு ரூ.1 கோடியே 53 ஆயிரம் மானியத்துடன் கூடிய கடன் ஒப்புதல் ஆணைகள் வழங்கப்பட்டன. கலெக்டர் தினேஷ் குமார் மற்றும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே. மதியழகன் ஆகியோர் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆணைகளை வழங்கினர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், திண்டுக்கல் மாவட்டம் வேலுநாச்சியார் வளாகத்தில் நடைபெற்ற விழாவில், காணொலிக் காட்சி வாயிலாக கலைஞர் கைவினைத் திட்டத்தின் கீழ் நலத்திட்ட உதவிகள் வழங்கும் பணிகளைத் தொடங்கிவைத்ததைத் தொடர்ந்து, கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட தொழில் மையம் சார்பில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

இத்திட்டத்தின் கீழ், ரூ.3 லட்சம் வரை பிணையமில்லா கடன் வழங்கப்படுவதுடன், கடன் தொகையில் 25 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.50,000 வரை மானியமும், 5 சதவீதம் வரை வட்டி மானியமும் வழங்கப்படுகிறது. தொழில் வளர்ச்சிக்குத் தேவையான பயிற்சி மற்றும் வழிகாட்டுதலும் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் பயன்பெற குறைந்தபட்ச வயது 35 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்புவோர், ஆதார் அட்டை, வங்கி கணக்கு விவரங்கள் மற்றும் கைபேசி எண்ணுடன் WWW. MSMEONLINE.TN.GOV.IN என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். மேலும் விவரங்களுக்கு மாவட்ட தொழில் மையம், சிட்கோ தொழிற்பேட்டை, கிருஷ்ணகிரி தொலைபேசி: 04343-235567 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என கலெக்டர் தெரிவித்தார்.

# கூடலூரில் ரூ.9.44 கோடி மதிப்பில் வளர்ச்சி பணிகள்: விரைந்து முடிக்க கலெக்டர் லட்சுமிபவ்யா உத்தரவு

**நீலகிரி, ஜன. 10:**

நீலகிரி மாவட்டம், கூடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட நெலாக்கோட்டை மற்றும் சேரங்கோடு ஊராட்சிகளில், ஊரக வளர்ச்சி முகமை சார்பில் ரூ.9.44 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு செய்தியாளர் பயணம் மேற்கொண்டு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: நீலகிரி மாவட்டத்தில் உதகை, குன்னூர், கோத்தகிரி, கூடலூர் உள்ளிட்ட ஊராட்சி ஒன்றியங்களில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக, கூடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட நெலாக்கோட்டை ஊராட்சியில் ரூ.39.87 லட்சம் மதிப்பில் மேம்பீட்டு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் இரண்டு வகுப்பறைகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், ரூ.50 லட்சம் மதிப்பில் விளாங்கூர் துணை சுகாதார நிலையம் கட்டும் பணியை பார்வையிட்டு, கூடுதல் பணியாளர்களை ஈடுபடுத்தி பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது எனவும் அவர் தெரிவித்தார்.

# கோவை மாநகராட்சியில 14ந் தேதி சமத்துவ பொங்கல்

**கோவை, ஜன.10:**

தமிழ்நாடு முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி, தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கோவை மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட வரதராஜபுரம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி வளாகம், மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட ஆர்.எஸ்.புரம் சாஸ்திரி மைதான வளாகம், வடக்கு மண்டலத்திற்கு உட்பட்ட காந்தி மாநகர், மாநகராட்சி விளையாட்டு மைதான வளாகம், தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட கோவைப்புதூர் ஏ கிரவுண்டு மைதான வளாகம் மற்றும் மத்திய மண்டலத்திற்கு உட்பட்ட வ.உ.சி. மைதான வளாகம் ஆகிய 5 இடங்களில் சமத்துவ பொங்கல் விழா ஜனவரி 14 புதன் கிழமை அன்று நடைபெற உள்ளது. மேலும், இந்த சமத்துவ பொங்கல் திருவிழாவில் 100-க்கும் மேற்பட்ட பானைகள் கொண்டு பொங்கல் இடுதல், தமிழர் பண்பாடு மற்றும் கலாச்சாரத்தினை கொண்டாடும் வகையிலான பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள், பள்ளி மாணவ, மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகள், கோலப்போட்டி, உறி அடித்தல் போட்டி, இசை நாற்காலி போட்டி, கயிறு இழுத்தல் போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடைபெற உள்ளது. மேற்காணும் சமத்துவ பொங்கல் திருவிழாவில் அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள், மகளிர் சுய உதவிக்குழுவினர், குடியிருப்பு நலச்சங்கத்தினர், தன்னார்வலர்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் தூய்மைப்பணியாளர்கள் உள்ளிட்ட அதிக எண்ணிக்கையிலான பொதுமக்கள் கலந்து கொள்ளுமாறு மாநகராட்சி நிர்வாகம் சார்பில் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

# தொழில்நுட்பம் அனைவருக்கும் சமமாக கிடைக்க வேண்டும்: முதல்வர் ஸ்டாலின்

**சென்னை, ஜன.10:**



தொழில்நுட்பம் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்திற்கு மட்டுமான கருவி இல்லை; எல்லோருக்கும் சமமாக கிடைக்க வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று (ஜன. 8) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் நடைபெற்ற UmagineTN-2026 தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாட்டை தொடங்கி வைத்து, உரையாற்றினார்.

அவர் பேசுகையில், "தமிழ்நாட்டின் டிஜிட்டல் எதிர்காலத்தை வடிவமைத்து வரக்கூடிய Umagine-இன் நான்காவது மாநாட்டை தொடங்கி வைப்பதில் நான் பெருமை அடைகிறேன். சொல்லும்போதே தெரியும்! நாம் ஆட்சிக்கு வந்த பிறகு தான், இந்த மாநாட்டை நடத்தத் தொடங்கினோம். அது இன்றைக்கு மிகப்பிரமாண்டமாக நடைபெறுவது மகிழ்ச்சி அளிக்கிறது.

தமிழ்நாட்டின் தொழில்நுட்ப வளர்ச்சிப் பயணத்தில், ஒரு முக்கியமான தருணமாக இந்த இரண்டு நாள் மாநாடு அமையும் என்று நான் நம்புகிறேன். இன்றும், நாளையும் நடைபெற இருக்கின்ற மாநாடு. எந்தெந்த தலைப்பில் 'செஷன்' ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று பார்த்தேன். கடைக்கோடி பகுதியையும், டிஜிட்டல் ஹெல்த்-கேர் மூலமாக சென்றடைவது - கேமிங் துறையில் தமிழ்நாட்டை முக்கிய மையமாக முன்னேற்றுவது - வாட்சாப் கவர்னென்ஸ் தொடக்கம் - அறம், பரிவு மற்றும் ஏ.ஐ. - தொழில்நுட்பப் புரட்சியை பெண்கள் வழிநடத்துவது - இப்படி பல தலைப்புகள்! அனைத்தும் தற்காலத்திற்கு தேவையானதாக, மிகவும் ரெலவன்டாக இருக்கிறது!

தொழில்நுட்ப வளர்ச்சியில், தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கெல்லாம் ஒரு படி முன்பாக இருக்க வேண்டும் என்று நினைப்பேன்! அதை நிறைவேற்றுவது போல, இந்த மாநாடு அமைந்திருக்கிறது!

நவீனத்தை நோக்கிய பாய்ச்சல் - சமூக சமநிலை - அனைவருக்குமான வளர்ச்சி என்று திராவிட மாடல் அரசின் தொலைநோக்குப் பார்வையை பிரதிபலிக்கும் வகையில் "UMAGINE TN 2026" மாநாட்டை ஏற்பாடு செய்திருக்கும் நம்முடைய தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜனுக்கு என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்! என்றார்.

# 'திறன் தமிழ்நாடு' போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு ரூ.24.50 லட்சம்: உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்

**சென்னை, ஜன.10:**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், திறன் தமிழ்நாடு 2025 போட்டியில் மாநில அளவில் முதலிடம் வென்ற 70 மாணவர்களுக்கு தலா 25,000 ரூபாய் மற்றும் 2 ஆம் இடம் பெற்ற 69 மாணவர்களுக்கு தலா 10,000 ரூபாய் என மொத்தம் 24.40 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். சென்னை வள்ளுவர் கோட்டத்தில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் போட்டி நடந்தது.

தொடர்ந்து 2025 26 ம் கல்வியாண்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியல் மற்றும் கலைக்கல்லூரிகளில் 2026 டிசம்பர் மாதம் முதல் நடைபெற்ற வளாக வேலைவாய்ப்பு முகாம்கள் மூலமாக தேர்வு செய்யப்பட்ட 1,194 மாணவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

நான் முதல்வன் போட்டித் தேர்வு பிரிவின் வாயிலாக உறைவிடப் பயிற்சி பெற்ற மாணவ, மாணவிகளில் பணியாளர் தேர்வு வாரியத்தின் தேர்வில் 25 நபர்களும், வங்கித்தேர்வில் 44 நபர்களும், இரயில்வே தேர்வில் 11 நபர்களும் என 80 மணவ, மாணவிகள் வெற்றி பெற்று பணி நியமனம் பெற்றுள்ளனர். இவர்களில் 16 வெற்றியாளர்களுக்கு துணை முதலமைச்சர் இன்றைய நிகழ்ச்சியில் பதக்கம் வழங்கி சிறப்பித்தார்.

இந்த நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசுகையில் கூறியதாவது:

தமிழ்நாட்டில் பல திறமையாளர்களை உருவாக்க வேண்டும் என்பதே அரசின் நோக்கம். நான் முதல்வன் திட்டம் மூலமாக வரும் ஜூன் வரை தமிழ்நாடு முழுவதும் 100-க்கும் அதிகமான வேலைவாய்ப்பு முகாம்கள் நடைபெற உள்ளன. இதன் மூலமாக பல ஆயிரம் மாணவர்களுக்கு பல முன்னணி நிறுவனங்களில் வேலைவாய்ப்பு கிடைக்க இருக்கிறது என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில், இந்தியா திறன் 2026 போட்டியில் வெல்லும் மாணவர்களுக்கு பணி நியமனம் வழங்க முன்வந்துள்ள எல் அண்ட் டி, சோகோ, நிப்பான் பெயிண்ட்ஸ், பெஸ்டோ, நேச்சுரல்ஸ், ஸ்ரீராமகிருஷ்ணா அட்வான்ஸ்டு டிரையினிங் இன்ஸ்டிடியூட், உம்முடி பங்காரு, ஷோபா பில்டர்ஸ், மதர்சன், டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை, அஸ்பயர் ஃபுட்வியர், கோ இந்தியா ஆகிய நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்திற்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

# நாமக்கலில் ரூ.198 கோடி மதிப்பிலான புறவழிச்சாலைகளை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்து புதிய சாலைகளுக்கு அடிக்கல்

**நாமக்கல், ஜன.10:**

நாமக்கல் நகரில் ரூ.198.12 கோடி மதிப்பீட்டில் புறவழிச்சாலைப் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டும், முடிக்கப்பட்ட சாலைகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைக்கப்பட்டும் உள்ளன.

நாமக்கல் மாநகராட்சி வேட்டாம்பாடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் தலைமையில், மரூர்பட்டி வேட்டாம்பாடி மற்றும் வேட்டாம்பாடி வசந்தபுரம் இடையிலான ரூ.95.12 கோடி மதிப்பிலான இரண்டு புறவழிச்சாலைகளை திறந்து வைத்தார். மேலும், வசந்தபுரம் லத்துவாடி மற்றும் லத்துவாடி வள்ளிபுரம் இடையிலான ரூ.103 கோடி மதிப்பிலான இரண்டு புறவழிச்சாலைகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்தார்.

நிகழ்வில் மாநிலங்களவை உறுப்பினருமான நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர். என். ராஜேஸ்குமார், நாமக்கல் மக்களவை உறுப்பினர் வி.எஸ். மாதேஸ்வரன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், நாமக்கல் மேயர் கலாநிதி, மாவட்ட வருவாய் அலுவலர் மா.க.சரவணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பின்னர் அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களிடம் கூறுகையில், நாமக்கல் புறவழிச்சாலைத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.297 கோடி என்றும், முதலைப்பட்டி முதல் வள்ளிபுரம் வரை 22 கி.மீ. நீளத்திற்கு ஐந்து கட்டங்களாக பணிகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார். இத்திட்டத்தில் 11 கிராமங்களைச் சேர்ந்த 146 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, ரூ.104 கோடி இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

# புகையில்லா போகி பண்டிகை - பொதுமக்களுக்கு மாசு கட்டுப்பாடு வாரியம் வேண்டுகோள்

**சென்னை, ஜன.10:**




தமிழக அரசின் மாசு கட்டுப்பாடு வாரியம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;-

நமது முன்னோர்கள் பொங்கல் திருநாளுக்கு முன் பழைய கழிதலும், புதியன புகுதலும் என்ற அடிப்படையில் போகிப்பண்டிகையினைக் கொண்டாடி வந்துள்ளனர். இயற்கைப் பொருட்களிலிருந்து தயாரிக்கப்பட்ட பழைய பொருட்களை தீயிட்டுக் கொளுத்தி வந்துள்ளனர். இச்செய்கையால் காற்று மாசுபடாமல் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாமல் இருந்து வந்துள்ளது.

ஆனால் இன்றைய சூழலை எடுத்துக்கொண்டால், தற்பொழுது போகிப்பண்டிகையின் பொழுது பழைய பொருட்களான பிளாஸ்டிக், செயற்கை இழைகளால் தயாரிக்கப்பட்ட துணிகள், ரப்பர் பொருட்கள், பழைய டயர் மற்றும் டியூப், காகிதம், ரசாயனம் கலந்த பொருட்கள் போன்றவற்றை எரிப்பதால் காற்று மாசு ஏற்படுவதோடு போகி அன்று எரிக்கப்படும் பொருட்களால் ஏற்படும் அடர்ந்த புகையின் காரணமாக விமானங்கள் வருகை மற்றும் புறப்பாடுகளில் தாமதம் ஏற்படுகிறது. சென்னை நகரில் போகி அன்று எரிக்கப்படும் மேற்படி பொருட்களால் புகை மண்டலம் ஏற்பட்டு வாகன ஓட்டிகளுக்கு மிகுந்த சிரமங்கள் ஏற்படுவதோடு விபத்துகளுக்கும் காரணமாக உள்ளது. பழைய பிளாஸ்டிக் பொருட்கள், டயர் மற்றும் டியூப் போன்றவற்றை எரிப்பதால் வெளிப்படும் நச்சு வாயுக்களால் மூச்சு திணறல், கண் எரிச்சல் போன்ற நோய்களால் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. இத்தகைய செயல்கள் பொது மக்களிடம் விழிப்புணர்வு இல்லாமையால் ஏற்பட்டு வந்தது. இதனை தவிர்க்க, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கடந்த 21 ஆண்டுகளாக போகிப்பண்டிகைக்கு முன் பொதுமக்களிடைய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், விழிப்புணர்வுப் பிரசாரத்தை தொடர்ந்து நடத்தி வருகின்றது. இதன் காரணமாக கடந்த வருடங்களில் பழைய ரப்பர் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் டயர், டியூப் போன்றவற்றை எரிப்பது பெரும்பாலும் குறைந்துள்ளது.

மேலும், போகிப்பண்டிகையின் போது சென்னை மாநகரத்தின் சுற்றுச்சூழல் காற்று தரத்தினை கண்காணிப்பு செய்யும் பொருட்டு, வாரியம் போகிப்பண்டிகையின் முந்தைய நாள் மற்றும் போகிப்பண்டிகை நாளிலும், 15 இடங்களில் 24 மணிநேரமும் காற்றுத்தரத்தினை கண்காணிக்க, காற்று மாதிரி சேகரிப்பு செய்து ஆய்வு செய்வதற்கு ஏற்பாடு செய்துள்ளது. மேலும் காற்றின் தர அளவு வாரிய இணையதளத்தில் வெளியிடப்படும். இந்த 2026 ஆம் ஆண்டும் சுற்றுச்சூழல் மாசு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில், சென்னை மாநகரம் மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் விழிப்புணர்வுப் பிரசாரம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

# வாயுத் தொல்லை, அஜீரணம், மற்றும் பசி எடுக்காமல் இருப்பவர்களுக்கு இது மிகச்சிறந்த தீர்வு



இன்றைய காலகட்டத்தில் நாம் எதற்கெடுத்தாலும் மருத்துவமனைக்கு ஓடுகிறோம். ஆனால், நம் பாட்டி காலத்தில் சமையலறையே ஒரு மருத்துவமனையாக இருந்தது. ஆம், அன்றைய காலகட்டத்தில் அனைவர் வீட்டிலும் கட்டாயம் இருக்கக்கூடிய ஒரு பொடி தான் "அஷ்ட சூரணம்". "அஷ்டம்" என்றால் எட்டு என்று பொருள்.

எட்டு வகையான மருத்துவ குணங்கள் கொண்ட பொருட்களை வைத்துச் செய்யப்படும் இந்த சூரணம், செரிமானக் கோளாறுகளுக்கு ஒரு வரப்பிரசாதம். இது காலப்போக்கில் மறக்கப்பட்டுவிட்ட ஒரு மருத்துவ முறையாகிவிட்டது. இதை மீண்டும் நம் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதன் அவசியத்தை காண்போம்.

இன்றைய உணவு பழக்கவழக்கத்தில், நமக்கு நேரங்கெட்ட நேரத்தில் சாப்பிடுவது வாடிக்கையாகிவிட்டது. குறிப்பாக விசேஷ வீடுகள் மற்றும் திருமணங்களில், வகை வகையான உணவுகளைக் கண்டு, வயிறு முட்ட சாப்பிட்டுவிட்டு அவதிப்படுபவர்கள் பலர். அந்த மாதிரி நேரங்களில், இந்த அஷ்ட சூரணம் வயிற்றுக்கு ஒரு இதமான மருந்தாக இருக்கும். வாயுத் தொல்லை, அஜீரணம், மற்றும் பசி எடுக்காமல் இருப்பவர்களுக்கு இது மிகச்சிறந்த தீர்வு.

சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கு இது ஒரு அருமருந்து. காலை 11 மணி அளவில், நீர் மோரில் ஒரு ஸ்பூன் அஷ்ட சூரணத்தைக் கலந்து குடித்து வந்தால், செரிமான மண்டலம் சீராகும் என்று ஆடியோவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல், குழந்தை பெற்ற தாய்மார்களுக்கு கருஞ்சீரகம் கலந்த இந்த பொடி மிகவும் நல்லது. இதை எப்படி வேண்டுமானாலும் சாப்பிடலாம். சூடான சாதத்தில் நல்லெண்ணெய் அல்லது நெய் விட்டு, இந்த பொடியைப் பிசைந்து சாப்பிடலாம். வெந்நீரில் கலந்தும் குடிக்கலாம். ஏன், நம் பாட்டிகள் காலத்தில் சிலர் காபியில் கூட இதைத் தொட்டுக்கொண்டு சாப்பிடுவார்களாம். அந்த அளவிற்கு இது நம் அன்றாட உணவோடு கலந்திருந்தது.

அஜீரணக் கோளாறு உள்ளவர்கள், அல்சர் போன்ற பிரச்சனை உள்ளவர்கள் மட்டும் மருத்துவரின் ஆலோசனைப்படி இதை எடுத்துக்கொள்வது நல்லது. மற்றபடி, அனைவர் வீட்டிலும் இருக்க வேண்டிய ஒரு அத்தியாவசியமான "ஃபேமிலி டாக்டர்" இந்த அஷ்ட சூரணம்.

# பாயில் படுத்து உறங்குவதால் கிடைக்கும் நன்மைகள்

கட்டிலின் மெத்தையை விட தரையில் பாய் விரித்து உறங்குவது உடல் உஷ்ணத்தை போக்கும்.

நம் முன்னோர்கள் பாயில் படுத்து உறங்கும் வழக்கத்தை பின்பற்றி வந்தனர். ஆரோக்கியமான வாழ்விற்கு இயற்கையான பாய்களையே நம்பியிருந்தனர். ஆனால் இந்த நவீன காலத்தில் பலரும் பஞ்சு மெத்தையில் உறங்குவதை விரும்புகின்றனர். பாயின் மகிமையை உணர்ந்து அதில் உறங்கும் வழக்கத்தை பின்பற்றுபவர்களும் இருக்கிறார்கள்.

உடலில் உருவாகும் அதிகமான சூட்டை உள்வாங்கி, உடல் வெப்பநிலையை சமநிலைப்படுத்தும் தன்மை கொண்டது பாய். கட்டிலின் மெத்தையை விட தரையில் பாய் விரித்து உறங்குவது உடல் உஷ்ணத்தை போக்கும். வாதத்தை கட்டுப்படுத்தும். நினைவுத்திறனை மெருகேற்றும். உடலுக்கு சீரான ஓய்வையும், நிம்மதியான உறக்கத்தையும் அளிக்கும். மன அமைதியை மேம்படுத்தும். பாயில் தூங்குவது மார்பக தசைகள் தளர்ந்து விரிவடைய வழிவகை செய்யும். குறிப்பாக பாயில் தலையணை இல்லாமல் தூங்குவது சிறந்தது.

நேர்த்தியாக தயாரிக்கப்பட்ட பாய் மூன்று ஆண்டுகள் வரை தனது இயற்கை தன்மையை இழக்காது. கால மாற்றத்திற்கேற்ப பாய்களும் பயன்படுத்துவதற்கேற்ப உருமாற்றமடைந்து கொண்டிருக்கின்றன.

# ரூ.4.58 கோடியில் கன்னிமாரா நூலகம் புதுப்பிப்பு: துணை முதல்வர் உதயநிதி திறந்து வைத்தார்



**சென்னை, ஜன.10:**

சென்னை எழும்பூரில் ரூ.4.58 கோடியில் புதுப்பிக்கப்பட்ட கன்னிமாரா நூலகத்தை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் புதன்கிழமை திறந்து வைத்தார்.

சென்னை கன்னிமாரா பொது நூலகம் கடந்த 1890-ஆம் ஆண்டு அன்றைய சென்னை மாகாணத்தின் ஆளுநராக இருந்த பாபிராபர்ட் பாரன் கன்னிமாராவால் அடிக்கல் நாட்டப்பட்டு 1896 டிச.5-ஆம் தேதி தொடங்கப்பட்டது. 130-ஆவது ஆண்டில் தடம் பதித்து சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

இந்த நூலகத்தின் கட்டடக்கலை மிகவும் சிறப்பு வாய்ந்ததாக அமைந்துள்ளது. இங்கு 1553-ஆம் ஆண்டு வெளியான நூல் உள்பட மிகப் பழைமையான நூல்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

1954-ஆம் ஆண்டு இந்திய அரசு, நூல்கள் மற்றும் நாளிதழ்கள் விநியோகச் சட்டத்தின்படி இந்தியாவிலுள்ள 4 தேசிய நூலகங்களான கொல்கத்தா, தில்லி, மும்பை மற்றும் சென்னை கன்னிமாரா பொது நூலகங்களுக்கு நூல் பதிப்பாளர்கள், நாளிதழ்கள் பதிப்பாளர்கள் அனைவரும் தங்கள் வெளியீடுகளை இலவசமாக ஒரு பிரதி அனுப்பி வைக்க வேண்டும்.

இந்த நூலகத்தில் 9.5 லட்சம் நூல்களும், 1.50 லட்சம் உறுப்பினர்களும் உள்ளனர். நாளொன்றுக்கு சராசரியாக 500-க்கும் மேற்பட்ட போட்டி தேர்வு மாணவர்கள் உள்பட 1,000-க்கும் மேற்பட்ட வாசகர்கள் வருகை தருகின்றனர்.

இந்த நிலையில் கன்னிமாரா நூலகத்தில் உள்ள சிறுவர் நூலகம், அறிவியல் மையம், குடிமைப்பணி பிரிவு, மின்தூக்கி வசதி, சொந்த நூல் படிக்கும் பிரிவு, மாநாட்டுக் கூடம் ஆகியவை ரூ.4.58 கோடியில் நவீனப்படுத்தப்பட்டு புதுப்பிக்கப்பட்டது.

இதை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் புதன்கிழமை திறந்து வைத்து பார்வையிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் பி.கே. சேகர்பாபு, அன்பில் மகேஸ், மக்களவை உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டப்பேரவை உறுப்பினர் இ.பரந்தாமன், பள்ளிக்கல்வித் துறை கூடுதல் தலைமைச் செயலர் பி.சந்தரமோகன், பொது நூலகத் துறை இயக்குநர் ச.ஜெயந்தி, சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழுத் தலைவர் மனுஷ்ய புத்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மருதமலை முருகன் கோயிலில் ரூ.94.54 லட்சம் காணிக்கை

**வடவள்ளி, ஜன.10:**

கோவை மருதமலை முருகன் கோயிலில் பக்தர்களால் தங்களது நேர்த்திக்கடனாக உண்டியலில் செலுத்தப் பட்ட காணிக்கைகள் எண்ணும் பணி நேற்று நடைபெற்றது. இதில் தொகையாக 94 லட்சத்து 54 ஆயிரத்து 69 ரூபாய் வசூல் ஆனது.

மருதமலை முருகன் கோயிலில் நேற்று கோயில் தக்கார் ஜெயக்குமார், துணை ஆணையர் மற்றும் செயல் அலுவலர் செந்தில்குமார், வனபத்ரகாளியம்மன் கோயில் உதவி ஆணைய மற்றும் செயல் அலுவலர் கைலாசமூர்த்தி, பேரூர் கோயில் சரக ஆய்வர் பவானி, கோயில் கண்காணிப்பாளர்கள், பணியாளர்கள் மற்றும் பக்தர்கள் முன்னிலையில் உண்டியல் திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. மேற்படி உண்டியல் திறப்பின் காணிக்கைகளாக தொகை 94 லட்சத்து 54 ஆயிரத்து 69 ரூபாய், 71 கிராம் 900 மில்லி கிராம் தங்கம், மூன்று கிலோ 400 கிராம் வெள்ளி, 12 கிலோ 750 கிராம் பித்தளை வரப்பெற்றது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## பொங்கல் பரிசுத் தொகை! டோக்கன் வாங்காதோர் என்ன செய்ய வேண்டும்?

நியாய விலைக் கடைகளிலும், வீடு வீடாகவந்தும் டோக்கன் விநியோகிக்கும் பணி நடந்து வந்தது. இந்த நிலையில், இன்று பரிசுத் தொகுப்பு வழங்குவது தொடங்கிவிட்டதால் டோக்கன் வழங்குவது முடிக்கப்பட்டுள்ளது.

ஒருவேளை இதுவரை டோக்கன் வாங்காதவர்கள், ஜன. 13ஆம் தேதி நியாயவிலைக் கடைகளுக்குச் சென்று பரிசுத் தொகுப்புடன் ரொக்கத்தையும் பெற்றுக் கொள்ளலாம் என்று கூறப்படுகிறது. எனினும், இதுவரை டோக்கன் பெறாதவர்கள், அந்தந்த நியாயவிலைக் கடைகளுக்குச் சென்று, டோக்கன் பெறாதவர்களுக்கு எப்போது பரிசுத் தொகுப்பு வழங்கப்படும் என்பதை கேட்டறியவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## 1.30 லட்சம் பேர் மட்டுமே படிவம் அளிப்பு

சென்னையில் வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலின்படி, 14 லட்சம் பேர் நீக்கப்பட்ட நிலையில், இதுவரை 1.30லட்சம்பேர்மட்டுமேபுதிதாக பெயர் சேர்க்க படிவம் அளித்துள்ளனர். சென்னை மாநகராட்சிக்கு உள்பட்ட 16 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் கடந்த நவம்பர் முதல் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. வரைவு வாக்காளர் பட்டியலில் 25.27 லட்சம் பேர் இடம்பெற்றுள்ளனர். இதிலும் சரியான விவரங்களை குறிப்பிடாத 1.25 லட்சம் பேருக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது. இதனிடையே, நீக்கப்பட்ட வாக்காளர்களில் இடம்பெயர்ந்தவர்கள், விடுபட்டவர்களிடம் புதிதாக பெயர் சேர்ப்பதற்கான படிவங்கள் பெறப்படுகின்றன. அதன்படி, சென்னை மாநகராட்சிக்குள்பட்ட 16 தொகுதிகளில் இதுவரை 1.60 லட்சம் பேர் மட்டுமே பெயர் சேர்ப்பதற்கான படிவத்தை (படிவம் 6) வழங்கியுள்ளனர்.

# ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் நவீன உடற்பயிற்சிக் கூடம் திறப்பு

**சென்னை, ஜன.10:**

சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;-

தமிழ்நாடு முதல்-அமைச்சரின் நல்வழிகாட்டுதலின்படி, (08.01.2026) இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, வி.க.நகர் மண்டலம், வார்டு-74, பெரம்பூர், ஏகாங்கிபுரம் 1வது தெருவில் மேயரின் 74ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் உடற்பயிற்சி உபகரணங்களுடன் கூடிய நவீன உடற்பயிற்சிக் கூடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இந்த உடற்பயிற்சிக் கூடமானது, 1,325 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. மேலும், சைக்கிள், டிரெட்மில் உள்ளிட்ட நவீன உடற்பயிற்சி உபகரணங்களுடன் ஆகிய உபகரணங்களுடன் இந்தக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, பெரம்பூர், குளக்கரை சாலையில் மூலதன நிதியில் ரூ.2.77 கோடி மதிப்பீட்டில் 7,542 சதுர அடி பரப்பளவில் தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் கட்டப்பவுள்ள புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்திற்கான பணியினையும், சோமசுந்தரம் நகரில் உள்ள திறந்தவெளி நிலத்தில் மாநகராட்சியின் சார்பில் ரூ.3.46 கோடி மதிப்பீட்டில் 14,558 சதுர அடி பரப்பளவில் புதிய பூங்கா அமைக்கும் பணியினையும் அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ‘2025ம் ஆண்டு ரவுடி, கொலைக் குற்றங்கள், வழிப்பறி திருட்டுகள் குறைந்தன’

**சென்னை, ஜன.10:**

சென்னை காவல்துறை அதிரடி நடவடிக்கையால் 2025ம் ஆண்டு ரவுடி கொலை குற்றங்கள், வழிப்பறி திருட்டுகள் குறைந்துள்ளன.

இது தொடர்பாக சென்னை காவல்துறை வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

தமிழகத்தின் தலைநகரும், இந்தியாவின் முக்கிய பெருநகரங்களில் ஒன்றான சென்னை பெருநகர் ஒரு கோடிக்கும் மேலாக மக்கள் தொகை கொண்ட நகரமாகும். சென்னை பெருநகர 12 காவல் மாவட்டங்கள் உள்ளடக்கிய பகுதிகளில் குற்றங்கள் நடவாவண்ணம் கண்காணித்து, உரிய காவல் துறை நடைமுறைகளை செயல்படுத்தி குற்றங்களை குறைப்பதற்கும் உரிய நடவடிக்கையுடன் நீதிமன்ற தண்டனை பெற்று தந்திடவும், காவல் அதிகாரிகள், ஆளிநர்கள், சட்டம் மற்றும் ஒழுங்கு, குற்றப்பிரிவு, மகளிர் காவல் துறையினர், போக்குவரத்து காவல் துறையினரின் முறையான ரோந்து பணி மற்றும் தொடர் கண்காணிப்பு மூலம் பொதுமக்கள் பாதுகாப்பை உறுதி செய்து வருகின்றனர். 2023ம் ஆண்டு 105 கொலை நிகழ்வுகளும் 2024ம் ஆண்டு 105 கொலை நிகழ்வுகளும் நடந்துள்ளன. 2025ம் ஆண்டு, 93 கொலை நிகழ்வு வழக்குகள் மட்டுமே தாக்கலாகியுள்ளது. புதிதாக துவங்கப்பட்ட OCU பிரிவின் ஒருங்கிணைந்த தொடர் நடவடிக்கைகளின் காரணமாக ரவுடி கொலைகள் நடவாமல் தடுக்கப்பட்டுள்ளது.

2023 மற்றும் 2024 ஆம் ஆண்டு குற்ற நிகழ்வுகளின் புள்ளி விவரங்களுடன் ஒப்பிடுகையில், 2025 ஆம் ஆண்டு சென்னை பெருநகர காவலின் திறமையான நடவடிக்கையின் காரணமாக பதிவான வழிப்பறி, திருட்டு, செல்போன் பறிப்பு சம்பவங்கள் மற்றும் வாகன திருட்டுகள் வெகுவாகக் குறைந்துள்ளன.

2025ம்ஆண்டு காவல் துறை உத்திகள் மற்றும் பிரத்யேக தொழில்முறை நடவடிக்கைகளால் 2025 ஆம் ஆண்டில் இது 1,092 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. சீரிய வாகனத் தணிக்கைகள், தகுந்த காவல் பணி செயலிகள் பயன்பாடு மூலம் சிறந்த வகையில் பாதுகாப்பை உறுதி செய்துள்ளன.

2025 ஆம் ஆண்டில், 540 போக்கிரிகள், 125 திருட்டு வழக்கு குற்றவாளிகள், 348 போதைப்பொருள் குற்றவாளிகள் உள்ளிட்ட 1,092 நபர்கள் குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

போக்சோ வழக்குகளில் குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை 2025ம் ஆண்டு 66 போக்சோ வழக்குகளில் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு நீதிமன்ற விசாரணை மூலம் கடும் தண்டனை பெற்று தரப்பட்டுள்ளது. இதே போல் மத்திய குற்றப்பிரிவில் தாக்கலான புகார்களின் பேரில் 661 வழக்குகள் பதிவு செய்யப்பட்டும், விசாரணையில் நிலுவையில் இருந்த 410 வழக்குகளின் விசாரணையை முடித்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சைபர் கிரைம் புகார் சார்ந்த வழக்குகளில் 177 எதிரிகள் கைது செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டும், இணைய வழி மூலமாக பல்வேறு சமூக வலைதள பதிவு மற்றும் தரவுகள் மூலம் பொதுமக்களை ஏமாற்றி பணம் பறிக்கும் சைபர் குற்றவாளிகளின் உரிய தொடர்புகளை கண்டறிந்து வங்கி கணக்குகள் முடக்கப்பட்டு, மொத்தம் ரூ.34,74,48,243/- மீட்கப்பட்டு, 1,389 பாதிக்கப்பட்ட நபர்களின் வங்கி கணக்கில் மீள செலுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை பெருநகர காவல் துறை, காவல் பணியோடு பொதுமக்கள் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு பல்வேறு அவசர அழைப்பு உதவி எண்கள், சமூக வலைதளங்கள் மூலம் புகார்களுக்கு உடனடி நடவடிக்கையாக காவல் துறையினர் செயலாற்றி வருகின்றனர்.




## வனவிலங்குகள் கணக்கெடுப்பு பணிகள்

**பொள்ளாச்சி, ஜன.10:**

ஆனைமலை புலிகள் காப்பகத்தில் குளிர்காலத்திற்கு பிந்தைய வனவிலங்கு கள் கணக்கெடுப்பு பணிகள் துவங்கப்பட்டது. ஆனைமலை புலிகள் காப்பகத்தில், பொள்ளாச்சி வனக்கோட்டத்தில் உள்ள பொள்ளாச்சி, வால்பாறை, மானாம்பள்ளி, உடுமலை ஆகிய நான்கு வனசரகத்தில் புதனன்று முதல் ஜன.13 வரையிலான ஏழு நாட்கள் வனவிலங்குகள் கணக்கெடுப்பு பணிகள் துவங்கி நடை பெற்று வருகிறது. இந்த கணக்கெடுப்பு பணியில் வனச்சரக அலுவலர், வன வர், வனக்காப்பாளர், வனக் காவலர், வேட்டை தடுப்பு காவலர், வன உயிரியலாளர் என ஆறு பேர் கொண்ட குழு ஈடுபட்டுள்ளது. இதுகுறித்து வனத்துறை ஊழியர்கள் கூறுகையில், முதல் மூன்று நாட்கள் புலி, கரடி, சிறுத்தை போன்ற விலங்குகளை அதன் காலடி தடம், எச்சம், நக கீறல்கள் போன்றவற்றை வைத்து நேர்முகமாகவும், மறைமுக மாகவும் கணக்கெடுக்கப் படும். அடுத்த மூன்று நாட் கள் மொத்தம் உள்ள நான்கு வனசரகத்திலும் ஊன் உண்ணிகள் பயணிக்கும் மற்றும் இறை விலங்குகள் வாழும் 62 நேர்கோட்டு பாதைகள் தேர்ந்தெடுக்கப் பட்டு மான், குரங்கு, தாவர உண்ணிகள் போன்றவை கணக்கெடுத்து, அவைகள் வாழ தகுதியான புல் போன்ற தாவரங்கள் போதிய அளவில் உள்ளதா உள்ளிட்டவை கண்டறியப்பட்டு பதிவு செய் யப்படும். ஏழாவது நாள் பிணம்தின்னி கழுகுகள் உள்ளனவா போன்ற ஆய்வு கள் மேற்கொள்ளப்பட்டு, அதன் அறிக்கையை வனத் துறை உயர் அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்படும், என்ற னர்.

## மருத்துவ மாணவி உயிரிழப்பு

**சேலம், ஜன.10:**

சிவராஜ் சித்தா மருத்துவக்கல்லூரி மாணவி சந்தேகத்திற் கிடமான முறையில் உயிரிழந்த சம்பவம் குறித்து காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். சேலம் மாவட்டம், சித்தர் கோவில் மெயின் ரோடு பகுதியில் செயல்படும் சிவராஜ் சித்த மருத்துவக்கல்லூரி யில், திருநெல்வேலி மாவட்டத்தை சேர்ந்த மாணவி ஒருவர், கல்லூரி அருகில் வீடு எடுத்து தனது தோழியுடன் இறுதி ஆண்டு படித்து வந்தார். இந்நிலையில், இம்மாணவி திரு மணமான நபரை காதலித்து வந்ததாகவும், இப்பிரச்சனை சம்பந்தமாக மாணவியின் தந்தை செவ்வாயன்று நேரில் சந்தித்து பேசியதாக கூறப்படுகிறது. இதன்பின் மாணவி சந் தேகத்திற்கிடமான வகையில் இறந்துள்ளார். இதைப்பார்த்த அவருடைய தோழி அதிர்ச்சியடைந்து, இரும்பாலை காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தார். மாணவியின் தந்தை பேசிவிட்டு சென்ற நிலையில், அவர் தற்கொலைக்கு முயன் றாரா? அல்லது ஆணவக்கொலை செய்யப்பட்டுள்ளதா? என காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மாணவியின் உடல் சேலம் அரசு மோகன் குமார மங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு உடற்கூறு ஆய்விற்காக அனுப்பப்பட்டது.

# மூட்டு வலியை வேரோடு அழிக்கும் ‘ஆண்டி-ஏஜிங்’ ஊசி! மருத்துவ உலகில் மாபெரும் புரட்சி!

இன்றைய நவீன உலகில் வயது முதிர்ந்தவர்கள் மட்டுமின்றி, இளைஞர்களையும் அதிகம் பாதிக்கும் ஒரு முக்கிய பிரச்சனை மூட்டு வலி. மூட்டுகளில் உள்ள குருத்தெலும்புகள் (Cartilage) தேய்மானம் அடைவதே இதற்கு முதன்மைக் காரணம். ஒருமுறை தேய்ந்துபோன குருத்தெலும்பை மீண்டும் வளர்ப்பது என்பது மருத்துவ உலகில் ஒரு பெரும் சவாலாகவே இருந்து வந்தது. ஆனால், அமெரிக்காவின் ஸ்க்ரிப்ஸ் ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானிகள் தற்போது ஒரு புரட்சிகரமான தீர்வைக் கண்டறிந்துள்ளனர்.

சமீபத்தில் வெளியான ஆய்வின்படி, விஞ்ஞானிகள் நமது உடலில் உள்ள ‘14-3-3 zeta’ என்ற குறிப்பிட்ட புரதத்தை மையமாக வைத்து இந்த ஆய்வை மேற்கொண்டுள்ளனர். மனித உடலில் இயற்கையாகவே உள்ள இந்தப் புரதம், செல்கள் முதுமையடைவதைத் தடுக்கும் ஆற்றல் கொண்டது.

ஆய்வாளர்கள் இந்த புரதத்தை நேரடியாக மூட்டுப் பகுதிகளுக்குள் செலுத்தியபோது, அது தேய்ந்துபோன குருத்தெலும்புகளை மீண்டும் வளரச் செய்வதையும், மேற்கொண்டு தேய்மானம் அடையாமல் பாதுகாப்பதையும் உறுதி செய்துள்ளனர். இது மருத்துவ உலகில் ஒரு புரட்சியாகக் கருதப்படுகிறது.



### இது எப்படி வேலை செய்கிறது?

நமது மூட்டுகளில் உள்ள ‘சோண்ட்ரோசைட்டுகள்’ (Chondrocytes) எனப்படும் செல்கள் தான் குருத்தெலும்புகளைப் பராமரிக்கின்றன. வயது கூடும்போது அல்லது காயம் ஏற்படும்போது, இந்தப் புரதத்தின் அளவு குறைந்து, செல்கள் சிதைவடையத் தொடங்குகின்றன.

விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ள இந்த புதிய ஊசி மருந்து, பாதிக்கப்பட்ட மூட்டுப் பகுதிக்குச் சென்றவுடன், அங்குள்ள செல்களுக்குப் புத்துயிர் அளிக்கிறது. இது வீக்கத்தைக் குறைப்பதோடு மட்டுமல்லாமல், புதிய குருத்தெலும்பு திசுக்கள் உருவாவதற்கான சமிக்ஞைகளை செல்களுக்கு வழங்குகிறது. எலிகளுக்கு இந்த ஊசி செலுத்தப்பட்டு, நடத்தப்பட்ட சோதனையில், சில வாரங்களிலேயே தேய்மானம் அடைந்த மூட்டுகள் குணமாகத் தொடங்கியது கண்டறியப்பட்டது.

ஸ்டெம் செல்கள் தேவையில்லை: மற்ற சிகிச்சைகள் ‘ஸ்டெம் செல்களை’ அடிப்படையாகக் கொண்டவை. ஆனால் இந்த புதிய ஊசி மருந்து, ஏற்கனவே மூட்டில் உள்ள பழைய குருத்தெலும்பு செல்களை இளமையாக ‘மறுசீரமைப்பு’ செய்கிறது. இது ஒரு மிகப்பெரிய அறிவியல் மாற்றமாகும்.

### ‘ஆண்டி-ஏஜிங்’ ஊசியின் சிறப்புகள்:

1. பிற மருத்துவ ஆதாரங்களின்படி, தற்போது சந்தையில் உள்ள மூட்டு வலி மருந்துகள் வலியைக் குறைக்க மட்டுமே உதவுகின்றன. ஆனால், இந்த ‘ஆண்டி-ஏஜிங்’ ஊசி மூட்டு வலியை அதன் வேரிலிருந்து சரிசெய்ய முயல்கிறது.

2. பொதுவாக மூட்டுத் தேய்மானம் அதிகமானால் ‘முழங்கால் மாற்று அறுவை சிகிச்சை’ ஒன்றே தீர்வாக உள்ளது. இந்த ஊசி மருந்து பயன்பாட்டுக்கு வரும்போது, லட்சக்கணக்கான மக்கள் அறுவை சிகிச்சை இல்லாமல் குணமடைய வாய்ப்புள்ளது.

3. விளையாட்டு வீரர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக இருக்கும். விளையாட்டுப் போட்டிகளின் போது ஏற்படும் தசை மற்றும் குருத்தெலும்பு கிழிவுகளுக்கு இது ஒரு விரைவான தீர்வாக அமையும்.

4. இது வெறும் குருத்தெலும்பை வளர்ப்பதுடன் நின்றுவிடாமல், மூட்டுப் பகுதியில் உள்ள செல்கள் முதுமையடைவதைத் தடுத்து, நீண்ட கால ஆரோக்கியத்தையும் உறுதி செய்கிறது.

இந்த ஆய்வு தற்போது விலங்குகள் மீதான சோதனையில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது. அடுத்தகட்டமாக மனிதர்களிடம் மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

“இந்தக் கண்டுபிடிப்பு வெறும்ஒருமருந்துமட்டுமல்ல, இது இயற்கைக்கும் அறிவியலுக்கும் இடையிலான ஒருபாலம். நமது உடலின் சுய-குணப்படுத்தும் ஆற்றலை ஒரு புரதத்தின் மூலம் நாம் தூண்டுகிறோம்,” என ஆய்வின் முன்னணி விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் புரத ஊசி மனிதர்களுக்கு செலுத்தப்பட்டு, அறுவைசிகிச்சை இன்றி மூட்டுவலியை குணமாக்குமா என பொறுத்திருந்து பார்ப்போம்.

# பாலீஸ் வாசனை

மதன் வழக்கம் போல் அந்த இடத்தில் தன் பைக்கை நிறுத்தி, சக்கரம் பொருத்தப்பட்ட ஒரு பழைய பலகையில் அமர்ந்தபடி 'பாலீஸ்... பாலீஸ்...” எனக் கத்திக் கொண்டிருக்கும் இளைஞனிடம் தன் ஷூவுக்குப் பாலீஸ் போடுவான்.

அவனுடன் வந்த சிவா கேட்டான். "இது வீண் செலவு... பேசாம பாலீஸ் டப்பாவும், பிரஷ்ஷும் வாங்கி நீயே தேய்ச்சுக்கலாம்!"

மதன் சிரித்தபடி கேட்டான். ”நீ அந்த இளைஞனைக் கூர்ந்து பார்த்தியா?” சிவா அப்போதுதான் பார்த்தான். இடுப்பிற்குக் கீழே இரண்டு கால்களுமே சூப்பை.

“இவன் இதைக் காட்டிப் பிச்சை எடுக்கலாம்!... நிறைய பிச்சை விழும்! ஆனா... அவன் அப்படிச் செய்யலை... உழைக்க நினைக்கிறான்... அந்த எண்ணத்துக்காகத்தான் நான் தினமும் இவன்கிட்ட பாலீஸ் போடுறேன்.” அன்று முதல் சிவாவும் அவனிடமே பாலீஸ் போட ஆரம்பித்தான். ஒரு நாள். அந்த இளைஞன் அங்கு இல்லை. மறுநாளும் அதேபோல். “ஏதாவது ஆயிருக்கும்,” சிவா சொன்னான்.

மூன்று மாதங்களுக்குப் பிறகு, மதன் ஒரு புதிய கம்பெனிக்கு இன்டர்வ்யூக்கு சென்றான்.

ரிசெப்ஷன் கவுண்டரில் ஒரு இளைஞன். சுத்தமான சட்டை. டை, கண்ணியமான முகம்.

அவன் புன்னகையோடு கேட்டான். "சார் நல்லாயிருக்கீங்களா?” மதன் விழிக்க, கவுண்டருக்குப் பின்னிருந்து வெளியே வந்தான் அந்த இளைஞன், செயற்கைக் கால்களுடன். அதே பாலீஸ் இளைஞன். மதன் வார்த்தை இழந்தான். “என்ன சார் சர்ப்ரைஸா இருக்கா?..... ஒரு NGO ஸ்பான்சர்ஷிப் பண்ணினாரு...இந்தக் கால்களைப் பெற்றேன்!.... அதுக்கப்புறம் ஒரு கோர்ஸ் படிச்சேன்... இங்கே ரிசப்ஷனிஸ்ட் வேலை கிடைச்சுது.”

சிவா மெதுவாகக் கேட்டான். “அப்ப... நீ ஏன் அப்போ பாலீஸ் போட்டுக் கொண்டிருந்தே?”

இளைஞன் சிரித்தான். "பிச்சை கேட்டா உதவி கிடைக்கும். ஆனா உழைப்பை காட்டினா வாய்ப்பு கிடைக்கும் அல்லவா?.” மதன் தன் ஷூவை பார்த்தான். அதன் பாலீஸ் வாசனையில் ஒரு முன்னேற்றத்தின் சாட்சியும் இருந்தது.



-முகில் தினகரன்
கோயமுத்தூர்.



# லட்சுமி பாட்டி விடியற்காலை நேரம்

ஜெயா வீட்டு வாசலில் கோலம் போட்டு வண்ணப்பொடி தூவிக் கொண்டிருந்தாள் .பால் கனியில் இருந்து லட்சுமி பாட்டி கோலத்தை ரசித்து பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் தான் அந்த வீட்டுக்கு சொந்தக்காரி. ஜெயா அந்த வீட்டின் கீழ் பகுதியில் வாடகைக்கு இருப்பவள். பாட்டி கோலம் எப்படி இருக்கு? என்று கேட்டாள் ஜெயா. பேஷ், பேஷ் ரொம்ப நல்லா இருக்குது. கோலத்தின் நடுவில் சாணி வைத்து அதன் மேல் பூசணி பூவை வை என்றால் பாட்டி. ஜெயாவும் அவ்வாறே செய்தால் கோலம் இப்பதான் பார்க்க சூப்பரா இருக்கு என்று சொல்லிக் கொண்டே பாட்டி உள்ளே சென்றாள் .பாட்டியின் பேரன் ராஜேஷ் தனியார் கம்பெனி ஒன்றில் வேலை செய்பவன் .அவன் நைட் ஷிப்ட் முடித்துவிட்டு பைக்கில் வீட்டிற்கு திரும்ப வந்தான் .நேராக அந்தக் கோலத்தின் மீது வண்டியை நிறுத்தினான். இறங்கும்போது ஷூ காலினால் கோலத்தை மிதித்தான். கோலம் கலைந்து விட்டது .அதை பற்றி கொஞ்சமும் கவலைப்படாமல் விறுவிறு என்று மாடிப்படி ஏறி உள்ளே வந்து படுத்து தூங்க ஆரம்பித்து விட்டான். ஜெயா கேட்டில் மாட்டி இருந்த பிளாஸ்டிக் பையில் உள்ள பால் பாக்கெட்டை எடுப்பதற்காக வெளியே வந்தாள். அப்பொழுது அழகான கோலம் கலைந்து இருப்பதை பார்த்தாள். பூசணிப்பூவும் பைக்கின் சக்கரத்தில் நசுங்கி இருப்பதை கண்டாள்.அவளுக்கு மனது ரொம்ப வலிக்க ஆரம்பித்தது. வேதனையுடன் எவ்வளவு நேரம் கஷ்டப்பட்டு அழகாக இந்த கோலத்தை போட்டேன் .10 நிமிடத்தில் இப்படி கலைந்து விட்டதே! இது ராஜேஷின் வேலையாகத்தான் இருக்கும் .என்ன செய்வது ?ஹவுஸ் ஓனரோட பேரனாயிற்று எப்படி கேக்க முடியும்? ஹூ ம்... என்ன செய்ய முடியும்? என்று முணுமுணு படியே பால் பாக்கெட்டை எடுத்துக் கொண்டு வீட்டின் உள்ளே சென்றாள். சற்று நேரம் கழித்து லட்சுமி பாட்டி பால் கனியில் வேடிக்கை பார்ப்பதற்காக வந்து நின்றாள். அப்பொழுது கோலத்தின் மேல் பைக் நிற்பதை பார்த்துவிட்டு ராஜேஷ் ,..வண்டியை தள்ளி நிறுத்தக் கூடாதா? பார்... ஜெயா போட்ட அழகான கோலம் கலைந்து விட்டது என்றாள்.போ, பாட்டி இது ஒரு பெரிய விஷயம் என்று சத்தம் போடுற, நான் இல்லைனா வேறு ஒருவர் நடந்து போகும்போது இந்த கோலம் கலையத்தான் போகிறது, இல்லைனா சாயங்காலமா நீங்கள் பெருக்கி தள்ளி விடத்தான் போகிறீர்கள் இதற்காக என்னை திட்டுகிறாயே; எனக்கு தூக்கம் வருகிறது, என்னை தூங்க விடு என்று பதில் சொல்லிவிட்டு போர்வையை இழுத்து போர்த்திக் கொண்டான். நீ செய்தது தவறு. அவளிடம் சாரி ...கேள் என்றாள் பாட்டி. அவன் அதை காதில் வாங்கிக் கொள்ளவில்லை . கொர்.... கொர்...என்ற சத்தம் தான் வந்தது. இந்த காலத்து பசங்களே இப்படித்தான் ஹூ ம்... காலை 10 மணி ராஜேஷ் எழுந்திருடா குளித்துவிட்டு வா சாப்பிடலாம் என்று எழுப்பினாள் பாட்டி. இதோ வருகிறேன் பாட்டி என்றான் ராஜேஷ் .அப்பொழுது தெருவில் குப்பை வண்டியின் பாட்டு சத்தம் ஒலித்தது .டேய் ராஜேஷ் எழுந்திருடா இந்த குப்பையை கொண்டு போய் கீழே உள்ள துப்புரவாளரிடம் கொடுத்துவிட்டு வா. எனக்கு முட்டி வலிக்கிறது .என்னால் படி ஏறி , இறங்கி போக முடியவில்லைஎன்றாள் பாட்டி .ராஜேஷ் எரிச்சலுடன் எழுந்தான். முனகிக்கொண்டே அந்த குப்பை இருந்த பிளாஸ்டிக் பையை பால்கனியிலிருந்து வண்டியின் மேல் எறிந்தான் .பிளாஸ்டிக் பை கிழிந்தது குப்பை பாதி வண்டியிலும் பாதி கீழேயும் கொட்டியது. துப்புரவாளர் ஏம்பா கீழே வந்து போட முடியாதா ?சின்ன வயசு பையன் தானே நீ , கொஞ்சம் கூட மரியாதை தெரியல உனக்கு என்றார். ராஜேஷ் உடனே துப்புறவாளர் தானே நீங்கள் கீழே உள்ள குப்பையையும் பெருக்கி சேர்த்து வண்டியில் போட்டு எடுத்துச் செல்லுங்கள் என்றான். துப்புரவாளர் என்றால் நீ மரியாதை இல்லாமல் இப்படி நடந்து கொள்வாயா? எந்த தொழிலையும் கேவலப்படுத்த கூடாது. நான் தினமும் வரவில்லை என்றால் தெருவே நாறிவிடும் ஜாக்கிரதை என்று கத்தி விட்டு சென்று விட்டார் .அதைக் கேட்டுக் கொண்டே வந்த பாட்டி ராஜேஷ் நீ செய்வது சரியில்லை யாரையும் தரக்குறைவாக பேசக்கூடாது. அவரிடம் மன்னிப்பு கேள் என்றாள் போ பாட்டி உனக்கு வேற வேலை இல்ல என்றான்.உன் குணத்தை மாற்றிக் கொண்டால் உனக்கு நல்லது இல்லை என்றால் பின்னாடி நீதான் கஷ்டப்பட போற என்றாள் பாட்டி. மாலை 5 மணி ராஜேஷ் புது பேண்ட் ,சர்ட் போட்டுக் கொண்டு டிப் டாப்பாக வேலைக்கு செல்ல கிளம்பினான். கீழே வந்து பைக்கில் அமர்ந்து பைக்கை ஸ்டார்ட் செய்தான். அங்கிருந்த ஜன்னல் வழியாக திடீரென்று காபி கலந்த நீர் ராஜேஷ் சட்டை மீது வந்து பட்டது. சட்டை நனைந்தது அவனுக்கு கோபம் வந்துவிட்டது யார் இந்த தண்ணியை என் மேல் ஊற்றியது என்று கத்தினான். நான் வேறு அவசரமாக ஆபீசுக்கு கிளம்பி கிட்டு இருக்கேன் என்ன பண்றது,? என்று சுற்று முற்று பார்த்தான். ஜன்னலில் இருந்து ஜெயா மெல்ல எட்டிப் பார்த்தாள் .ஐயோ! இப்படி ஆயிடுச்சே? என்றாள் .அவள் வெளியில் வந்து நீங்க இருக்கிறது தெரியாம கொட்டிவிட்டேன் என்றாள்.அதற்கு ஒரு சாரி கூட சொல்லத் தெரியாதா உனக்கு, திமிரு புடிச்சவ என்றான் ராஜேஷ். உடனே ஜெயாவிற்கு கோபம் வந்துவிட்டது நான் தெரியாமல் செய்துவிட்டேன் என்று சொல்கிறேன் ,ஆனால் நீங்கள் காலையில் வேண்டுமென்றே பைக்கை கோலத்தின் மீது நிறுத்தி கோலத்தை கலைத்தீர்களே அதற்கு என்ன செய்வது ?பாட்டி அவ்வளவு தூரம் சொல்லியும் நீங்க ஒரு சாரி கேட்டீங்களா? என்றாள் ஜெயா. இருவரும் சண்டை போடுவதை கேட்டுக்கொண்டே வந்த லட்சுமி பாட்டி ஜெயாவை சமாதானப்படுத்தினாள். உடனே ராஜேஷ் என்ன பாட்டி ...எனக்கு சப்போர்ட் பண்ண மாட்டேங்குற, அவங்களை சமாதானப்படுத்துறீங்க என்றான். பாட்டி அ தற்கு " முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" நீயே யோசித்துப் பார் என்று சொல்லிவிட்டு ,மேலே வந்து வேறு சட்டையை மாற்றிக் கொண்டு ஆபீஸ்க்கு போ என்றாள்.





எம்.எல்.பிரபா
ஆதம்பாக்கம், சென்னை.

# வாழ்ந்தே தீருவோம்

# நகரும் நிழல்கள்

அத்தியாயம் -36



■முனைவர்
க. அன்பழகன்
(ஹரணி)
கரந்தை.தஞ்சாவூர்

## கூட்டுப் பறவைகள்

அந்த வீட்டிற்கு வள்ளியம்மை, மாதவன், சிவராமன் வந்து இரண்டாடுகள் கடந்துபோயின. மாதவன் சற்றே இளைத்திருந்தார். ஹோட்டலுக்குப் போவதில்லை. போக முடியவில்லை. எப்போதாவது கூப்பிட்டால் சற்று நேரம் போய் உட்கார்ந்துவிட்டு வருவார்.வயது எழுபதைக் கடந்துபோய்க்கொண்டிருந்தது. அடிக்கடி பிள்ளைகள் நினைவு மாதவனுக்கு வந்தது. தனிமையில் யாருமில்லாச் சூழலில் நினைத்து அழுவார். அப்புறம் கண்களைத் துடைத்துக்கொண்டு வந்துவிடுவார்.

மாதவன் நினைத்தபடி தமிழ்நாடு அரசுத் தேர்வில் நிறைய மதிப்பெண்கள் எடுத்து வள்ளியம்மை தேர்ச்சிபெற்றிருந்தாள். மாதவன் தேர்ந்து கொடுத்த துறையில் நேர்முகத்தேர்வு முடிந்து பணியில் சேர்ந்திருந்தாள். அன்று மாதவன் மடியில் விழுந்து புரண்டு அழுதாள்.

அப்பா.. அப்பா.. என்று அதற்குமேல் பேசமுடியாமல் அழுதாள்.

மாதவனுக்கும் அழுகை வந்தது. ஏண்டாம்மா அழறே.. உன்னோட கஷ்டத்துக்கெல்லாம் விடிவுகாலம் வந்துடுச்சி.. இந்த சென்னையில நீயும் தனிச்சு.. உன் கால்ல நிக்கப்போறேன்.. இனிமே எதுக்கும் கவலையில்லை.. நீ ஜெயிச்சுட்டே..எனக்கும் மனசு நிறைவா இருக்கு.. நான் நினைச்சபடி வந்துட்டே,.,,

மாதவன் மகிழ்ச்சயோடு வள்ளியம்மையை ஆசிர்வாதம் செய்தார். கல்வித்துறையில் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்திருந்தாள். சிவராமனுக்கு எதிர்பார்த்த மதிப்பெண் வரவில்லை. சிவராமன் நோய் குறித்து பல மருத்துவ சிகிச்சைக்குப் போய் வந்தார்கள். மாதவன்தான் அழைத்துப்போனார். இப்போதுள்ள நிலைமையை ஒன்றும் செய்யமுடியாது. ஆனால் இனிமேல் வராமல் கட்டுப்படுத்தியாகிவிட்டது என்று சொன்னார்கள்.,

மாதவன் மருத்துவரிடம் கேட்டார்.. இவனுக்குக் கல்யாணம் செய்தால் அது குழந்தையைப் பாதிக்குமா டாக்டர்..

நிச்சயமா இல்லை. தாராளமாக் கல்யாணம் செஞ்சுக்கலாம்.

மாதவனுக்கு சற்றே மனநிறைவு.

அவர் ஒரு முடிவு எடுத்திருந்தார்.

அப்பா.. நான் வேலைக்கு கிளம்புறேன் என்று வள்ளியம்மை கிளம்பிக்கொண்டிருந்தாள்.

வள்ளியம்மை.. ஒரு நிமிஷம் உன்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்.. என்றார். சொல்லுங்கப்பா.. என்றாள். சாயங்காலம் வா.. பேசலாம்.. என்றார். சரிப்பா.. என்றாள். சிவராமா.. கொண்டுபோய் விட்டுட்டு வா.. என்றார். வேணாம்பா.. அவரு இருக்கட்டும்.. எனக்கு வழி தெரியும்..

மாலையில் சீக்கிரமே வந்துவிட்டிருந்தாள் வள்ளியம்மை.,

அன்றிரவு சாப்பிட்டதும் மாதவன் சொன்னார். வள்ளியம்மை சிவராமன் உக்காருங்க.. என்று உட்காரச்சொன்னார். உட்கார்ந்தார்கள்.

உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்.. மனம்விட்டுப் பேசணும்.. என்று ஆரம்பித்தார்.

சொல்லுங்கப்பா என்று வள்ளியம்மை அவர் முகத்தைப் பார்த்தாள்.

கலாவதி குழந்தைகள் பற்றி சொன்னார்.. குழந்தைகள் தறிகெட்டுப்போக கலாவதி காரணம் என்பதை வருத்தத்தோடு சொன்னார்.. சொல்லிவிட்டு அழுதார்.

ஏம்பா..அழறீங்க? அழாதீங்கப்பா .. என்றாள் வள்ளியம்மை. என்னங்க ஐயா.. அழாதீங்க என்றான் சிவராமன்.

எங்கேயோ பொறந்தோம்.. நாம மூணுபேரும் இங்கே ஒரு குடும்பமா இருக்கோம். இதுக்கு என்ன காரணம்னு தெரியல.. எனக்கு ஒரு குடும்பம் மனைவி புள்ளங்கன்னு இருந்தும் என்னால வாழ முடியல.. அதுக்காக வெளியே வந்துட்டேன். அவங்கள விடவும்இல்ல.. இன்னிவரைக்கும் பாதுகாத்துக்கிட்டிருக்கேன்.

என்னோட உழைப்புல ஒரு காசுகூட உங்களுக்குக் கொடுக்கமுடியல.. ரோட்டுல மயங்கிக் கிடந்தவனை சிவராமன்தான் காப்பாத்துனான்.. அவன் வீட்டுல எனக்கு ஒரு இடம் கொடுத்திருக்கான்.. ஆனால் அவனோட வாழ்க்கை இப்படி கேள்விக்குறியா இருக்கு? அதையும் சரிப்பண்ணிடணும்.. அதுக்குள்ள நான் சாகக்கூடாது..

என்னப்பா நீங்க? என்னன்னவோ பேசறீங்க?

ஆமாம் வள்ளியம்மை உன்னோட கதை ரொம்பப் பரிதாபமானது. நம்பிக்கையிழந்த உனக்குத் தகப்பனா இருந்து ஒரு நிலைப்பாட்டை உருவாக்கிட்டேன். நிரந்தரமா ஒரு வேலை இருக்கு. பொருளாதாரமும் இருக்கு. கவலையில்லை. சிவராமனை நினைச்சாத்தான் கவலையா இருக்கு. உன்னைப்போலவே அவனையும் ஆளாக்க நினைச்சேன் நடக்கலே.. என்று நிறுத்தி இருவரையும் பார்த்தார்.

இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

வள்ளியம்மை சிவராமன் நான் ஒண்ணு கேட்டா செய்வீங்களா? என்றார்.

கண்டிப்பா மறுபேச்சு கேட்காமச் செய்வோம் என்றார்கள்.

அப்ப ரெண்டுபேரும் கல்யாணம் பண்ணிக்கங்க.. என்றார்.

வள்ளியம்மை சிவராமன் இதை எதிர்பார்க்கவில்லை., (வாழ்வோம்)





(வாழ்வோம்)

# இறைவனின் சித்தம் என்ன என்று நாம் எப்படித் தெரிந்து கொள்வது?

நமக்குத் தெரிஞ்ச ஒரு ஆசாமி, சரியான எடக்குமடக்குப் பேர் வழி. நாலு தெரு தள்ளி, ஒரு பூங்கா; அங்கேதான் நம்ம எடக்குமடக்கு தினமும் வாக்கிங் போவது வழக்கம்.

பூங்காவுக்கு அருகிலேயே, சிவ ஆலயம் ஒன்று பாழடைந்து கிடந்தது. விளக்கு ஏற்றக்கூட யாரும் வருவதில்லை. கோவில் குருக்கள் ஒருத்தர், தினமும் கொஞ்சம் நேரம் கோயிலைத் திறந்து வைப்பார்.



எடக்குமடக்கின் மனைவி, ”பூங்காவைச் சுத்தும்போது, அப்படியே அந்தக் கோயிலையும்தான் ரெண்டு சுத்து சுத்திட்டு வாங்களேன்” என்பாள். உடனே எடக்கு மடக்கு, ”அந்த சிவனுக்கு பவரே கிடையாது. பவர் இருந்தால், தன் கோயிலைப் பாழடைய விட்டிருப்பாரா?” என்று மடக்குவார்.

ஒருநாள் காலையில்... வழக்கமாக பெரிய டம்ளரில் காபி எடுத்து வரும் எ-ம மனைவி, மிகச் சிறிய டம்ளரைக் கொண்டு வந்தாள். ”ஏன்... ஸ்பூன்ல கொண்டு வரது



தானே?!” என்று எரிச்சலானார் எடக்கு.

”இது காபி இல்லை; நல்லெண்ணெய்... வாய்ல புண்ணுன்னு சொன்னீங்களே... அதான்!

நல்லெண்ணெயை அரை மணி நேரம் வாயிலே வெச்சிருந்து, பிறகு கொப்பளிச்சா, வாய் புண் குணமாகும்னு பத்திரிகையில படிச்சேன். நீங்க வாக்கிங் போகும் போது வாயில நல்லெண்ணெயை ஊத்திக்குங்க. வீட்டுக்கு வந்ததும் கொப்பளிச்சிடுங்க” என்று புரோகிராம் போட்டுக் கொடுத்தாள் மனைவி.

ஆனால், சோதனையாக, எடக்கு வாயில் எண்ணெயை ஊற்றிக்கொண்டு தெருவில் இறங்கிய ஐந்தாவது நிமிஷம், அவருடைய ஆபீசர் எதிரே வந்தார். ”அடடே! உன் வீட்டுக்குத்தான் வர்றேன்!” என்று ஸ்கூட்டரை நிறுத்தினார். வேறு வழியில்லாமல், எண்ணெயைத் துப்பிவிட்டு அவரிடம் பேசினார் எடக்கு. வீட்டுக்குப் போனதும், நடந்ததை மனைவியிடம் சொன்னார்.

அவள் விடுவாளா! மறுநாள், எக்ஸ்ட்ராவாக ஒரு சின்ன எவர் சில்வர் தூக்கில் எண்ணெய் ஊற்றித் தந்தாள். ”வாக்கிங் போகும்போது துப்பும்படி ஆயிட்டா, இதை வாயில் ஊத்திக்குங்க” என்றாள்.

தினமும் அவர் இப்படி எவர்சில்வர் தூக்கோடு நடந்து போவதை, அடுத்த தெருவில் உள்ள ஒரு பெண்மணி கவனித்துவிட்டு, ”தினமும் எண்ணெய் கொண்டு போறீங்களே, கோயிலுக்கா?” என்று கேட்டாள்.

அவளிடம், தான் எண்ணெயை வாயில் ஊற்றிக் கொப்பளிப்பதை யெல்லாம் விளக்க விரும்பாமல், 'ஆமாம்' என்று தலையாட்டி வைத்தார் நம்மாள்.

மறுநாள்... அந்தப் பெண்மணியின் கையில் ஒரு சொம்பு எண்ணெய். ”தயவுசெஞ்சு இதையும் சேர்த்துக்கங்க” என்று எண்ணெயை அவரது எவர்சில்வர் தூக்கில் ஊற்றினாள். இதே போலவே அடுத்தடுத்த நாளில் நிறையப் பேர் காத்திருந்து, எடக்குமடக்கின் தூக்கில் தங்கள் பங்காகக் கொஞ்சம் எண்ணெய் ஊற்றினார்கள்.

கோயிலுக்கு எண்ணெய் ஊற்றுவதை வேண்டாம் என்று சொல்ல மனமின்றி, அவரும் தட்டாமல் வாங்கிக் கோயிலுக்கு அந்த எண்ணெயைக் கொடுத்து வந்தார்.

நிறைய எண்ணெய் கிடைத்ததால், தினமும் கோயிலில் ஏராளமாக விளக்கேற்றி வைத்தார் குருக்கள். அதிகப்படியான எண்ணெயை விற்றுப் பிரசாதம் செய்து, வருபவர்களுக்கு விநியோகித்தார்.

பூங்கா கோயில் மாலை வேளையில் தீப ஒளியில் பிரகாசிக்க ஆரம்பித்தது.....

காணிக்கைகள் ஏராளமாக வந்தன. கொஞ்ச நாளில் கோயில் புதுப்பிக்கப்பட்டுப் கும்பாபிஷேகமே நடந்தது.

எடக்குமடக்குவிடம் அவர் மனைவி சொன்னாள்... ”அந்த சிவனுக்கு பவர் இல்லை; தன் கோயிலையே அவரால் கட்டிக்க முடியலே'னு சொன்னீங்களே... இப்ப பார்த்தீங்களா, உங்களைக்கொண்டே அதை நிறைவேத்திக்கிட்டார்...

எதை, எப்படி, எப்போது யாருக்குச் செய்ய வேண்டும் என்பதை தெய்வத்துக்கு நாம் சொல்லித்தர வேண்டியதில்லை. தனக்கே என்றாலும், அவருக்குத் தெரியும். யார் யாரிடமிருந்து எதை நடத்திக்கொள்ள வேண்டும் என்று,இறைவனிடத்தில் செல்வ செருக்கு, பொறாமை, ஆலயத்தில் உயர்ந்தவன், தாழ்ந்தவன் பாகுபாடு நம் கர்மா பாவத்தை கூட்டி இறைவனிடமிருந்து நம்மை தூரமாக்கிடும். அவனருளின்றி எதுவும் நடக்காது.

ஏனென்றால் அனைத்து உலகத்துக்கும் தந்தை அவர்தானே...



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி.

# தினம் ஒரு தலைவர்கள்

# சரத் சந்திர போஸ் வரலாறு

சரத் சந்திர போஸ் செப்டம்பர் 6, 1889 அன்று ஒடிசாவின் கட்டாக்கில் ஜானகிநாத் போஸ் (தந்தை) மற்றும் பிரபாபதி தேவிக்கு பிறந்தார்.

இந்தக் குடும்பம் முதலில் மேற்கு வங்காளத்தின் தெற்கு 24 பர்கானாஸ் பகுதியில் உள்ள கோடாலியாவை (இப்போது சுபாஷ்கிராம்) பூர்வீகமாகக் கொண்டது . அவர் குலின் கயஸ்தா குடும்பத்தைச் சேர்ந்தவர் . அவரது தந்தை மஹிநகர் ( தெற்கு 24 பர்கானாஸ் ) போஸ் வம்சாவளியைச் சேர்ந்தவர், அதே நேரத்தில் அவரது தாயார் பிரபாபதி தேவி வடக்கு கொல்கத்தாவில் உள்ள ஹட்கோலாவின் பிரபலமான தத்தா குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் பதினான்கு குழந்தைகள், ஆறு மகள்கள் மற்றும் எட்டு மகன்களைப் பெற்றெடுத்தார், அவர்களில் இடதுசாரித் தலைவர் சரத் சந்திர போஸ், நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் மற்றும் புகழ்பெற்ற இருதயநோய் நிபுணர் டாக்டர் சுனில் சந்திர போஸ் ஆகியோர் அடங்குவர்.

சரத்துக்கு இரண்டு மூத்த சகோதரிகள் இருந்தனர். அவர்கள் பிரமிளாபாலா மித்ரா மற்றும் சரலாபாலா டே. அவருக்கு சதீஷ் சந்திர போஸ் (1887 - 1948) என்ற மூத்த சகோதரர் இருந்தார். அவருக்கு ஆறு இளைய சகோதரர்கள் இருந்தனர், அதாவது: சுரேஷ் சந்திர போஸ் (1891 -1972), சுதிர் சந்திர போஸ் (1892 - 10 பிப்ரவரி 1950), டாக்டர் சுனில் சந்திர போஸ் (1894 - 17 நவம்பர் 1953), சுபாஷ் சந்திர போஸ் (23 ஜனவரி 1897 -18 செப்டம்பர் 1985), சைலேஷ் சந்திர போஸ் (1904 -1984) மற்றும் சந்தோஷ் சந்திர போஸ். அவருக்கு நான்கு இளைய சகோதரிகள் இருந்தனர், அவர்கள் தருபாலா ராய், மாலினா தத்தா, பிரதிபா மித்ரா மற்றும் கனகலதா மித்ரா. அவர் 1909 இல் இருபது வயதில் பிவாபதி போஸை மணந்தார், மேலும் தம்பதியருக்கு எட்டு குழந்தைகள் இருந்தனர், அவர்கள் முதிர்வயது வரை உயிர் பிழைத்தனர்.

சரத் போஸ் , ஸ்காட்டிஷ் சர்ச் கல்லூரியின் பிரசிடென்சி கல்லூரியில் படித்தார் , பின்னர் கல்கத்தா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டார் , பின்னர் 1911 இல் இங்கிலாந்து சென்று ஒரு வழக்கறிஞராகப் பணியாற்றினார். லிங்கன்ஸ் இன்னில் வழக்கறிஞர் பணிக்கு அழைக்கப்பட்டார் . இந்தியா திரும்பியதும் அவர் ஒரு வெற்றிகரமான சட்டப் பயிற்சியைத் தொடங்கினார், ஆனால் பின்னர் அதைக் கைவிட்டு இந்திய சுதந்திர இயக்கத்தில் சேர்ந்தார் .

அரசியல் வாழ்க்கை
1936 ஆம் ஆண்டு, போஸ் வங்காளப் பிரதேச காங்கிரஸ் குழுவின் தலைவரானார், மேலும் 1936 முதல் 1947 வரை அகில இந்திய காங்கிரஸ் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றினார். ஃபஸ்லுல் ஹக் அரசாங்கத்தில் அமைச்சரவை அமைச்சராக சேரவிருந்ததற்கு முந்தைய நாள் சுபாஷ் தப்பிச் சென்ற பிறகு சரத் போஸ் கைது செய்யப்பட்டார். அவர் மெர்காராவில் உள்ள சிறைக்கும் பின்னர் குன்னூரில் உள்ள சிறைக்கும் மாற்றப்பட்டார், அங்கு அவரது உடல்நிலை பாதிக்கப்பட்டது. 4 ஆண்டு சிறைத்தண்டனைக்குப் பிறகு செப்டம்பர் 1945 இல் அவர் விடுவிக்கப்பட்டார். 1946 முதல் 1947 வரை, போஸ் மத்திய சட்டமன்றத்திற்கு காங்கிரஸ் குழுவை வழிநடத்தினார். சுபாஷ் சந்திர போஸ் இந்திய தேசிய இராணுவத்தை உருவாக்குவதை அவர் கடுமையாக ஆதரித்தார் மற்றும் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் தீவிரமாக பங்கேற்றார் . 1945 ஆம் ஆண்டு தனது சகோதரர் இறந்ததாகக் கூறப்பட்டதைத் தொடர்ந்து, ஐஎன்ஏ பாதுகாப்பு மற்றும் நிவாரணக் குழுவின் மூலம் ஐஎன்ஏ வீரர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் மற்றும் உதவி வழங்குவதற்கான முயற்சிகளுக்கு போஸ் தலைமை தாங்கினார் . 1946 ஆம் ஆண்டில், அவர் பணிகள், சுரங்கங்கள் மற்றும் அதிகாரங்களுக்கான இடைக்கால அரசாங்கத்தின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார் - ஜவஹர்லால் நேரு மற்றும் சர்தார் வல்லபாய் படேல் தலைமையிலான தேசிய நிர்வாகக் குழுவில் அமைச்சர் பதவி , இந்திய வைஸ்ராயால் தலைமை தாங்கப்பட்டது.

வங்காளப் பிரிவினையும் பிற்கால வாழ்க்கையும்
இருப்பினும், வங்காளத்தை இந்துக்கள் பெரும்பான்மை மற்றும் முஸ்லிம்கள் பெரும்பான்மை பகுதிகளுக்கு இடையில் பிரிக்க வேண்டும் என்ற அமைச்சரவை மிஷன் திட்டத்தின் அழைப்பில் கருத்து வேறுபாடு காரணமாக போஸ் AICC-யில் இருந்து ராஜினாமா செய்தார் . வங்காள முஸ்லிம் லீக் தலைவர்களான ஹுசைன் ஷாஹீத் சுஹ்ரவர்தி மற்றும் அபுல் ஹாஷிம் ஆகியோருடன் ஒன்றுபட்ட ஆனால் சுதந்திரமான வங்காளம் மற்றும் வடகிழக்கு ஐக்கிய வங்கத்திற்கான முயற்சியை அவர் உருவாக்க முயன்றார் . முகமது அலி ஜின்னா ( பாகிஸ்தானின் ஸ்தாபக தந்தையான அகில இந்திய முஸ்லிம் லீக்கின் தலைவர் ) அதை ஆதரித்தார். மகாத்மா காந்தியும் அதை ஆதரித்தார். இந்திய தேசிய காங்கிரசும் வங்காளத்தைச் சேர்ந்த இந்திய சட்டமன்றத்தின் இந்து உறுப்பினர்களும் அதை எதிர்த்தனர். இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, போஸ் தனது சகோதரரின் ஃபார்வர்ட் பிளாக்கை வழிநடத்தி , வங்காளத்திற்கும் இந்தியாவிற்கும் ஒரு சோசலிச அமைப்பை ஆதரித்து சோசலிச குடியரசுக் கட்சியை உருவாக்கினார். அவர் பிப்ரவரி 20, 1950 அன்று கல்கத்தாவில் 60 வயதில் இறந்தார்.

குடும்பம்
சரத் போஸ் 1909 ஆம் ஆண்டு அக்ஷோய் குமார் டே மற்றும் சுபலா டே ஆகியோரின் மகள் பிவாபதி டேயை மணந்தார். இந்த தம்பதியருக்கு எட்டு குழந்தைகள் பிறந்தனர். இவர்களது குழந்தைகளில் ஜெர்மனியைச் சேர்ந்த வேதியியலில் முனைவர் பட்டம் பெற்ற அசோக் நாத் போஸ் ; வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்று நாடாளுமன்ற உறுப்பினரான அமியா நாத் போஸ் , பர்மாவிற்கான இந்தியத் தூதராகவும் இருந்தார்; குழந்தை மருத்துவராகவும் சட்டமன்ற உறுப்பினராகவும் ஆன சிசிர் குமார் போஸ் , மின் பொறியியலாளராகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்த சுப்ரதா போஸ் ஆகியோர் அடங்குவர். அவரது இளைய மகள் பேராசிரியர் சித்ரா கோஷ் , ஒரு புகழ்பெற்ற கல்வியாளர், சமூக விஞ்ஞானி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் உள்ளார். அவரது மூத்த பேரன் சுகதா போஸ் , ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் கடல்சார் வரலாறு மற்றும் விவகாரங்களில் கார்டினர் பேராசிரியராகவும் , மக்களவையின் முன்னாள் உறுப்பினராகவும் உள்ளார் . அவரது இளைய பேரன் சுமந்திர போஸ் , லண்டன் பொருளாதாரம் மற்றும் அரசியல் அறிவியல் பள்ளியில் ஒப்பீட்டு அரசியல் பேராசிரியராக உள்ளார்.



கொல்கத்தாவில் உள்ள சரத் சந்திர போஸின் சிலை
கௌரவங்கள்
கல்கத்தா உயர்நீதிமன்றத்திற்கு அருகில் சரத் சந்திர போஸின் சிலை அமைந்துள்ளது. ஜனவரி 2014 இல், சரத் சந்திர போஸ் நினைவு சொற்பொழிவு நிறுவப்பட்டது, மேலும் முதல் சொற்பொழிவை சர்வதேச புகழ் பெற்ற வரலாற்றாசிரியர் லியோனார்ட் ஏ. கார்டன் நிகழ்த்தினார் - அவர் சரத் மற்றும் அவரது தம்பி சுபாஸின் கூட்டு வாழ்க்கை வரலாற்றை "பிரதர்ஸ் அகைன்ஸ்ட் தி ராஜ்" என்ற தலைப்பில் எழுதியுள்ளார் .



செய்தி வாசிப்பாளராக இருந்து அதன் பின் நடிகையாக வந்தவர் திவ்யா துரைசாமி. அவர் எதற்கும் துணிந்தவன், வாழை போன்ற படங்களில் நடித்து இருக்கிறார். சில சின்ன பட்ஜெட் படங்களில் ஹீரோயினாகவும் நடித்து இருக்கிறார்.

தற்போது திவ்யா துரைசாமி ட்ரெண்டியான உடையில் போஸ் கொடுத்து இருக்கும் லேட்டஸ்ட் ஸ்டில்கள் ரசிகர்களை கவர்ந்து வருகிறது. பச்சை நிற சட்டை அணிந்து அழகிய போஸ் கொடுத்திருக்கும் புகைப்படங்களைப் பாருங்க.



தனுஷின் அனேகன் படத்தில் ஹீரோயினாக நடித்து இருந்தவர் அமிரா தஸ்தூர். அதன் பிறகு ஹிந்தி, தெலுங்கு படங்களில் நடித்து வந்த அவர் எட்டு வருடங்களுக்கு பிறகு பிரபுதேவாவின் பகீரா என்ற தமிழ் படத்தில் நடித்து இருந்தார்.

அந்த படத்திற்கு எதிர்பார்த்த அளவுக்கு வரவேற்பு கிடைக்கவில்லை. இந்நிலையில் நடிகை அமைரா தஸ்தூர் மிகவும் கவர்ச்சியான உடையில் செம ஹாட் ஆக போஸ் கொடுத்து இருக்கும் ஸ்டில்களை வெளியிட்டு இருக்கிறார்.

# ஜஸ்டிஸ் ஃபார் ஜெனி திரைவிமர்சனம்




படத்தின் ஆரம்பத்திலேயே இளம்பெண் (ஜெனி) ஒருவரை மர்மகும்பல் கொடூரமாக பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டு கொலை செய்துவிடுகின்றனர். இதுபோன்ற சில கொலைகளும் அங்கு நடக்கிறது. ஆனால் போலீசாருக்கு துப்பு கிடைக்கவில்லை.

ஜெனியின் நெருங்கிய தோழிதான் படத்தின் கதாநாயகி. பள்ளியில் தொடங்கிய நட்பு இருவரும் நீட் தேர்வு எழுதி மருத்துப் படிப்பில் சேரும் தருவாயில் ஜெனியின் கொலை சம்பவம் நிகழ்கிறது.

ஜெனியின் மரணத்திற்காக போராட நினைக்கும் கதாநாயகி, மருத்துவம் படிக்காமல் சட்ட படித்துவிட்டு 5 ஆண்டுகளுக்கு பிறகு தனது தோழியின் மரணத்திற்காக சட்டரீதியாக போராடுகிறார்.

இறுதியில் ஜெனிக்கு நீதி கிடைத்ததா? குற்றவாளியை கண்டுபிடித்தார்களா? என்பது படத்தின் மீதிக்கதை..

நடிகர்கள் படத்தின் மையக் கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் கதாநாயகி, வலியையும் துயரத்தையும் மிக நேர்த்தியாக வெளிப்படுத்தியுள்ளார். குறிப்பாக, கிளைமாக்ஸ் காட்சிகளில் உணர்ச்சிகரமான நடிப்பு அனைவரையும் கவர்கிறது. காவல்துறை அதிகாரியாக வரும் நடிகையும் சிறப்பாக தனது நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

இயக்கம் பெண்களுக்கு எதிராக நடக்கும் அநீதி, குறிப்பாக ஒரு இளம்பெண்ணுக்கு (ஜெனி) நேரும் பாதிப்பு மற்றும் அதற்காக அவரது குடும்பமும் சமூகமும் போராடும் நீதியைப் பற்றியதுதான் இந்தக் கதை. சட்டப் போராட்டங்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் ஒரு வழக்கின் போக்கை எப்படி மாற்றுகின்றன என்பதை யதார்த்தமாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. வழக்கமான பழிவாங்கும் கதையாக இல்லாமல், சட்டத்தின் மூலமாக நீதியைத் தேடும் 'கோர்ட் ரூம் டிராமா' பாணியில் விறுவிறுப்பாக நகர்கிறது.

சமூக அவலங்களைச் சுட்டிக்காட்டும் கூர்மையான வசனங்கள் படத்திற்குப் பெரிய பலம். ஒரு சமூக விழிப்புணர்வுப் படத்தை போரடிக்காமல் கொடுத்த இயக்குநருக்குப் பாராட்டுகள்.

இசை படத்தின் பின்னணி இசை கதையின் கனத்தை உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது.

ஒளிப்பதிவு படத்திற்குத் தேவையான அழுத்தமான காட்சிகளை இவர் தனது கேமராவில் பதிவு செய்துள்ளார்.

# தி ராஜா சாப் திரைவிமர்சனம்




பிரபாஸ் பாட்டியின் அரவணைப்பில் வளர்ந்து வருகிறார். ஆனால், அந்த பாட்டி ஞாபக மறதி உடையவர். ஆனால், தொலைந்து போன கணவர் பற்றி மட்டும் எப்போதும் பேசிக்கொண்டிருக்கிறார். கண்டிப்பாக தன் கணவரை பார்க்க வேண்டும் என சொல்கிறார்.

இதனால் தன்னை வளர்த்த பாட்டிக்காக அவரை தேடி பிரபாஸ் கிளம்ப, சென்ற இடத்தில் நிதி அகர்வால், மாளவிகாவுடன் காதல் வயப்படுகிறார்.

அதே நேரத்தில் தாத்தாவான சஞ்சய் தத் ஒரு மாந்திரிகவாதி, பணத்தை திருடுபவர் என்றெல்லாம் தெரியவர, மறு பக்கம் சமுத்திரகனியும் சஞ்சய் தத் தேடி வர, பிறகு என்ன ஆனது ? தாத்தாவை பிரபாஸ் கண்டுப்பிடித்தாரா? சமுத்திரகனி எதற்கு தேதி வருகிறார் என்பதே மீதிக்கதை.

நடிகர்கள்: பிரபாஸை எப்போதும் வயலண்ட்டாகவே பார்த்த நமக்கு, இந்த படத்தில் புதியதாக தெரிகிறார். ஹீரோயின்களான மாளவிகா, நிதி, ரிதி என 3 பேரும் அவர்களுக்கு வழங்கிய கதாப்பாத்திரத்தை கச்சிதமாக செய்திருக்கிறார்கள். படம் ஆரம்பித்து சஞ்சய் தத் வரும் வரை பெரும் சோதனையாகவே செல்கிறது.

இயக்கம்: எந்த ஒரு திருப்பமும் இல்லாமல் கதை ஒரு இடத்திலேயே சுற்றிக்கொண்டு இருப்பது பொறுமையை சோதிக்க வைக்கிறது. படத்தின் நீளமும் அதிகம். எப்படா படம் முடியும் என்று படம் பார்க்க செல்பவர்களை கலங்கடிக்க வைத்திருக்கிறது.

இசை: மன் இசை படத்திற்கு பலமே.

ஒளிப்பதிவு :படத்தின் டெக்னிக்கல் விஷயங்கள் ஒளிப்பதிவு நன்றாக உள்ளது.

ரேட்டிங்- 1.5/5

# சில மணி நேரங்களில் விற்றுத் தீர்ந்த பராசக்தி முன்பதிவு டிக்கெட்டுகள்

சுதா கொங்கரா இயக்கத்தில், சிவகார்த்திகேயன் நடிப்பில் உருவாகி உள்ள படம் 'பராசக்தி'. சிவகார்த்திகேயனின் 25வது படமான இதில் ரவிமோகன், அதர்வா, ஸ்ரீலீலா ஆகியோர் நடித்துள்ளனர். ஜி.வி.பிரகாஷ்குமார் படத்திற்கு இசையமைத்துள்ளார்.


டான் பிக்சர்ஸ் சார்பில் ஆகாஷ் பாஸ்கரன் தயாரித்துள்ள இப்படம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஜன.10 வெளியாகும் என படக்குழு அறிவித்திருந்தது. ஆனால் தணிக்கை சான்றிதழ் இன்னும் வழங்கப்படாததால் படம் குறித்த தேதிக்கு வெளியாகுமா என ரசிகர்கள் குழப்பத்தில் ஆழ்ந்து இருந்தனர்.

பின்னர், பராசக்தி படத்திற்கு U/A சான்றிதழை மத்திய தணிக்கை வாரியம் வழங்கி உள்ளது.மத்திய தணிக்கை வாரியம் சான்று வழங்கியதை அடுத்து நாளை திட்டமிட்டபடி பராசக்தி திரைப்படம் வெளியாகிறது.

தொடர்ந்து, பராசக்தி படத்திற்கான முன்பதிவு தொடங்கியுள்ளதாக டான் நிறுவனம் தனது எக்ஸ் தள பக்கத்தில் அதிகாரப்பூர்வமாக தெரிவித்தது.

இந்நிலையில், சென்சார் வழங்கப்பட்ட சில மணி நேரத்திலேயே பெரும்பாலான திரையரங்குகளில் 'பராசக்தி' படத்தின் முன்பதிவு டிக்கெட்டுகள் விற்றுத் தீர்ந்தன!

தமிழ்நாடு முழுவதும் நாளை 600க்கும் மேற்பட்ட திரையரங்குகளில் 'பராசக்தி' படம் வெளியாகிறது என்பது குறிப்பிடத்தக்கது.




# 'வா வாத்தியார்' பட ரிலீஸ் தடையை நீக்க ஐகோர்ட் மறுப்பு



சென்னை: கடனை திரும்ப செலுத்தாததால் 'வா வாத்தியார்' திரைப்படத்துக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க மறுத்த சென்னை உயர் நீதிமன்றம், படத்தின் உரிமைகளை ஏலத்தில் விட சொத்தாட்சியருக்கு உத்தரவிட்டுள்ளது.

திவாலானவர் என அறிவிக்கப்பட்ட அர்ஜூன்லால் சுந்தர்தாஸ் என்பவரிடம் ஸ்டூடியோ கிரீன் படத் தயாரிப்பு நிறுவனம் பெற்ற 10 கோடியே 35 லட்சம் ரூபாய் கடனை வட்டியுடன் சேர்த்து 21 கோடியே 78 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயை செலுத்த ஞானவேல் ராஜாவுக்கு உத்தரவிட வேண்டும் என்றும், ஸ்டூடியோ கிரீன் நிறுவனம் தயாரித்துள்ள 'வா வாத்தியார்' திரைப்படத்தை வெளியிட இடைக்கால தடை விதிக்க வேண்டும் எனவும், அர்ஜுன்லால் சொத்துகளை நிர்வகிக்க நியமிக்கப்பட்ட சொத்தாட்சியர் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனுவை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், பணத்தை திரும்ப செலுத்த ஞானவேல் ராஜா எந்த தீவிர முயற்சியும் மேற்கொள்ளவில்லை எனக் கூறி, கடன் தொகையை திரும்ப செலுத்தும் வரை 'வா வாத்தியார்' படத்தை வெளியிடக் கூடாது என தடை விதித்து உத்தரவிட்டனர்.

இந்நிலையில், 3 கோடியே 75 லட்சம் ரூபாய் செலுத்த பட நிறுவனம் தயாராக இருப்பதால், படத்துக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கக் கோரி ஞானவேல் ராஜா தரப்பில் புதிய மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், சி.குமரப்பன் அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, நீதிமன்றம் ஏற்கெனவே போதுமான கால அவகாசம் அளித்து விட்டதாக தெரிவித்து படத்துக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க மறுத்து, 'வா வாத்தியார்' படத்தின் உரிமைகளை ஏலத்தில் விட சொத்தாட்சியருக்கு உத்தரவிட்டனர்.



வாழ்க சுவாமி சக்கரபாணி ஜி மஹராஜ்
வளர்க இந்துக்களின் ஒற்றுமை
சந்த் மஹாசபா
SANT MAHASABHA
संत महासभा
கொண்டாடும்
விஷ்வகுரு சித்ரகுப்த அக்காடா
சுவாமி சக்கரபாணி ஜி மஹராஜ்
தேசிய தலைவர்-சந்த் மஹாசபா /அகில பாரத இந்து மகாசபா
இந்துக்களின் பாரம்பரிய பண்டிகையாம் உழவர் திருநாள்,
உழவுக்கு உறுதுணையாக விளங்கும் காளைகளுக்கு நன்றிகூறும்
தைப்பொங்கல் திருவிழா
மஹாமண்டலேஷ்வர்
சுவாமி ஸ்ரீராம் சித்ரகுப்த ஜி மஹராஜ்
தேசிய செயலாளர் மற்றும் தமிழகத் தலைவர்
மாற்றுத்திறனாளிகள், பெண் துப்புரவு பணியாளர்களுக்கு
மற்றும் ஏழைப்பெண்களுக்கு பொங்கல் தொகுப்பு மற்றும்
நலத்திட்டங்கள் வழங்கும் பொங்கல் திருவிழா
அனைவரையும் அழைத்து மகிழும் சந்த் மஹாசபா தமிழ்நாடு




சந்த் மஹாசபா
SANT MAHASABHA
संत महासभा
கொண்டாடும்
இந்துக்களின் பாரம்பரிய பண்டிகையாம் உழவர் திருநாளை முன்னிட்டு,
உழவர்களுக்கும், உறுதுணையாக விளங்கும் காளைகளுக்கும் நன்றிகூறும்
தைப்பொங்கல் திருவிழா
விஷ்வகுரு சித்ரகுப்த அக்காடா
சுவாமி சக்கரபாணி ஜி மஹராஜ்
தேசிய தலைவர்-சந்த் மஹாசபா /அகில பாரத இந்து மகாசபா
மஹாமண்டலேஷ்வர்
சுவாமி ஸ்ரீராம் சித்ரகுப்த ஜி மஹராஜ்
தேசிய செயலாளர் மற்றும் தமிழகத் தலைவர் ஆசியுடன்
மாற்றுத்திறனாளிகள், பெண் துப்புரவு பணியாளர்களுக்கு
மற்றும் ஏழைப்பெண்களுக்கு பொங்கல் தொகுப்பு மற்றும்
நலத்திட்டங்கள் வழங்கும் பொங்கல் திருவிழா
அனைவரையும் அழைத்து மகிழும் சந்த் மஹாசபா தமிழ்நாடு




தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய்
மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு
பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட
தன்னார்வலர்கள் (freelancer)
அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற,
மக்கள் தொடர்பு அதிகம் உள்ள
பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள்,
தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009





GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
விளம்பரம்
vilambarampage@gmail.com
7789941009




சந்த் மஹாசபா
SANT MAHASABHA
संत महासभा
கொண்டாடும்
தைப்பொங்கல் திருவிழா
மற்றும் நலத்திட்டங்கள் வழங்கும் விழா
அனைவரையும் அழைத்து மகிழும் சந்த் மஹாசபா தமிழ்நாடு





### பிள்ளையின் கடனே !!

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
தன்னை உருக்கியே ஈன்றவரைப்பேணுவோம்

கண்துஞ்சாது பால்நினைந்து ஊட்டி வளர்த்தவர்
மண்ணிலே கற்றுயர்ந்து மாண்புறவே வழிகாட்டியவர்

தன்னலம் பேணாது தான்பெற்ற செல்வத்தை
இன்னுயிர் மக்களுக்கு இனிதாய்க்கொடுத்திடுவர் !!

கண்கலங்காது பெற்றோரைக்கடைசிவரைக் காத்திடுவீர்
விண்ணுலகம் ஏகும்போது ஈமக்கடன் கழித்திடுவீர் !!

**சண்முக சுப்பிரமணியன்,** திருநெல்வேலி

### எண்கள் !

பிறப்பு முதல் இறப்பு
வரை வாழ்வை
அடையாளப்படுத்துகிறது
எண்கள்....

இரண்டாம் எண் கட்டிலில்
பிரசவ வலியோடு துவங்க...

அன்று பிரசவித்த
குழந்தைக்கு அடையாள
எண்... பிறகு வகுப்பு எண்...
ஹால் டிக்கெட் எண்....
ஆதார் எண்.... வாக்காளர்
அடையாள அட்டை எண்....
பான் எண்... வங்கி கணக்கு
எண்... வாகன எண்...
வீட்டு எண்... செல்ஃபோன்
எண் ... என எண்ணிலடங்க
எண்களோடு வாழ்க்கை
முடிவுக்கு வந்த பின்னும்'
இந்த பாடியோட ஆதார் எண்
சொல்லுங்க !"
என்கிறார்
தகன மேடை
பொறுப்பாளர் !



**எம்.பி.தினேஷ்.**
கோவை



தங்கம் ஒரு லட்சத்திற்கு
மேல் விலையாம் ஏறும்
விலை பற்றியெல்லாம் எனக்கு
கவலையில்லை ஏனென்றால்

உனக்கு தங்கமே
தேவையில்லையடி
உன் மனசே தங்கமாய்
இருப்பதால்!

நிலவொன்று உலா வந்தது
ஏனோ அழகாய் போனது
எந்தன் வீதி!

சத்தமாய் பேசுகிறேன் என
உஷ் என்கிறாய்
இப்போதைக்கு
சத்தமில்லாமல் இருக்க
ஒரே ஒரு கிஸ் போதுமடி!

**லி.நௌஷாத் கான்**

மூழ்கியவன் எழுவது போல
மீண்டும் பிறக்கவே ஆசை
வண்ணக் கனவுகள்
வளர்க்கவும் வானவில்லைத்
தொட்டு விடவும் நதியோரம்
நடக்கவும் கடலலை
தொடவும் மழைத்துளியை
இமைகளில் ஏந்தவும்,
மேகமாய் மாறவும்
ஆசைகளின் கூடாரமாய்
அலையவும்
வேண்டும்
மீண்டும்
மீண்டும்
பிறவி




**ஜி ஏ பிரபா**
கோவை.

### ஞானம்

காற்று வீசும்போதெல்லாம்
நீரலைகள் குளத்தில்
நீந்திக்கொண்டே...போலவே
அன்பு ஊறும் போதெல்லாம்
நேச
அலைகள்
மனதில்
தோன்றிக்
கொண்டே...



**கே. பி. ஜனார்த்தனன்**



### ஏக்கம்...

ஓர் நாள் கால்நனைத்து
சென்று விட்டாய்...

திருவிழா தினமும் என..
எண்ணி...

அலைந்து
திரிந்த
வண்ணம்
உள்ளன....
அலைகள்....

கரை சென்று
திரும்புவதற்குள்ளாக...
தனது இருப்பிடத்தை இழந்து
விட்டன.... அலைகள்...



**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி



### விரல் புரட்சி வேண்டும்

" யாரை தேர்ந்து எடுப்பது
யாருக்கு ஓட்டு போடுவது
எடை போட்டு பார்க்க நேரம்
முடிந்து விட்டது ....."

நாட்டுக்கு நலம் ஊருக்கு
நல்லது வீட்டுக்கு உயர்ந்தது
எந்த கட்சியோ
எந்த ஆட்சியோ ..."

முடிவு எடுத்து விட
வேண்டியது தான் திறமை
இல்லாதவர்களை ஏற்றி
விட்டால் வளர்ச்சி இல்லாமல்
போய்விடும் ..."

உழவர் வாழ்வு மலர
ஏழையின் அழுகுரல் குறைய
பெண்ணுக்கு பாதுகாப்பு
தருமா உடனே போடுங்கள்
ஓட்டு ...."

பணத்தாலும் பரிசுப்
பொருளாளும் குடியும்
பிரியாணியும் நம் ஓட்டை
வாங்கி விடக்கூடாது ...."

ஒரு நாள் விழிப்பு
ஐந்தாண்டு தவிப்புக்கு
தடை..."

ஒரு நாள் மயக்கம்
ஐந்தாண்டு
புழுக்கம் .... "

சிந்திப்பீர்
வாக்களிப்பீர்..."



**ஆர். சீதாராமன்**
சீர்காழி

### கத்திரிக்காய்.!

காய் காய் கத்திரிக்காய்!
கவிதைஒரு கத்திரிக்காய்!
வாய்க்கு ருசியாக வந்த
வயக்காட்டுக் கத்திரிக்காய்.!

ஏழைவீட்டுச் சட்டியிலே
கொதிக்கும் அந்த
கத்திரிக்காய்!காரக்குழம்பில்
கத்திரிக்காய்! கலந்து
உண்ணும் கத்திரிக்காய்!

கூட்டு வச்சா கும்முனுத்தான்
கொதிக்கும் அந்த
கத்திரிக்காய்! வீட்டைத்
தாண்டி வீதியிலும் மணக்கும்
அந்த கத்திரிக்காய்.!

பொரியலுக்குப்
பொருத்தமான
காய்கறிதான் கத்திரிக்காய்!
பொழுதெல்லாம் மலிவாக
கிடைக்கும் காயே
கத்திரிக்காய்!

கைவிரலாய் காட்சிதரும்
கருணைமிகு கத்திரிக்காய்!
ஒற்றுமையை உயர்த்திக்
காட்டி உணர வைக்கும்
கத்திரிக்காய்!

கத்திரிக்காய் முத்திவிட்டால்
கடைவீதி வந்திடுமே..
கத்திரிக்காய் இல்லாவிட்டால்
கவிஞன் மனசு
நொந்திடுமே.!

**வே.கல்யாண்குமார்.**

தொண்டையில்
முள் குத்தும்
போது
தூண்டிலின்
ரணம்
தெரிந்தது.



**ஜயந்தி சிவக்குமார்**
திருச்சி

### பழையப் புத்தகக் கடை.!

சோப்பு வாங்க.. சீப்பு வாங்க ஓடும் மக்களே.!
பழையப் புத்தகம் வாங்க,.வாங்க ! வாங்க. மக்களே.!

நகைக்கடைக்கு புடவைக்கடைக்கு ஓடும் மக்களே.. பழையப் புத்தக கடையைக் கொஞ்சம் திரும்பிப் பாருங்களே.!

சிகையலங்காரக் கடைக்கு ஓடும் இளைய மக்களே.. உங்கள் அகம் தன்னை அலங்கரிக்க இங்கு வாங்களே..!

ஆட்டுக்கறி கோழிக்கறி வாங்கி சுவைக்க ஓடும் மக்களே.. உங்கள் பாட்டன் கதை.. பாட்டுச்சுவை அறிய வாங்களே..!

வீதியோரம் விற்காமல் கிடக்குது அறிவு.. பாதி விலைக்கு பாரதியை வாங்குவோர்கள் குறைவு!

பாதையிலே கொட்டிக் கிடக்கும் வைரக் கற்களே.! அதனைப் பார்க்காமல் மதுக்கடையில் குவிந்திருக்கும் கூழாங்கற்களே.!

நல்லதற்கு காலமில்லை இந்த நாட்டிலே.. புத்தகங்கள் விற்பதில்லை இந்த நாட்டிலே.. திறந்திருக்கு அழைக்கின்றேன் எந்தன் பாட்டிலே.!

**வே.கல்யாண்குமார்**

### தை மகளே வருக! தமிழ்ப் பொங்கலைத் தருக!

தை மகளே வருக! தமிழ்ப் பொங்கல் தருக
தவிக்கின்ற தமிழர்களின் வாழ்வு விடியட்டும்!

உழவனின் வாழ்வு இங்கே ஊசலாடுகின்றது
உணவளித்தவன் வெறுத்து உயிர் துறக்கின்றான்!

மீனவன் வாழ்வு அலையெனவே ஆடுகின்றது
மீன் பிடிக்கச் சென்றால் சுடுகிறான் சிங்களன்!

இலங்கையில் நடந்தது தமிழினப் படுகொலை
இன்னும் கைதாகவில்லை கொலைபாதகன்!

விளைநிலங்களை எல்லாம் பறித்து
விலைபேசி விற்று மகிழ்கின்றனர் அந்நியருக்கு!

உலகின் முதல் மனிதன் தமிழன் இன்று
உதைபடும் தமிழனாக வதைபடும் தமிழனாக உள்ளான்!

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றவன்
யாவரையும் வாழ வைத்து தன்வாழ்வை இழந்தான்!

முப்போகம் விவசாயம் செய்து வாழ்ந்தவன்
முடியவில்லை இன்று ஒருபோகம் செய்வதற்கு!

யானை கட்டி போரடித்து விவசாயம் செய்தவன்
மாடு கட்டி போரடிக்கக் கூட வழியில்லை!

விவசாயிகள் போராடினால் கவனிக்க நேரமில்லை
வேதனையில் போராடுகிறான் விடியவில்லை வாழ்க்கை!

பலகோடிகள் கடன்வாங்கி வெளிநாடு ஓடும்
சில கேடிகளை சிறைப்படுத்த முடியவில்லை!

சில ஆயிரம் தரவேண்டிய விவசாயிகளை
சித்திரவதை செய்து உயிர் பறித்து விடுகின்றனர்!



தை மகளே வருக! தமிழ்ப் பொங்கல் தருக!
தரணியில் வாடிடும் தமிழர்கள் வாழ்வில் விடியல் தருக!

**கவிஞர் இரா. இரவி**



1.மனிதருக்கு கஷ்டம் வந்தால்
ஜோசியரை மாற்றுகிறார்கள்
அதன் பின்னர் தெய்வத்தை
மாற்றுகிறார்கள்
வீட்டையும் மாற்றுகிறார்கள்
கடைசி வரை தன்னை
மாற்றிக்கொள்ள
மறுக்கிறார்கள்

2. உதாசீனம் செய்யப்படும்
இடங்களில் நீங்கள் மட்டுமல்ல
உங்கள் நிழல் கூட நிற்கக்
கடாது

3. உங்களுக்கு திருப்பி
உதவ முடியாத ஒருவருக்கு
உதவி செய்யுங்கள் நீங்கள்
வாழ்ந்து கொண்டிருப்பதை
உணர்வீர்கள்

4. மனம் சுத்தமாகவும்
நேர்மையாகவும் இருந்தால்
இறைவனை வழிபட வேறு
மந்திரங்களும் சடங்குகளோ
தேவை இல்லை

5.விழும்போது விதையாக
விழு எழும்போது மரமாக எழு
தோல்வி உன்னை
புதைக்கவில்லை
விதைத்து இருக்கிறது
என்பதை நினைவில் கொள்

6. எது வேண்டும் என்று
முடிவு செய்யாதே எது
வேண்டாம் என்று முடிவு செய்
அதுதான் நிம்மதியை தரும்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



### இயற்கை!

(நிரையசைக் கட்டளைக்
கலித்துறை)

இயற்கையே இல்லையெனில்
இவ்வுலகில்லை
அறிந்திடுவோம்!
நயன்மைப்பொருள்கள்
நலமோடு காணும்
புரிந்திடுவோம்!
வியப்புப் பொருள்களே
வீறுடை கொண்டே
திகழ்ந்திடுமே!
தயவுடன் நாளுமே
தக்க இயற்கை உதவிடுமே!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**

1.உலகில் சிறந்த ஜோடி
சிரிப்பும் கண்ணீரும் தான்
இரண்டும் அடிக்கடி சந்திப்பது
இல்லை அப்படி
சந்தித்துக்கொண்டால் அது
ஒரு அழகிய தருணம்

2.கஞ்சனைப் போல
மிகப்பெரிய வள்ளல்
கிடையாது அடுத்தவர்கள்
அனுபவிப்பதற்கு
அனைத்தையும் விட்டுவிட்டு
செல்வார்கள்

3.சுடுகாடு தானே என்று
சீப்பாக நினைக்காதீர்கள்
அங்கே போவதற்கு
அவன் அவன் உயிரையே
கொடுக்கிறான்

4. அபராதம் என்பது ஒருவன்
தவறாக நடந்து கொண்டதற்கு
உண்டான வரி
வரி என்பது ஒருவன் சரியாக
நடந்து கொண்டதற்கான
அபராதம்

5.பிறகு செலவழிக்கலாம்
என்று பணத்தை சேமிக்க
முடியும் பின்னால்
வாழ்ந்து
கொள்ளலாம் என
ஒரு நாளை கூட
சேமிக்க முடியாது



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

# நூல் விமர்சனம்

**திசைகளைத் திரும்பிப் பார்க்கிறேன்!**
**நூல் ஆசிரியர் சிந்தனைக் கவிஞர் கவிதாசன் !**
**நூல் விமர்சனம் கவிஞர் இரா .இரவி .**
**திசைகளைத் திரும்பிப் பார்க்கிறேன் !**
**நூல் ஆசிரியர் சிந்தனைக் கவிஞர் கவிதாசன் !**
**தொலைபேசி 0422–256313**
**நூல் விமர்சனம் கவிஞர் இரா .இரவி .**
**குமரன் பதிப்பகம் ,19.கண்ணதாசன் சாலை ,சென்னை .17.தொலைபேசி 044– 24353742. விலை ரூபாய் 70.**




நூல் ஆசிரியர் சிந்தனைக் கவிஞர் கவிதாசன் அவர்களை கோவை வசந்த வாசல் கவி மன்றம் நடத்திய விழாவில் கோவையில் சந்தித்து உரையாடி இருக்கிறேன் .அவரது படைப்புகளை படித்து மகிழ்ந்தவன் .கோவையின் பெருமைகளில் ஒன்றாகி விட்டவர் .எழுத்து பேச்சு செயல் மூன்றிலும் தன்னம்பிக்கை விதைத்து வருபவர் .பன்முக ஆற்றல் மிக்கவர் .கோவை ரூட்ஸ் நிறுவனங்களின் மனித வள மேம்பாட்டுத் துறையின் இயக்குனராகவும் ,கோவை கல்லாறு சச்சிதானந்த ஜோதி நிகேதன் பள்ளிச் செயலாரகவும் பணியாற்றி வருகிறார் .

நமது நம்பிக்கை மாத இதழில் ஜனவரி 2011 தொடங்கி 20 மாதங்கள் தொடராக வந்தது .கட்டுரையாக இதழில் படித்தப் போதும் நூலாக மொத்தமாக படித்ததில் சுகம்.கவிதை உறவு இதழில் ஏர்வாடி எஸ் .ராதா கிருஷ்ணன் அவர்களும் மிகச் சிறப்பாக இந்நூலுக்கு விமர்சனம் எழுதி இருந்தார்கள் .சிந்தனைக் கவிஞர் கவிதாசன் வாழ்வில் நடந்த முக்கிய நிகழ்வுகள் நூல் படிக்கும் வாசகர்களுக்கு தன்னம்பிக்கை விதைக்கும் விதமாக உள்ளது .புகைப்படங்களுடன் மிக நேர்த்தியாக அச்சிட்டுள்ள குமரன் பதிப்பகத்தாருக்கும் பாராட்டுக்கள் .

நூல் ஆசிரியர் சிந்தனைக் கவிஞர் கவிதாசன் எட்டாம் வகுப்பு படித்தப்போது அவரை முதன் முதலில் மேடை ஏற வைத்து அழகு பார்த்த நற்றமிழாசிரியர் திரு .கா .ச .அப்பாவு அவர்களின் புகைப்படத்தை வாங்கி அச்சிட்டு அவருக்கு நூலைச் சமர்ப்பித்தது சிறப்பு. வாய்ப்புத் தந்த ஆசிரியரை மறக்காமல் நன்றியை நன்கு பதிவு செய்த பாங்கு. இன்றைய மாணவ சமுதாயம் மனதில் நிறுத்த வேண்டிய கருத்து .

சிந்தனைக் கவிஞர் கவிதாசன் அவர்களின் வைர வரிகளை சிந்தனை வரிகளை அணிந்துரை எழுதிய முனைவர் கோ .சேகர் குறிப்பிட்டு உள்ளார்கள் .

முடங்கிக் கிடந்தால் சிலந்தியும்
உன்னைச் சிறைப் பிடிக்கும் !
எழுந்து நடந்தால் எரிமலையும்
உனக்கு வழி கொடுக்கும் !

சோம்பலை ஒழித்து சுறுசுறுப்பை விதைக்கும் அற்புத வரிகள் .இந்நூல் படிக்கும் ஒவ்வொரு வாசகர்களும் இந்த வரிகளை நினைவில் கொண்டு செயல் படுத்தினால் வாழ்வில் வெற்றி பெறலாம் . நூல் ஆசிரியர் சிந்தனைக் கவிஞர் கவிதாசன் இனிமையான மனிதர்,பண்பாளர்,எழுத்தாளர்,கவிஞர்,பேச்சாளர் ,செயலர் ,அலுவலர் சகலகலா வல்லவர் .

இவரின் இன்றைய நிலைக்கு காரணம் ,அரசியல், திரைப்படம் இரண்டும் இன்றி கோவையில் இருந்து வரும் முதல் தன்முன்னேற்ற மாத இதழின் ஆசிரியர் இல .செ .கந்தசாமி அவர்களின் உரைதான் .கல்லூரி நாட்களில் விளையாட்டுத்தனமாக சுற்றிக் கொண்டு இருந்த தன்னை மடைமாற்றம் செய்தது என்பதை நன்றியுடன் குறிப்பிட்டு உள்ளார் .நன்றி மறப்பது நன்றன்று என்று திருக்குறளை வாழ்வில் கடை பிடித்த காரணத்தால் வெற்றிப் பெற்று உள்ளார் .

நூல் ஆசிரியர் சிந்தனைக் கவிஞர் கவிதாசன் வாழ்வில் நடந்த முக்கிய நிகழ்வுகளை நூல் படிக்கும் வாசகர்களுக்கு பயன்படும் விதத்தில் மனதில் பதியும் வண்ணம் சிறப்பாக எழுதி உள்ளார் .இன்று உப்புச் சத்து நோய் வந்தவர்கள் மருத்துவரின் அறிவுரையின் பேரில் உப்பை தவிர்த்து சாப்பிட்டு வருகின்றனர் .ஆனால் அவர்களால் நட்பை தவிர்க்க முடியாது .அதனை உணர்த்தும் அற்புத வரிகள் இதோ !உப்பில்லாமல் கூட உயிர் வாழலாம்- ஆனால் நல்ல நட்பில்லாமல் உயிர் வாழ முடியாது !

முற்றிலும் உண்மை ! நட்பின் பெருமையை உணர்த்தும் வரிகள் .இந்த வாசகத்தை நேற்று மதுரையில் ஓடும் ஆட்டோ முதுகில் படித்தேன் .இதுதான் படைப்பாளியின் வெற்றி .நூல் ஆசிரியர் சிந்தனைக் கவிஞர் கவிதாசன் யார் ? என்று தெரியாமலே அவர் எழுதிய வாசகம் பிடித்து எழுதி வைத்துள்ளனர் .இப்படி நூல் முழுவதும் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய வைர வரிகளின் புதையலாக நூல் உள்ளது .பாராட்டுக்கள் .சிந்தனையாளர் முனைவர் வெ .இறையன்பு அவர்கள் சொல்லுவதைப் போல நாம் புரட்டும் புத்தகம் அல்ல இது .நம்மை புரட்டும் புத்தகம் .

"அவமானங்கள் நம்மைச் சிதைத்துவிடக் கூடாது .சீராகச் செதுக்க வேண்டும் .யாராவது நம்மை அவமானப்படுத்தினால் ,நாம் வார்த்தைகளால் அவர்களுக்கு பதில் சொல்லக் கூடாது .வாழ்ந்து காட்ட வேண்டும் .அவமானங்களையே எழுச்சியாய் உருவாக்கும் உந்து சக்தியாய் மாற்றிப் பழக வேண்டும் ."

"முற்றுப்புள்ளிகளை முயற்சிப்புள்ளி களாக்கினால் நீங்களே ஒரு முக்கியப்புள்ளி ஆவீர்கள் ."

நூல் ஆசிரியர் சிந்தனைக் கவிஞர் கவிதாசன் அவர்கள் கல்லூரி காலத்தில் கடைப்பிடித்த மூன்று கட்டளைகளை கவனியுங்கள் .

1.இனிமேல் நன்கு படிப்பது , நல்ல மதிப்பெண்களை பெறுவது .

2.எந்தப் போட்டியானாலும் அதில் கலந்து கொள்வது .வெற்றியோ தோல்வியோ அது குறித்து கவலைப்படுவதில்லை .

3.நேரத்தை வீணடிக்காமல் ஏதாவது உருப்படியான காரியங்கள் செய்வது .

மாணவ பேரவைத் தேர்தல் பற்றி,பெற்ற வெற்றி பற்றி ,காந்தியடிகள் குறிப்பிட்ட 7 பாவங்கள் பற்றி குறிப்பிட்டு வல்லவனாக வாழ்ந்தால் மட்டும் போதாது ,நல்லவனாகவும் வாழ வேண்டிய அவசியத்தை நன்கு உணர்த்தி உள்ளார் .

கட்டுரைகளின் தலைப்புகளே நம்பிக்கை விதைக்கின்றன .நம்பிக்கைதான் என் மூலதனம் .

சிந்தனை மின்னல் தெறித்தது,கூர்மையும் நேர்மையும் சிறகுகள் ,திறமை வளர்ந்தால் நம்பிக்கை பிறக்கும் ,உதவுபோதெல்லாம் உயர்கிறோம் ,முயற்சியும் பயிற்சியும் வெற்றியின் சிறகுகள் ,கூட்டு முயற்சி கோடி நன்மை ,மனதில் நம்பிக்கை நாற்று வளர்த்தேன்,வெற்றியும் தோல்வியும் பாடநூல்களே .

நம்மை நாம் செதுக்கிக் கொள்ள உதவும் நூல் . விதி என்று ஒன்றும் இல்லை மதியால் உயரலாம் ,உழைப்பால் சாதிக்கலாம், முயற்சியால் முன்னேறலாம் என்பதை பயிற்றுவிக்கும் நூல் .வாழ்வில் சந்தித்த அனுபவங்களை , வெற்றியின் ரகசியத்தை வாசகர்களுடன் பகிர்ந்துக் கொண்ட நூல் ஆசிரியர் சிந்தனைக் கவிஞர் கவிதாசன் அவர்களுக்கு பாராட்டுக்கள் ! வாழ்த்துக்கள் !






கனவினிலே கற்பனை
ஒத்திகை வண்ணம்
தோய்த்து வானவில்
நிறம் பூட்டி தூரிகை
தோய்தெடுத்து கண்டு
மகிழ கண் திறக்ககாரிகை
உன்னைக் கண்டேன்

காண வேண்டும்
கண்டு மகிழ வேண்டும்
பேச வேண்டும்
பேச்சுடனே பகிர வேண்டும்
உள்ள மட்டும் உடனிருக்கும்
உள்ளத்து ஆசைதனை


உள்ளத்தில் உள்ளதனை
வளர்ந்து வரும் ஆசைதனை
உருமாற்றம் ஏதுமின்றி
உளமார சொல்லிவிட்டேன்
உன் விருப்பம் என் விருப்பம்
நம் விருப்பம் ஆக வேண்டும்

காலங்கள் மாறுதடி
காதலிலே தவறில்லை
உன்னை நான் அறிந்து
கொண்டு என்னை நீ
அறிந்துகொண்டு



நம் வாழ்வை
நாம் வாழ்ந்தால்
வாழுமட்டும்
இன்பமயம்.

**ஓம் குமார்**
**P N**
மதுரை



### பேரழகு:

தனித்திருக்கும் இரவுகளில்–
மன்னன் அவனின்
நினைவை சுமந்து–
காத்திருக்கையில்
அழைப்புமணி ஓசை கேட்டு–
தாழிட்ட கதவினை திறந்து–
நாணுகையில் பேரழகு!!

பசிக்கு உணவளித்து–
ஆறிய உணவினை அள்ளிப்
போடுகையில்–
யாரோ
அழைக்க–
அலம்பாத
கையும்– வாயும்
பேரழகு!!!



**பானுஸ்ரீ**

அத்தனை பேர் நடுவில்
என் மையல் புள்ளி நீ.

இன்னும் கொஞ்சம்
தள்ளி நில்.
முழுமதி பார்க்கணும்.



வருவதற்கு
முன்பே
கவன ஈர்ப்புத்
தீர்மானம்
நிறைவேற்றி
விடுகிறாய்
வாசனையால்.

**ரிஷபன்**

கிடைப்பது வைரமாகவே
இருந்தாலும் தொலைச்ச என்
தங்கத்துக்கு ஈடாகாது!

கொஞ்ச நேரமாவது
உன் நினைவு என்னுள்
துளிர்க்காமல் இருந்தால்,
எப்படி இருக்கும் என
சிந்தித்துக் கொண்டு
இருந்தேன்.

விழிகளில் நீர் வழிந்தது.

Likes

நான் மகிழ்ச்சியோடு
வாழ்வதற்கு
உன்னை
நினைப்பது
அவசியமானதாக
இருக்கிறது



**கவிஞர்**
**பாலசந்தர்**

### நேமையும், திறமையும் வெல்லும்

நேரத்தை வீனடிக்காதே....
உழைப்பை நிர்த்தி
விடாதே.... சேமிப்பை
மறந்திடாதே.... சிக்கனத்தை
விட்டு விலகிடாதே...
உறவுகளை மறந்திடாதே...
உரிமைகளை விட்டு
கொடுக்காதே....
இலவசத்தை வாங்கிடாதே....
தன்மானத்தை அடகு
வைக்காதே.... ஆசை
படாமல் இருந்திடாதே...
அதை அளவிக்கு மேல்
ஆசை படாதே....
உழைக்கும் இடத்தில்
தூங்கி விடாதே... தூங்கும்
நேரத்தை வீனடிக்காதே.....
அம்மா அப்பாவை
மறந்திடாதே.... இவர்களுக்கு
செய்யும் சேவையை
நிர்த்திடாதே...
கஸ்ட்டம்
நஸ்ட்டம் வந்து
போகும்
கண் கலங்கி
நின்று
விடாதே....
காலத்தை
வென்று சாதிப்பதை
நிர்த்திவிடாதே....!!



**பொன்.கருணா,** நவிமும்பை



### பொங்கல் திருநாள்

ஏழையின் புன்னகை
காய்ந்த அடுப்பில் இனி
கலையாதக் கனவு கனியும்...
வெறும் கஞ்சி குடித்தக்
கோப்பை வெள்ளை
சர்க்கரையில் இனிக்கும்!
மூவாயிரம் ரூபாய் கையில்
வந்தபோது முடங்கிக் கிடந்த
என் தேவைகள் முளைவிட்டு
துளிர்த்தன – இன்று
முழுவதும் தீர்ந்துவிடும்
என்ற நம்பிக்கையில்!
பெட்டிக்குள் பூட்டி
வைத்த
பழைய கந்தல்களுக்கு
விடை கொடுத்து
புத்தம் புது வேட்டி சேலையில்
பூரிப்போடு வலம் வருவோம்
நானும் என் துணையும்!
வாசலில் நின்றிருக்கும்
அந்தத் தித்திக்கும் கரும்பு –
என்
வாழ்க்கையின் கசப்பை
எல்லாம் வேரோடு பிடுங்கி
எறியட்டும்! ஏழைக்குக்
கிடைத்தது ஏதோ பிச்சை
அல்ல... என் வீட்டு அடுப்பு
எரியும் மகிழ்ச்சித்
தீப்பொறி!
இந்த தைப்பொங்கல்
நிச்சயம் எங்கள் வீட்டில்
தையலாய் பிறக்கும்!



**ப.நந்தகுமார்**
காங்கேயம்



ரயில் நீளத்துக்கு
சிகரெட்
புகைத்தால்
தடம்
புரண்டுவிடும்
நுரையீரல்.



**ஜயந்தி**
**சிவக்குமார்**
திருச்சி



### பாடம் கற்க!

வரிசையில் செல்லும்
பழக்கத்தை கற்றுக் கொள்ள
வேண்டும் எறும்புகளிடம்
பகிர்ந்துண்ணும் பழக்கத்தை
கற்றுக் கொள்ள
வேண்டும் காக்கைகளிடம்
நன்றிப் பெருக்கை
கற்றுக் கொள்ள வேண்டும்
நாய்களிடம் தீயவர்களிடம்
கிடைக்காது தூய நட்பு
தூயவர்களிடம் இருக்காது
தீய நட்பு நல்ல
நட்புக்கு
இலக்கணம்
வகுத்து
பழகும்
தூயவர்களின்
உறவே
சிறந்தது !



**வி.கே.லக்ஷ்மிநாராயணன்**



### "போலி மருத்துவர் எமதூதர்"

ஸ்டெதஸ்கோப்
வீச்சரிவாளாய் மாறிய நாள்
முதல் உங்கள் அறை
மருத்துவமனை அல்ல
மறைமுக சவக்கூடம்!
கிளினிக் அல்ல
கில்லிங் இல்லம்!

நீங்கள் மருத்துவர் அல்ல
மனிதனைச் சுரண்டிச்
சாப்பிடும் மரண
வேட்டையாடிகள்!

ஒரு துளி லாபத்திற்காக
நூறு துளி ரத்தம்,
ஒரு பெட்டி காசுக்காக
ஒரு குடும்பத்தின்
மொத்த எதிர்காலத்தையும்
நீங்கள் அடக்கம்
செய்கிறீர்கள்!

ஒரு கையால் நாடி பிடித்து,
மறு கையால் காசை
பிடுங்குகிறாய்! அந்த
இடைவெளியில் ஒரு உயிர்
ரத்தமாகச் சிதறுகிறது?

மருந்துச் சீட்டில்
எழுதப்பட்டிருப்பது
மரண விலை!
சாவுச் சந்தா!

அறுவை மேசையில்
வெட்டப்படுவது
உடலல்ல... வறியவன்
வம்சம்! ஒவ்வொரு
வெட்டிலும் தெறிப்பது
குருதியல்ல...
நம்பிக்கையின் நாற்றம்!

படிக்காமலே பட்டம்,
பயிற்சியில்லாமலே
சிகிச்சை! தவறான ஊசி
நோயாளியின் நாளத்தைத்
துளைக்க, சிவப்பு உண்மை
உலகிற்கு வெளிப்படுகிறது!

ஒருநாள் உங்கள்
முகமூடிகள் கிழியும்...அன்று
வெள்ளை கோட்டு கழன்ற
பிறகு மிஞ்சுவது ஒன்றே
கைகளில்
காயாத ரத்தம்,
நெஞ்சில்
காயாத பாவம்!



**முகில்**
**தினகரன்**
கோயமுத்தூர்

விட்டு விடுதலையாகி...!
என்னைப் பின்தொடர்வதில்
உனக்கெதுவும்
கிடைக்கப்போவதில்லை.
என்னைப்புறந்தள்ளுவதாலும்
பெரிதாய் நிகழப்போவ
தொன்றுமில்லை. சேர்ந்தே
என்னோடு நீ வருவதிலும்
சிறிதளவும் எனக்கு
சம்மதமில்லை.

விட்டு விடுதலையாகிப் போ
உன் சிறகுகள் செல்லுமிட
மெங்கும்.



ஆகக்கூடி
வரும் ஒரு
ஊழிக்காலத்தில்
சந்திப்போம்
நமது அன்பின்
வலிமையைச் சொல்ல.

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா**
செஞ்சிக்கோட்டை



புத்தம் புது மலராய் தெரியும்
இவள் முகத்தில் எத்தனை
மகிழ்ச்சி

நித்தம் வேண்டிக் கொண்ட
ஒன்று நடந்து முடிந்து வெற்றி
கண்டதோ

முயற்சியின் முழுமை தன்னை
கண்டாளோ? முற்றிலும்
புன்னகை தவழ வந்தே



சுற்றுப் புறமும்
சுகந்தம் வீசிட
சுந்தரி வந்து
அமர்ந்து
கொண்டாள்

**வி.பிரபாவதி**
மடிப்பாக்கம்



### நம்பிக்கை

நம்பிக்கை என்ற ஒரு
விதையை மனதில்
விதைத்தால் காலத்தின்
மழையில் மெதுவாக
முளைக்கும்.தோல்வி என்ற
காற்று அடித்தாலும் வேர்கள்
தாங்கிப் பிடிக்கும்.
இருளில் கூட ஒளியைத்
தேடி வளரும். கண்ணீர்
துளிகள் உரமாக மாறும்.
கனவுகள் வானில்
இலைகளாய் விரியும்.
இன்று சுமையாகத்
தோன்றும் பாதை,
நாளை இனிமையான
பயணமாக மாறும்.
நம்பிக்கை உள்ளவன்
விழுந்தாலும் எப்படியும் வீறு
கொண்டு எழுவான்.
விடியல் அவனைத் தழுவும்.
நம்பிக்கை என்ற விதை
மனதில் விதைக்கப்படுவதால்
காலத்தின் மழையில்
மெதுவாக முளைக்கும்.
தோல்வி என்ற காற்று
அடித்தாலும் வேர்கள் ஊன்றி
நிற்கும். இருளில் கூட
ஒளியைத் தேடி வளரும்.
கண்ணீர் துளிகள் உரமாக
மாறும். வானில் கனவுகள்
இலைகளாய் விரியும்.
இன்று சுமையாகத்
தோன்றும்
பாதை,
நாளை
இன்பமான
பயணமாக
மாறும்.
விடியல்
அவனைத் நிச்சயம் தழுவும்.



**உ.மு.ந.ராசன்கலாமணி**
கோயம்புத்தூர்.

### அவள் பெயர் தமிழரசி !

திடீரென முகநூலில் நட்பானாள் அவள் !

நான் எழுதிய கவிதைகளுக்கு விரல்களால் லைக் போட்டு
என் மனதை கவர்ந்திருந்த அவள் பெயர் தமிழரசி !

ஒருவேளை அவள் தமிழ் அறிஞர்கள் பாரம்பரிய குடும்பமாய்
இருப்பாள்.. என்ற நோக்கத்தில் அவளை கவர தமிழ் இலக்கிய
நூல்களைப் படித்து இலக்கியத்தை புனைந்து... |
அவளைப் பற்றி கவிதை எழுதி முகநூலில் பதிவிட்டேன்....

உடனடியாய் அவளிடம் இருந்து பதில் வந்தது !
"ஹாய் ...யுவர் போயம் ஆர் பியூட்டிஃபுல்,...
ரியலி லைக் யூ அண்ட் யுவர் போயம்ஸ்.. !"



என்ற தமிழரசியின் பதில் பதிவில் இருந்து
இப்போது
"30 நாட்களில் ஆங்கிலம் கற்பது எப்படி !'
என்ற புத்தகத்தை படிக்க துவங்கியுள்ளேன் !.

**எம்.பி.தினேஷ்,** கோவை

### தலை பாரம்

வைகுந்த வாசனின்
ஆஸ்தான பக்திமான்..
வெகுநாள் இழுத்த
வழக்கொன்று முடிய..
வந்த சொத்தில் பாதி விற்று..
கண்ணனுக்கு செய்தான்
அழகு கிரீடம்..

நல்ல நாள் பார்த்து ..
பாந்தமாய் அவனுக்கு
அர்ப்பணித்து. மனம்
நிறைவாய் துயில
வந்தவன் அரண்டானே!

பக்தா.. உன் கிரீட பாரம் ..
சுமக்க வலி வந்ததடா
எனக்கு.. கண்ணன் குரல்
கனவில் கேட்டு..
குழம்பிய பக்தனவன்..

விற்ற சொத்தின் நிலை
பார்க்க.. வாங்கிய
மகானுபாவன்..
அங்கிருந்த குடிசைகளை
அகற்றியிருந்தான்..

மக்கள் மரத்தடியிலும்
கிடைத்த நிழலிலும்..
கண்ணீருடன் ஒண்டிருந்ததை
பார்த்தே.. அனைவருக்கும்
அடைக்கலம் தந்தார்
தன் மீதி நிலத்திலே..

பொது தோட்டம்
ஒன்று போட்டு..
விளைவித்தவை
அவர்களுக்கே.. என்றே
சொல்லிவிட உற்சாகமாய்
உழைத்தனரே மக்களும்..
செய்தி வந்து
கோவிலிலிருந்து..
சாத்தியிருந்த தங்க கிரீடம் ..
ஜொலிக்குதே வைரம் போல..
மக்களும் கூடி
தரிசிக்கின்றனர்
அலை போலே..

ஓடினார் சந்நிதிக்கு
தலைக்குமேல்..
கூப்பிய கரங்களுடன்
கண்ணீர் மாலையாக
சொரிய..


மந்தகாசப் புன்னகையுடன்
கண்ணவன்
காட்சியளித்தான்..
மயிற்பீலி குறைகிறதே
பக்தனே என கேட்ட
குரலுக்கு..

முதல்நாள் தோட்டத்தில்
மயிலொன்று உதிர்த்த
பீலியை.. வேட்டி மடிப்பில்
வைத்திருந்ததை கொடுக்க..

கிரீடத்தில் அதனை
பொருத்த.. பக்தி ரசம்
சொட்ட..மனம்
குளிர்ந்தது அந்த
பரந்தாமனோடு..
அக்குடிசை மக்களுமே..



**உமாதேவி சேகர்**
பியூட்டிஷியன்
தஞ்சை





தாய்வீட்டுப் படியிறங்கிக் கணவன் வீட்டுத்
தாழ்ப்பாளைத் திறந்துள்ளே வந்த பின்பு
வாய்க்குள்ளே தன்விருப்பம் விழுங்கிக் கொண்டு
வந்தவீட்டின் புன்னகையாய்த் திகழுகின்றாள் !
சேய்பருவ நினைவுகளைத் தந்தை தாயை
சேர்ந்திருந்த தம்பிதங்கை சுற்றம் தன்னைப்
பாய்சுருட்டி மூலையிலே வைத்தாற்போலப்
பக்குவமாய் மனத்திற்குள் ஒதுக்கி வைத்தாள் !

ஒருமார்பில் காமத்தை மற்றோர் மார்பில்
ஒப்பற்ற தாய்மையெனும் பாலை ஊட்டி
இருமார்பின் இடையினிலே அவளுக்காக
இருக்கின்ற இதயத்தை மறைத்து வைத்துத்
திருவான கணவனுக்கோ உடலில் பாதி
திகழ்கின்ற குழந்தைக்கு மீதி என்றே
உருவத்தை இருவருக்காய்த் தேய்த்துக்கொண்டு
உன்னதமாய்க் காக்கின்றாள் குடும்பந்தன்னை !

அத்தைக்கு எதுபிடிக்கும் மாமனார்க்கும்
அன்பான கணவனுக்கும் குழந்தை கட்கும்
அத்தைமகள் நாத்திக்கும் கொழுந்தனார்க்கும்
அவரவரின் விருப்பத்தை நிறைவு செய்து
குத்துவிளக் காய்வீட்டை ஒளிர வைத்துக்
குலம்தன்னைக் காக்கின்றாள் பெருமை
சேர்த்துவித்தாக செடியாக மரமுமாக
விளங்குகின்ற மனைவிதனைப்
போற்றுளவோமே !



**பாவலர் கருமலைத்தமிழாழன்**



### என்ன வளம் இல்லை நம் தமிழ் மொழியில் ! ஏன் ? கையை ஏந்த வேண்டும் பிற மொழியில்!

உலகின் முதல் மனிதன் பேசிய மொழி தமிழ் !
உலகம் முழுவதும் பரவியுள்ள மொழி தமிழ் !
உலகின் முதல்மொழி தமிழ்மொழி என்பதை
உரைத்தார் அன்றே பன்மொழி அறிஞர் பாவாணர் !
பன்னாட்டு ஆட்சிமொழியான மொழி தமிழ் !
பண்டைக் காலம் முதல் ஆளுமை மொழி தமிழ் !
இணையத்தில் வாகை சூடிய மொழி தமிழ் !
இதயத்தில் இடம் பிடித்த மொழி தமிழ் !
மூவேந்தர்கள் போற்றி வளர்த்த மொழி தமிழ் !
மூத்த புலவர்கள் கட்டிக் காத்த மொழி தமிழ் !
எழுத்து பேச்சு இரண்டிலும் வாழும் மொழி தமிழ் !
இணையில்லா திருக்குறளை ஈந்தமொழி தமிழ் !
மொழி அறியாதவர்களும் ரசிக்கும் மொழி தமிழ்
மொழியின் பால் ஈர்ப்பு சக்தி உள்ள மொழி தமிழ் !
செம்மொழி நம் மொழி உணர்வாய் தமிழா !
செம்மையைக் காத்திட முயல்வாய் தமிழா !
கலப்பு தாவரத்தில் நன்மை தரலாம் !
கலப்பு மொழிக்கு தீமையே தந்திடும் !
கலப்படம் உணவில் தண்டனைக்குரிய குற்றம் !
கலப்படம் மொழியில் புரிவதும் குற்றமே !
இலக்கண இலக்கியம் நிறைந்த மொழி தமிழ் !
எண்ணிலடங்கா சொற்கள் மிகுந்த மொழி தமிழ் !
இயல் இசை நாடகம் நிறைந்த மொழி தமிழ் !
இனிய முத்தமிழில் இனிய மொழி தமிழ் !
தமிங்கிலப் பேச்சிற்கு முடிவுரை எழுதுங்கள் !
தமிழை தமிழாகவேப் பேசிட முயலுங்கள் !
ஆயிரம் மொழிகள் உலகில் இருந்தாலும்
அழகு தமிழுக்கு எந்த மொழியும் ஈடாகாது
தமிழன் பெருமையை நெஞ்சில் நிறுத்து !
தமிழோடு பிற மொழி கலப்பதை நிறுத்து !
இல்லாதவன் பிச்சை எடுத்தல் நியாயம் !
இருப்பவன் பிச்சை எடுத்தல் அநியாயம் !
என்ன வளம் இல்லை நம் தமிழ் மொழியில் !
ஏன் ? கையை ஏந்த வேண்டும் பிற மொழியில்!



**கவிஞர் இரா .இரவி .**



### விடியும் காலை

கதிரவன் உதித்து கண்வழிப்
புகுந்து விழித்துப் பார்த்து
விரைந் தெழுந்து

காலைக் கடன் முடித்து
குளித்து கம்பங் களியும்
துவையலும் உண்டு
காளை மாட்டைப் பூட்டிப்
புறப்பட்டான் சந்தையில்
சென்று வியாபாரம் செய்ய

நாலு காசு பாக்கணும்
கையில கவுரதியா வாழ்ந்திட
வேணுமில்ல

**வி.பிரபாவதி**
மடிப்பாக்கம்


Breaking NEWS Card.com
www.breakingnewscard.com
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
₹999 ONLY


ADVERTISE WITH US!
CONTACT US
9337501889


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை / மணப்பெண்ணைப் பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


முனீஸ்வரர் துணை
RG
கங்கோதரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80% OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots
*Flats
*House
*Villa
*Bungalows
*Farm Land
*Ware Houses
*Factory Sites
*Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call:7871617005


அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மிக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009


SEVEN STARS LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

We Are Urgently **Hiring!**

**Marketing Manager**
Ad Sales (Print Media)

Package Rs. 4.8 LPA

Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai

Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.

**Key responsibilities for Marketing Manager**

- Minimum 5 years of experience in print media ad sales
- Proven experience in space selling
- Strong background in field sales and client acquisition
- Excellent communication and negotiation skills
- If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you

If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com

**Call: 9337501889**

VILAMBARAM
**WANTED**
10 SMART FEMALE
**Telecallers**
Job Type: Full-time
Education : Bachelor's degree
Freshers And Experience
Both can apply.



SEO & DIGITAL MARKETING COMPANY SINCE 2020
Don't miss this opportunity
INTERESTED CANDIDATES CAN APPLY
+91 9337501889
+91 7789941009
Job @ CHENNAI
www.vilambaram.com

**உடன்குடியில் ஸ்ரீவேல்முருகன் டெக்ஸ்டைல்ஸ்**
ஜவுளி, நகைக்கடையில் வேலைக்கு ஆண்கள், பெண்கள் தேவை.
தகுதிக்கேற்ப சம்பளம்.
Ph: 81442 27771



WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756

**Vilambaram**
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS



VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599

**ஆட்கள் தேவை**
1.Supervisor with any post graduate degree Age 45 above to 55
2.Security 2 Persons
3.Garderner
செடிகளை பராமரிக்க வேண்டும்
தேவதாஸ் மருத்துவமனை வளாகம்
நித்திரவிளை,
கன்னியாகுமரி மாவட்டம்
Cell : 6382807831

MLM PERFECT
LIMITED OFFER HURRY UP!
Cryptocurrency
**MLM Software**
Development
RS.19999/-
Onetime, No hidden cost
Contact Us
Visite Our Website
www.mlmperfect.com
Call US
9853719337,7436914247

**WANTED**
**NEWS COORDINATOR**



Salary Rs. 25000 Plus
*Salary is not a constraint for right candidate

**Responsibilities:**
1. Appoint Reporters and Photographers in Tamil Nadu Districts and Taluks
2. Will coordinate with reporters and the news desk
3. Should have a minimum of six years of experience in a print and TV newsroom.
4. Will report to the editors at the Chennai office

PRGI No. TNBIL/25/A1569
வைகறையில் **பேப்பர்பாய்**
Send CV to padmamediapublications@gmail.com
Call 9337501889

தூத்துக்குடி, திருநெல்வேலி சிப்காட் பகுதியில் உள்ள பிரபல பன்னாட்டு நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை. (ஆண்கள் மட்டும்)
ASST. செக்யூரிட்டி ஆபிஸர்
சம்பளம் : 27500 (Ex.Serviceman)
செக்யூரிட்டி சூப்பர் வைசர்
சம்பளம் : 24506 (Ex.Serviceman)
செக்யூரிட்டி கார்டு
சம்பளம் : 20701 (Civil)
8 மணி நேர வேலை
System work தெரிந்தவர்களுக்கும், முன் அனுபவம் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்
படிப்பு : 10th Pass அதற்குமேல்
வார விடுமுறை உண்டு
வருடாந்திர ஊதிய உயர்வு
ESI / PF / போனஸ் உண்டு
வயது : 25 முதல் 50 வயது வரை
தங்கும் வசதி செய்து தரப்படும்
குறைந்த விலையில் உணவு வசதி செய்து தரப்படும்
98949 99422
99941 34169
81109 77577

**VINAYAGA ENTERPRISES**
Repairing & Service Of :
A/C, Fridge, Washing Machine, Microwave
Mr.Karthik - Mob:9962116238



Address:- No. 10, Seniamman Koil Street, Tondiarpet, Chennai-600081


Launch Your Own Secure Crypto MLM Software Today!
@4999/- onwards



CALL: 98537 19337, 74369 14247
www.mlmperfect.com



# பல்சுவை களஞ்சியம்




## இலக்கு....



இலக்கு. இலக்கின்றி நடப்பது கூட ஒரு இலக்கு தான்.

எந்த இலக்கை கைக் கொள்வது?? மாய உலகில் ஒவ்வொரு கணமும், எல்லாம் மாறிக் கொண்டிருக்கிறது. நம் இலக்குகளும் ஒன்றை அடைந்த பின் அடுத்தது உருவாகிறது. உருவாகுவதும், வெல்வதும் , பெறுவதும், இழப்பதுமே இலக்குகளின் அடிப்படையாகிறது.

என்றாலும் , ஏதோ ஒன்றைத் தேடிக் கொண்டு ஏதோ ஒன்றை நோக்கி நடை போடுவதே வாழ்க்கை.

விரிந்து கிடக்கிறது நம்முன் பாதை . உதிர்ந்து கிடக்கிறது சருகுகள். முன் சென்றவர்களின் காலடித்தடம் பதிந்து இருக்கிறது. அதில் கால் வைக்கும் போகலாம். அதை ஒதுக்கியும் போகலாம்.

வசதியான, சௌகரியமான பாதை என்றால் காலடித்தடத்தை பின்பற்றலாம். போராடும் குணமும், எதிர்த்து நிற்கும் துணிச்சலும் இருந்தால் அந்தத் தடங்களை ஒதுக்கி விட்டுப் போகலாம்.

எப்படி இருந்தாலும் பாதையில் நடந்து போவதே கட்டாயம். எங்கோ தெரியும் ஒரு புள்ளி வெளிச்சத்தை நோக்கி, ஏதோ ஒரு பாதையில் நாம் நடந்து சென்றே ஆக வேண்டும் .

எனவே அந்தப் பாதையில் நடப்பதையே நம் இலக்காகக் கொள்ளலாம் . அதுவும் நமக்கு ஒரு மகிழ்ச்சிதானே. விழாமல், விழுந்தாலும் எழுந்து, நடை போட்டுக் கொண்டே போவது தான் வாழ்வின் குறிக்கோளாக இருக்க வேண்டும். அதுவும் ஒரு ஆனந்தம். அதுவே நம் இலக்கும்.




-G. Prabha

## கணிதவியலாளர்களால் கண்டுபிடிப்பு

கணிதத்தில் எந்த ஒரு எண்ணுமே ஒன்றிலிருந்து பத்துக்குள் இருக்கும் எல்லா எண்களாலும் வகுக்கப்பட முடியாது.
ஆனால் ஒரு எண் மட்டும் உலக அளவில் இருக்கும் கணிதவியலாளர்களால் புதிராகப் பார்க்கப்பட்டது. அவர்களுக்கு ஒரு அதிர்ச்சியைக் கொடுத்தது என்று கூடச் சொல்லலாம். இந்த எண் பாரதத்தின் அசைக்க முடியாத திறமை வாய்ந்த கணிதவியலாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த எண் : 2520

மேலோட்டமாகப் பார்த்தால் எத்தனையோ எண்களில் இதுவும் ஒன்று என்று தோன்றும்.
ஆனால் அப்படி அல்ல. உலகக் கணிதவியலாளர்களால்




கடந்து போக முடியாத ஆச்சர்யத்தை அவர்களுக்குக் கொடுத்த ஒரு எண் !

ஏனெனில் 1 - 10க்குள் உள்ள எந்த ஒரு எண்ணாலும் - அது ஒற்றைப்படை எண்ணோ அல்லது இரட்டைப்படை எண்ணோ - வகுக்கப்படக் கூடிய எண்ணாக அது இருந்தது தான் !

இது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடும் : முடியவே முடியாது என்று கூடத் தோணும்.

கீழேயுள்ள கணித அட்டவணையைப் பாருங்கள் :

2520 ÷ 1 = 2520
2520 ÷ 2 = 1260
2520 ÷ 3 = 840
2520 ÷ 4 = 630
2520 ÷ 5 = 504

2520 ÷ 6 = 420
2520 ÷ 7 = 360
2520 ÷ 8 = 315
2520 ÷ 9 = 280
2520 ÷ 10 = 252

இதன் மர்ம முடிச்சை அவிழ்த்தது:

[7 × 30 × 12] - இந்தப் பெருக்கல் தான் !

நமது பாரதம் பின்பற்றிய ஆண்டுக் கணக்குப்படி இந்தப் புதிருக்கு ஒரு விடை கிடைத்து விட்டது.

இந்த எண்ணை ஒன்றிணைத்தவை (coefficient)

வாரத்திற்கு நாட்கள் - 7

மாதத்திற்கு நாட்கள் - 30

ஒரு ஆண்டுக்கு மாதங்கள் - 12

[7 × 30 × 12 = 2520] This is the characteristic and dominance of time.

(This is the characteristic and dominance of time - இந்த சொற்றொடரை மிகச் சரியாக தமிழில் மொழி பெயர்க்க தெரியவில்லை. அதனால் அதை அப்படியே கொடுத்திருக்கிறேன்.)

இறுதியாக.. இதைக் கண்டு பிடித்த அந்த அற்புதமான மூளைக்கு உரியவர் -

திரு. ஸ்ரீனிவாச இராமானுஜம் அவர்கள்.

அந்த வணக்கத்துக்குரிய மாமேதையை.. மாமனிதரை நாம் தலை தாழ்ந்து வணங்குவோம்.



-நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி

## மீம்ஸ்







## விடுகதை



| | |
|---|---|
| வாயில் இருந்து நூல் போடுவான், மந்திரவாதி இல்லை; கிளைக்கு கிளை தாவுவான் ஆனால் குரங்கு இல்லை; வலை விரித்து பதுங்கி இருப்பான் ஆனால் வேடன் இல்லை அவன் யார்? | சிலந்தி |
| நீளவால் குதிரையின் வால் ஓடஓடக் குறையும் அது என்ன? | தையல் ஊசியும் நூலும் |
| எவர் கையிலும் சிக்காத கல், எங்கும் விற்காத கல் அது என்ன? | விக்கல் |
| கண்ணால் பார்க்கலாம் கையால் பிடிக்கமுடியாது அது என்ன? | நிழல் |
| செய்தி வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே அவன் யார்? | தொலைபேசி |
| அள்ள முடியும் ஆனால் கிள்ள முடியாது அது என்ன? | தண்ணீர் |

## ஜோக்ஸ்



ஆசிரியர்: மின்னல் தெரிந்தபிறகு ஏன் இடி இடிக்கிறது .

மாணவன்: கண்களுக்கு பின்னால் தானே சார் காது இருக்கிறது அதனால்தான் சார்.
========================

"உங்க வீட்ல சிரிப்பு சத்தமாயிருக்கே, ஏன்?"

"எங்க வீட்டு டிவி ரிப்பேர், அதுதான் !"
========================

"அந்தக் கட்சிக் கூட்டத்தில எல்லோரும் சேர்ந்து அழறாங்களே , ஏன்?"

"அங்கே 'துயர் மட்டக் குழு கூட்டம்' நடக்குதாம்"
========================

"இன்னைக்கு நான் ஆபீஸ்ல பட்டினி கிடந்து வேலை செஞ்சேன்"

"அவ்வளவு பிசி ஒர்க்கா?"

"இல்ல; சாப்பாட்டு நேரத்தில என்னை யாரும் எழுப்பிவிடலை"
========================


"தொழில் படுத்திடுச்சின்னீங்களே , என்ன தொழில்?"

"பாய் வியாபாரம் !"
========================
==================

டாக்டர்: "நீங்க உடம்பைக் குறைக்கணும்; இனிப்பைக் குறைக்கணும்; காரத்தைக் குறைக்கணும்"

நோயாளி: "டாக்டர், நீங்க ஃபீசை குறைக்கணும்"
========================

ஒருவர்: "தாமஸ் ஆல்வா எடிசன் பல புதிய கண்டுபிடிப்புக்களைக் கண்டுபிடிக்காமலிருந்தால்



என்னவாயிருக்கும்?"

மற்றவர்: "வேற ஒருத்தர் கண்டுபிடிச்சிருப்பார்"
========================

நீதிபதி : " அந்த வீட்டுப் பூட்டை உடைத்து ஏன் திருடினாய்?"

திருடன்: "என்னோட சாவி எதுவுமே அந்தப் பூட்டைத் திறக்காததால கடைசியா பூட்டை உடைக்க வேண்டியதாப் போச்சிங்க"
====================
====================

தொண்டர் 1
"தலைவர் ரொம்ப அப்பாவியா இருக்காரா, எப்படி?"

தொண்டர் 2 : " சலூன்ல துண்டைப் போர்த்தினதுமே, 'எந்த வட்டத்தின் சார்பில போடுறே'ன்னு கேட்கிறாரு"
====================

"வாழைப் பழம் ஒன்னு எத்தனை ரூபாய்ங்க?"

"ஒரு பழம் ரெண்டு ரூபாய்ங்க"

"ஒன்னரை ரூபாய்க்கு கொடுங்களேன்"

"ஒன்னரை ரூபாய்க்கு தோல் மட்டும்தான் கிடைக்கும்"

"அப்படின்னா ஐம்பது பைசாவுக்கு பழம் மட்டும் கொடுங்க"
=====================

"இந்த ஆசிரியர் வித்தியாசமானவரா, எப்படி?"

"பதிலை சொல்லிட்டு, இதனோட கேள்வி என்னனு கேட்பார்"
========================

"டாக்டர், நான் யார் பேச்சையுமே கேட்குறதில்லை"

"அதை என்னிடம் வந்து ஏன் சொல்றீங்க?"

"காது சரியா கேட்கலை; அதை சரி பண்ணுங்க டாக்டர் !"
==========

# வாழ்வுதரும் ஆரோக்கியம்



## வேகவைத்த முட்டை ஆம்லெட்... எது சிறந்தது?



முட்டையை வேக வைத்தோ அல்லது ஆம்லெட் தயாரித்தோ ருசிக்கவே பலரும் விரும்புகிறார்கள். இதில் எதை சாப்பிடுவது சிறந்தது என்ற கேள்வியும் அவ்வப்போது எழுவதுண்டு. குறைந்த கலோரியுடன் உடல் எடையை சீராக நிர்வகிக்கும் உணவு பழக்கத்தை மேற்கொள்ள ஆர்வம் காட்டுபவர்களுக்கு வேகவைத்த முட்டை ஏற்றது.

இது எளிதாக ஜீரணமாகும். செரிமான பிரச்சினை உள்ளவர்களுக்கும் ஏற்றதாக அமையும். இதில் புரதம் அதிகம் உண்டு. எலும்பு ஆரோக்கியத்திற்கு தேவையான வைட்டமின் டி, மூளை செயல்பாட்டிற்கு அவசியமான வைட்டமின் பி12 ஆகிய ஊட்டச்சத்துக்களையும் வழங்கும். வேகவைத்த முட்டைகள் கொழுப்புகள் சேர்க்கப்படாமல் ஊட்டச்சத்துக்களை தக்கவைக்கும் தன்மை கொண்டது.

ஆம்லெட் விரும்புபவர்கள் அதில் ஊட்டச்சத்துமிக்க காய்கறிகளை சேர்த்து உட்கொள்வதுதான் சிறந்தது. அதிலும் நார்ச்சத்து நிறைந்த காய்கறிகள், ஆரோக்கியமான கொழுப்பு நிறைந்த பொருட்களை ஆம்லெட்டில் சேர்த்து உட்கொள்ள வேண்டும். அதேவேளையில் ஆம்லெட்டில் எண்ணெய் அதிகம் சேர்ப்பதை தவிர்க்க வேண்டும். கலோரி, கொழுப்பு உட்கொள்ளலை கட்டுப்படுத்த நினைப்பவர்கள் ஆம்லெட்டை தவிர்ப்பது நல்லது.

## ஒற்றை தலைவலி ஏற்படுவதை தவிர்க்கும் வழிகள்...



இன்றைய இறுக்கமான பணி சூழலில் மைக்ரேன் என்ற ஒற்றைத் தலைவலி ஏற்படுவது பலருக்கும் வழக்கமாக உள்ளது. பணி வாழ்க்கை அல்லது தொழில் வாழ்க்கையில் மன அழுத்தம் ஏற்படுவதை தவிர்க்க இயலாது. அதன் காரணமாக ஒற்றைத் தலைவலி ஏற்படுவதையும் தவிர்க்க இயலாது. ஆனால் ஒற்றைத் தலைவலி எந்த சூழ்நிலைகளில் உருவாகிறது என்பதை தெரிந்து கொண்டு அவற்றை புத்திசாலித்தனமாக தவிர்ப்பதன் மூலம் இந்த சிக்கலுக்கு ஒரு தீர்வு காணலாம் என்று மருத்துவர் வல்லுனர்கள் குறிப்பிடுகிறார்கள்.

ஒற்றைத் தலைவலி என்ற சிக்கலை பொறுத்தவரை சில உணவு முறைகளாலும் கூட ஏற்படலாம். அதாவது ஆல்கஹால் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகளாலும் கூட அது ஏற்படலாம். மோனோசோடியம் குளூட்டமேட் (MSG) மற்றும் செயற்கை இனிப்புகள் ஆகியவையும் அதற்கான காரணங்களாக இருக்கலாம்.

அத்துடன் தட்பவெப்ப நிலை மாற்றங்கள் மற்றும் பார்வையை பாதிக்கக்கூடிய பிரகாசமான மின்விளக்குகள், சுற்றுப்புறத்தில் உள்ள சப்தம், மனம் இருக்கும் வாசனைகள் ஆகியவை காரணமாகவும் ஒற்றைத் தலைவலி ஏற்படலாம்.

அது மட்டுமல்லாமல் உடல் நிலையில் ஏற்படக்கூடிய ஹார்மோன் மாற்றங்கள், குறிப்பாக பெண்களுக்கு மாதவிடாய் காலம் அல்லது கர்ப்ப காலங்களில் ஏற்படக்கூடிய ஹார்மோன் மாற்றங்களும் ஒற்றைத் தலைவலியை உருவாக்கலாம் என்று மருத்துவ ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது.

மேலும் ஒருவருடைய ஒழுங்கு முறையற்ற தூக்கம் முறைகள், அதிகப்படியான மன அழுத்தம், உணவு உண்ணும் நேரத்தை அல்லது உணவையே தவிர்ப்பது ஆகியவையும் ஒற்றைத் தலைவலிக்கு காரணமாக இருக்கலாம் என்று மருத்துவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஒரு சிலர் உடற்பயிற்சிகள் மீது உள்ள அதீத ஆர்வம் காரணமாக கடுமையாக உடற்பயிற்சி செய்வது, அதிகப்படியான உடல் உழைப்பு, மன பதற்றம் ஆகியவையும் கூட ஒற்றைத் தலைவலியை உருவாக்கலாம்.

பல்வேறு காரணங்களால் ஒற்றைத் தலைவலி ஏற்படலாம் என்று குறிப்பிட்ட மருத்துவ வல்லுனர்கள் அவற்றை தவிர்ப்பதற்கான வழிமுறைகளையும் தெரிவித்துள்ளார்கள். அது குறித்த தகவல்களையும் இங்கே பார்க்கலாம்.

உடலில் போதுமான அளவு நீர்ச்சத்து இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். ஏனென்றால் உடலில் நீர்ச்சத்து இல்லை என்றாலும் கூட அது ஒற்றைத் தலைவலிக்கு காரணமாக அமையலாம். அன்றாடம் உண்ணும் உணவு வகைகளில் கண்டிப்பாக பதப்படுத்தப்பட்ட, துரித உணவு வகைகளை தவிர்ப்பது அவசியம். தேவைப்பட்டால் மட்டும் காபி அல்லது தேநீர் அருந்தும் பழக்கத்தை ஒழுங்குபடுத்திக் கொள்வதும் அவசியமானது.


ஒற்றைத் தலைவலியை குணப்படுத்துவதற்கு சீரான உறக்க முறைகளை ஒருவர் கடைபிடிப்பது அவசியம் ஆகும். இரவு குறிப்பிட்ட நேரத்தில் படுக்கைக்கு செல்வது, குறிப்பிட்ட நேரத்தில் படுக்கையில் இருந்து எழுந்து அன்றாட பணிகளை செய்வது என்ற ஒரு சீரான அட்டவணையை பின்பற்றுவதன் மூலமாகவும் ஒற்றைத் தலைவலியை வராமலேயே தடுக்க முடியும்.

ஊட்டச்சத்துக்களை பொறுத்தவரை விட்டமின் பி-2 என்று சொல்லப்படும் ரிபோபிளேவின் ஒற்றைத் தலைவலி ஏற்படாமல் தவிர்க்க உதவுவதாக ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

அதிகப்படியான உழைப்பு, மன அழுத்தம், இறுக்கம் ஆகியவற்றை தவிர்ப்பதன் மூலமாகவும் ஒற்றை தலைவலியை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள முடியும். எதிலும் அளவான போக்கை கடைபிடிப்பதன் மூலமாகவே உடலின் சமநிலையை பேணிக் காப்பதோடு மைக்ரேன் என்ற ஒற்றைத் தலைவலி போன்ற பிரச்சனைகளையும் தவிர்க்க முடியும் என்று தான் மருத்துவ வல்லுனர்கள் குறிப்பிடுகிறார்கள்.



## பெண்களும் இதயநோய்களும்...



இந்தியா உள்ளிட்ட 50 நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வு முடிவுகளில், ஆண்களை விட பெண்களே மோசமான இதய நோய்களால் அதிகம் பாதிக்கப்படும் அதிர்ச்சித் தகவல் வெளியாகி உள்ளது.

இந்தியா, பிரேசில், சீனா, எகிப்து, அரபு நாடுகள் மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட 50 நாடுகளில் இருந்து பெறப்பட்ட 15 ஆய்வு முடிவுகளின் அறிக்கை, மருத்துவ இதழ் ஒன்றில் வெளியிடப்பட்டுள்ளது.

23 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்களிடம் இருந்து பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இந்த ஆய்வறிக்கையில், ஆண்களை விட பெண்களே மோசமான இதய நோயால் அதிகளவில் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதயநோய் அறிகுறிகளை கண்டறிதல், சிகிச்சை ஆகியவற்றில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையேயான வித்தியாசம் பிரமிக்க வைக்கும் அளவுக்கு பெரிதாக உள்ளது. அறிகுறிகள் தோன்றிய பிறகு ஆண்களை விட பெண்கள் தாமதமாகவே மருத்துவமனையை அணுகுகின்றனர். ஆண்களுக்கு நிகரான விகிதத்தில் மருத்துவமனையில் பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

இதுமட்டுமின்றி, இளம் வயது பெண்களிடம் மாரடைப்பு விகிதம் அதிகரித்து வருவதையும் இந்த ஆய்வு சுட்டிக்காட்டி உள்ளது. கடந்த 1995-2014-க்கு இடைப்பட்ட காலத்தில், 35 வயது முதல் 54 வயதுடைய பெண்களிடையே மாரடைப்பு விகிதம் 21 சதவீதத்தில் இருந்து 31 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதுவே ஆண்களுக்கான விகிதம் 30 சதவீதத்தில் இருந்து 33 சதவீ மாக உயர்ந்துள்ளது.

பெண்கள் ஆண்டுதோறும் உடல் பரிசோதனை செய்து, தங்கள் உடல்நலனை கவனத்தில் வைக்க வேண்டும் என்பதையே இது காட்டுகிறது.

## ரத்த அழுத்தம், நீரிழிவு நோயை கட்டுப்படுத்தும் வெண்டைக்காய்



அதிக நார்ச்சத்து இருப்பதால் எடை குறைக்க உதவுகிறது.

இதய ஆரோக்கியத்தை ஆதரிக்கும் அதே வேளையில் ரத்த அழுத்தத்தை பராமரிக்க உதவுகிறது.

வெண்டைக்காய் சாப்பிடுவதால் ரத்த அழுத்தம், சர்க்கரை நோயாளிகளுக்கு மிகப்பெரிய பயனுள்ளதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

வெண்டைக்காய் ஏ பிரிவு ரத்த சர்க்கரையை ஒழுங்குபடுத்துகிறது

இது டைப் 2 நீரிழிவு நோய்க்கு சிறந்தது. செரிமானம், நீரேற்றம் மற்றும் வளர்சிதை மாற்றத்தை ஆதரிக்கிறது.

இதில் அதிக நார்ச்சத்து இருப்பதால் எடை குறைக்க உதவுகிறது.

இதய ஆரோக்கியத்தை ஆதரிக்கும் அதே வேளையில் ரத்த அழுத்தத்தை பராமரிக்க உதவுகிறது. இது வயிற்றுப் புண்களைக் குணப்படுத்துகிறது.

நீரழிவு நோயாளிகள் 8 வாரங்களுக்கு ஒவ்வொரு 6 மணி நேரத்திற்கும் 1000 மைக்ரோகிராம் வெண்டைக்காயை உட்கொள்வது சர்க்கரை குறைப்பில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இதையும் படியுங்கள்: ஒற்றை தலைவலி ஏற்படுவதை தவிர்க்கும் வழிகள்...

வெண்டைக்காயை காய்கறி உணவாகச் சாப்பிடுவதோடு மட்டுமல்லாமல், வெண்டைக்காய் தண்ணீரைக் குடிக்கலாம்.

2அல்லது 3 வெண்டைக்காய்களை எடுத்து, அவற்றை நன்கு கழுவி, முனைகளை வெட்டி, சிறிய பிளவுகளை உருவாக்குங்கள்.

அவற்றை தண்ணீரில் இரவு முழுவதும் ஊறவைத்து, தண்ணீரை வடிகட்டி, காலையில் வெறும் வயிற்றில் குடிக்கலாம்.

நார்ச்சத்து நிறைந்த இந்த பானம் செரிமானத்தை மெதுவாக்குகிறது. சர்க்கரை அதிகரிப்பதைத் தடுக்கிறது மற்றும் குடல் ஆரோக்கியத்தை ஆதரிக்கிறது.

இருப்பினும், சில சந்தர்ப்பங்களில், அதிகப்படியான நார்ச்சத்து வீக்கம் அல்லது லேசான வயிற்று அசவுகரியத்தை ஏற்படுத்தக்கூடும்,

வெண்டைக்காய் நீர் வளர்சிதை மாற்றத்தையும் மேம்படுத்துகிறது. மன அழுத்தம் மற்றும் தூக்கமின்மை போன்ற பிரச்சனைகள் தீரும், அதே நேரத்தில் வலிமை இயற்கையாகவே அதிகரிக்கும்," என்று இருதயநோய் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்

whatsapp No

8122664699

## தினமும் 10 நிமிடங்கள் ஓடுவதால் கிடைக்கும் நன்மைகள்

**மன ஆரோக்கியம்**

உங்கள் உடல் உங்களை மகிழ்ச்சியாக உணர உதவும் ரசாயனங்களை வெளியிடுகிறது.

**ஆஸ்துமாவை விரட்டும்**

ஆஸ்துமாவை நெருங்கவிடாமல் நுரையீரல் மற்றும் மூச்சுக்குழாய்களை வலுப்படுத்த உதவுகிறது.

**ரத்த அழுத்தத்தை சீராக பராமரிக்கும்**

ஓடும்போது தமனிகள் சுருங்கி விரிவடைவதால் ரத்த அழுத்தத்தை சீராக பராமரிக்கவும் உதவும்.

**நோய் எதிர்ப்பு சக்தி வலுப்படும்**

நோய்களால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்பு குறைவு. ஏனெனில் நோய் எதிர்ப்பு சக்தி வலுப்படும்.



**உடல் எடை குறையும்**

ஓடும்போது ஒரு மணி நேரத்திற்கு 705 முதல் 865 கலோரிகள் எரிக்கப்படும். உடல் எடையும் குறையும்.

**உடல் வலிமை**

ஓடுவதன் மூலம் உடல் வலிமை கூடுவதோடு தசை நாண்கள் மற்றும் தசைநார்கள் வலுப்படும்.

**எலும்பு அடர்த்தி அதிகரிக்கும்**

ஓடும் சமயத்தில் உடல் அழுத்தப்படும்போது எலும்புகளை வலுப்படுத்த அத்தியாவசிய தாதுக்களை அனுப்பும். ஓடுவதன் காரணமாக எலும்புகளை அழுத்துவதால், காலப்போக்கில் எலும்பு அடர்த்தி அதிகரிக்கும்.

**மூட்டுகளை வலிமைப்படுத்தும்**

ஓடுவதன் காரணமாக தசைநார்கள் மற்றும் தசைநாண் களின் வலிமையை அதிகரிப்பதன் மூலம் மூட்டு பகுதி வலிமை அடையும். அதனால் கணுக்கால், இடுப்பு மற்றும் முழங்கால்களில் காயங்கள் ஏற்படும் வாய்ப்பு குறையும்.

**நீரிழிவு நோயை குறைக்கும்**

ரத்தத்தில் சர்க்கரை அளவை பராமரிக்கச் செய்து நீரிழிவு நோய் அபாயத்தை குறைக்க உதவும்.

**எவ்வளவு நேரம் ஓடலாம்?**

தினமும் 20 முதல் 30 நிமிடங்கள் ஓடுவது நல்லது. அப்படி ஓட முடியாதவர்கள் 5 முதல் 10 நிமிடங்கள் ஓடுவது கூட உடல் உறுப்புகளுக்கு பலன் அளிக்கும்.

## ஹர ஹர மஹாதேவா




தை திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு அனைவரும் வாழ்வில் சிறந்து விளங்க வாழ்த்துகிறேன். வரும் 13.01.2026 செவ்வாய்க்கிழமை அன்று சந்த் மஹாசபாவின் மாநில அலுவலகத்தில் காலை சுமார் 10.00 மணி அளவில் தைப்பொங்கல் விழா கொண்டாட்டமும் அதைத் தொடர்ந்து நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட உள்ளதால் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்போடு அழைக்கிறோம்.

**தீபம் பா சண்முகம், மாநில பொதுச் செயலாளர், சந்த் மஹாசபா.**

## மழைநீர் வடிகால் அமைக்கும் பணி



சோழிங்கநல்லூர் - ஈஞ்சம்பாக்கத்தில், ரூ.98.88 கோடி மதிப்பீட்டில், மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை, அமைச்சர் மா.சுப்பிரமணியன், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., அரவிந்த் ரமேஷ் எம்எல்ஏ துவக்கி வைத்தனர்.

## மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்கள்



ஓசூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடந்த திருக்குறள் கலை இலக்கிய அறிவுசார் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## பாஜக சார்பில் மோடி பொங்கல் விழா



விருதுநகர் பாண்டியன் நகரில் பாஜக சார்பில் மோடி பொங்கல் விழா கொண்டாடினர்.

## பொங்கல் விழாவில் ஒயிலாட்டம்



கோவை ஏஜேகே கல்லூரியில் பொங்கல் விழாவில் கரகாட்டம், ஒயிலாட்டம் நடந்தது.

## பொழுது போக்கு பூங்கா திறப்பு



திருச்சி மாநகராட்சி தில்லைநகர், பொழுது போக்கு பூங்காவை அமைச்சர் நேரு மக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார்.

## 4-வது நாளாக காத்திருப்பு போராட்டம்



தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்க பணியாளர்கள் சங்கத்தினர் கோரிக்கைகளை வலியுறுத்தி தஞ்சையில் நேற்று 4-வது நாளாக காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## பொங்கல் பரிசுத் தொகுப்புகளை கனிமொழி எம்பி வழங்கினார்



தூத்துக்குடி மாநகராட்சி ஜெயராஜ் சாலையில் நியாய விலைக்கடையில் பொதுமக்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்புகளை கனிமொழி எம்பி வழங்கினார்.அமைச்சர் கீதாஜீவன், கலெக்டர் இளம்பகவத்உடன் உள்ளனர்.

## ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம் திறப்பு



திருப்பூர் மாவட்டம், எடையபாளையம் ஊராட்சி யில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடத்தினை அமைச்சர் சாமிநாதன் திறந்து வைத்தார்.

## நகராட்சி அலுவலக புதிய கட்டம் திறப்பு



திருமுருகன்பூண்டி நகராட்சி அலுவலக புதிய கட்டடத்தினை அமைச்சர் சாமிநாதன் திறந்து வைத்தார்.

## குத்துச்சண்டை போட்டியில் 3-ம் பரிசு பெற்ற மாணவி பூங்குழலி



மாநில அளவிலான குத்துச்சண்டை போட்டியில் 3-ம் பரிசு பெற்ற திருப்பூர் கோடாங்கிபாளையம் அரசு உயர்நிலைப்பள்ளி மாணவி பூங்குழலியை பள்ளி தலைமையாசிரியர் பாராட்டினார்.

## மாணவர்களுக்கு மடிக்கணினி



திருவள்ளூர் மாவட்டம் இந்து கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் உலகம் உங்கள் கையில்" நிகழ்ச்சியில் மாணவர்களுக்கு மடிக்கணினிகளை கலெக்டர் பிரதாப் முன்னிலையில் அமைச்சர் நாசர் வழங்கினார்.

## மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினி



திருச்சி கி.ஆ. ப. விஸ்வநாதன் மருத்துவ கல்லூரியில் மாணவ - மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினிகளை அமைச்சர் நேரு வழங்கினார்.

## தன்னார்வலர்களுக்கு, கைபேசி




உங்க கனவ சொல்லுங்க என்ற திட்டத்தின் துவக்கமாக, விருதுநகரில் நடந்த விழாவில் தன்னார்வலர்களுக்கு, கைபேசி இணைப்புகளை அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு வழங்கினர்.கலெக்டர் சுகபுத்திரா, சீனிவாசன் எம்எல்ஏ, சிவகாசி மேயர் சங்கீதா இன்பம், விருதுநகர் நகர்மன்றத்தலைவர் மாதவன் உடன் உள்ளனர்.

## பொங்கல் பரிசு தொகுப்பு



பண்ருட்டி சட்ட மன்ற தொகுதி சின்னப் பேட்டை ஊராட்சியில் பொங்கல் பரிசு தொகுப்பை அமைச்சர் சிவி கணேசன் வழங்கினார்.

## சுயவேலைவாய்ப்பு வழங்கும் தொடக்க விழா



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் பாஜக தன்னார்வ தொண்டு நிறுவன பிரிவின் சார்பாக சுயவேலைவாய்ப்பு வழங்கும் தொடக்க விழாவில் மாநிலத் தலைவர் நயினார்நாகேந்திரன் பங்கேற்றார்.

## தாராவி பகுதியில் அண்ணாமலை பிரசாரம்



மகாராஷ்டிராவில் உள்ளாட்சி தேர்தல் பிரசாரத்தில் தாராவி பகுதியில் பாஜக நிர்வாகி அண்ணாமலை பிரசாரம் செய்தார்.

## Umagine TN-2026 தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாடு




சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் நடைபெற்ற Umagine TN-2026 தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாட்டை முதல்வர் ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்து, பல்வேறு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டார்..

## கிரிக்கெட் இறுதிப்போட்டியில் வெற்றியாளர்களுக்கு பரிசுத்தொகை




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் மற்றும் சமத்துவம் போற்றும் திராவிடப் பொங்கல் விழாவை முன்னிட்டு நடைபெற்ற திருச்சுழி பிரிமியர் லீக் கிரிக்கெட் இறுதிப்போட்டியில் வெற்றியாளர்களுக்கு அமைச்சர் தங்கம் தென்னரசு, பரிசுத்தொகையையும் வெற்றிக் கோப்பைகளையும் வழங்கினார்-

## விரிவான தூய்மை பணி இயக்கம்



ராணிப்பேட்டை சிப்காட் தொழில் வளாகம்-1. 2 வது மெயின் சாலையில் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், சிப்காட் மூலம் சிப்காட் போகி எனப்படும் விரிவான தூய்மை பணி இயக்கத்தை அமைச்சர் காந்தி துவக்கி வைத்தார். உடன் கலெக்டர் சந்திரகலா.

## மாரத்தான் போட்டி சபாநாயகர் துவக்கி வைத்தார்



திராவிடப் பொங்கல் திருவிழாவை முன்னிட்டு, ராதாபுரம் சட்டமன்றத் தொகுதி - வள்ளியூரில் சுமார் 800 நபர்கள் பங்குபெற்ற ஆண்கள் மற்றும் பெண்களுக்கான மாரத்தான் போட்டியினை சபாநாயகர் அப்பாவு துவக்கி வைத்தார்.

## தை அமாவாசைத் திருவிழா கொடியேற்றம்



தூத்துக்குடி மாவட்டம், ஏரல் சேர்மன் அருணாசல சுவாமி திருக்கோயிலில் தை அமாவாசைத் திருவிழா கொடியேற்றத்துடன் நேற்று தொடங்கியது.

## அதிமுக பொதுச்செயலாளர் பாஜக மாநிலத் தலைவர் சந்திப்பு



அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமியை பாஜக மாநிலத் தலைவர் நயினார்நாகேந்திரன் நேற்று சந்தித்துப் பேசினார். அதிமுக துணைப்பொதுச்செயலாளர் முனுசாமி, பாஜக துணைத்தலைவர் ராமலிங்கம் உடன் இருந்தனர்.

## ரவுசு மணி

அன்பு என்பது ஒரு அழகான உணர்வு.... அதை உணரத் தெரியாதவர்களிடம் கொட்டி ஏமாறாதீர்கள். புரிந்தவர்களிடம் காட்டி அன்பு மழையில் நனைய செய்யுங்கள்..



**V.முத்து ராமகிருஷ்ணன்**

## கேலக்ஸி ஹெல்த் இன்சூரன்ஸ் நிறுவனம் சார்பில் மருத்துவ முகாம்

**தஞ்சாவூர், ஜன.10:**

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் கேலக்ஸி ஹெல்த் இன்சூரன்ஸ் நிறுவனம் சார்பாக முகவர்களின் நலன் கருதி ஒவ்வொரு மாதமும் பலவேறு மருத்துவ முகாம்களை ஏற்பாடு செய்து வருகிறது.

இந்த மாதத்தில் சீனா மருத்துவ முறை சார்ந்து நாக்கின் தன்மை அறிந்து மருத்துவ ஆலோசனை வழங்கும் முகாம் ஹோட்டல் டைமண்ட் மினி மஹாலில் நடந்தது.

முகாமில் கேலக்ஸி ஹெல்த் இன்சூரன்ஸ் முகவர்கள் குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்தார்கள்.l.ஹீலர் பாலமுருகன் தலைமையில் 70க்கும் மேற்பட்ட முகவர்கள் பரிசோதனை செய்யப்பட்டு, முறையாக உடல் பராமரிப்பு விழிப்புணர்வு



அளிக்கப்பட்டது. .

சிறப்பு விருந்தினராக கேலக்ஸி ஹெல்த் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் வைஸ் ப்ரெசிடெண்ட் கண்ணதாசன் சிறப்புரையாற்றினார்.

திருச்சி மண்டல மேலாளர் திரு. ஸ்ரீனிவாசன் ஜனவரி மாதம் முகவர்களின் வணிக போட்டியினை எடுத்துறைத்தார்.

நிறைவில் கும்பகோணம் டிவிசனல் மேனேஜர் .நவீன் அனைவருக்கும் நன்றி கூறினார்.



**ஆர்ப்பாட்டம் :** மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் பெயரை மாற்றியதை கண்டித்தும், விபி - ஜி ராம் ஜி சட்டத்தை திரும்ப பெற வலியுறுத்தியும், குழித்துறை சந்திப்பில் காங்கிரஸ் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடை பெற்றது.

# வேலைவாய்ப்பு கார்னர்

## மத்திய அரசு நிறுவனத்தில் வேலை: டிப்ளமோ முடித்தவர்களுக்கு அருமையான வாய்ப்பு

மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் ஒன்று கொச்சின் கப்பல் கட்டும் நிறுவனம். கேரள மாநிலம் கொச்சியில் உள்ள இந்த நிறுவனம் மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது. இதில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இது பற்றிய விவரங்கள் வருமாறு;

பணி நிறுவனம்: கொச்சின் ஷிப்யார்டு லிமிடெட் (சி.எஸ்.எல்) காலி இடங்கள்: 132

பதவி: ஜூனியர் டெக்னிக்கல் அசிஸ்டென்ட், ஸ்டோர் கீப்பர், உதவியாளர், ஆய்வக உதவியாளர் மற்றும் சீனியர் ஷிப் டிராப்ட்ஸ்மேன் உள்ளிட்ட பணியிடங்கள்

கல்வி தகுதி: டிப்ளமோ, பி.எஸ்சி., இளங்கலை பட்டப்படிப்பு, மூன்று ஆண்டுகள் பணி அனுபவமும் பெற்றிருக்க வேண்டும். வயது: 12-1-2026 அன்றைய தேதிப்படி 35 வயதுக்கு மிகாதவர்களாக இருக்க வேண்டும். அரசு விதிமுறைகளின்படி வயது தளர்வு உண்டு. தேர்வு முறை: ஆன்லைன் தேர்வு, செய்முறை தேர்வு விண்ணப்பிக்க கடைசி தேதி: 12-1-2026 இணையதள முகவரி: https://cochinshipyard.in/Careers

## சென்னை திருவொற்றியூரில் உள்ள தியாகராஜர் கோவிலில் வேலை வாய்ப்பு- 10 காலிப்பணியிடங்கள்

சென்னை திருவொற்றியூரில் பிரசித்தி பெற்ற தியாகராஜ சுவாமி திருக்கோவிலில் உள்ள காலி பணியிடங்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:

பணியிடங்கள்: இளநிலை உதவியாளர், சேகரிப்பு எழுத்தர், அலுவலக உதவியாளர், காவலர் (காவலர்), வேதபாராயணம், உதவி சமையல்காரர் (ஸ்வயம்பகம்) பிரிவுகளில் மொத்தம் 10 காலிப்பணியிடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: அலுவலக உதவியாளர் பணிக்கு 8 ஆம் வகுப்பு முடித்தவர்கள் விண்ணப்பிக்கலாம், ஜூனியர் அசிஸ்டண்ட், கலெக்ஷன் கிளர்க் பணிக்கு 10 ஆம் வகுப்பு முடித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். இதர பணியிடங்களுக்கு தமிழில் எழுத படிக்க தெரிந்து இருக்க வேண்டும். வயது வரம்பு: 18 முதல் 45 வரை

சம்பளம்: மாதம் ரூ.18,500 58,600 வரை

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி; உதவி ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோவில், திருவொற்றியூர், சென்னை 600019. விண்ணப்பிக்க கடைசி நாள்: 30.01.2026

தேர்வு அறிவிப்பினை படிக்க: https://thiruvottiyurvadivudaiamman.hrce.tn.gov.in/

# சுற்றுலா: நவகிரகங்கள் அனைத்தும் ஒரே நேர்கோட்டில்....

திருவாரூர் தியாகராஜர் கோயில், திருவாரூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இக்கோயில் மிகவும் பழமையானது. மிகப்பிரம்மாண்டமாக கட்டப்பட்டுள்ள பெரிய கோயில் இதுவாகும். எனவேதான் இக்கோயில் பெரிய கோயில் எனவும் அழைக்கப்படுகிறது.

ஆசியாவிலேயே மிகப் பெரிய தேராக புகழ்பெற்றுள்ள ஆழித்தேர் திருவாரூர் கோவில் தேராகும். தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் காவிரியின் தென்கரையில் அமைந்துள்ள 87ஆவது சிவத்தலமாகும். நவகிரகங்கள் அனைத்தும் ஒரே நேர்கோட்டில் நின்று தரிசனம் தரும் திருத்தலம்.

### தல வரலாறு

இவை சப்தவிடங்கத் தலங்கள் (ஏழு தலங்கள்) எனப்படும்.

இக்கோவிலில் தேவேந்திரனே வந்து பெருமானைப் பூசிப்பதாக நம்பிக்கை நிலவுகிறது.

கமலை என்னும் பராசத்தி தவம் செய்ததாக வரலாறு உள்ளது. பக்தர்கள் இதனை மிகச்சிறப்பாக கொண்டாடுகின்றனர்.

எல்லாச் சிவாலயங்களிலும் நடைபெறும் திருவந்திக்காப்பு நேரத்தில் இத்தலத்தில் சிறப்புடன் விளங்குவதாக கருதப்படுகிறது.

### தல சிறப்புக்கள்

பஞ்சபூத ஸ்தலங்களில் பூமிக்கான திருத்தலம் திருவாரூர். திருவாரூர் கோவில் சிதம்பரம் கோவிலைவிட பழமையானது

தியாகராஜரின் தலவரலாறு இன்றும் அறியப்படவில்லை.



இதற்கு சான்று ஞானசம்பந்தர் திருவாரூரில் கோவில் கொண்டது எந்நாளில் என 10 பாடல்களை பாடியுள்ளார். நட்பின் முக்கியத்தை உணர்த்த சுந்தரருக்கு தனி இடம்பெற்றுத் தந்த ஊர் திருவாரூர். இவ்விடத்தில் சுந்தரருக்காக சிவனே வீதியில் நடந்துசென்று பெண் கேட்டதாக நம்பிக்கை.

பசுவிற்கு நீதிவழங்க தன் மகனை தேரின் சக்கரத்தில் இட்டு கொன்ற நீதிவழுவா மனுநீதி சோழன் வாழ்ந்த ஊரிதுவாகும். எமனே சண்டிகேஸ்வரரை ஆட்கொண்டு எமபயம் போக்கும் இடம் இதுவாகும்.

### கட்டமைப்பு:

திருவாரூர் கோவில் அளவும் , தெப்பக்குளமும் ஒரே அளவுகொண்டதாகும்.



இக்கோவில் 9 இராஜகோபுரம், 80 விமானம், 12 உயர மதில்கள், 13 மண்டபங்கள், 15 தீர்த்த கிணறுகள், 3 தோட்டம், 3 பிரகாரம் என பிரமாண்டமான கட்டட அமைப்பாகும். 24 உட்கோவில்களையும், 365 சிவலிங்ககளையும், 86 விநாயக சிலைகளையும் கொண்ட திருத்தலம் திருவாரூர் ஆகும்.

### கோயிலின் சிறப்புக்கள்:

இத்தலத்தின் தேர், திருவிழா, திருக்கோவில், திருக்குளம் ஆகியன மிகப் பெருமை வாய்ந்தது. திருவாரூர்த் தேர் அழகு. ஏழு கோபுரங்களைக் கொண்டது இத்திருக்கோயில். கீழ்க்கோபுரம் 118 அடி உயரம் கொண்டது; இத்தலம் வீதிப் பிராகாரங்களையும் சேர்த்து ஐந்து பிராகாரங்களைக் கொண்டுள்ளது.

கோயில் ஐந்து வேலி, குளம் ஐந்து வேலி (கோயில் ஐந்துவேலி, குளம் ஐந்துவேலி, ஓடை ஐந்துவேலி என்பது இங்கு வழங்கப்படும் பழமொழி) என்று போற்றப்படும் மிகப் பெரிய சிவாலயமும், கமலாலயம் என்ற தீர்த்தமும் உடையத் தலம்.

### எப்படி செல்வது?

திருவாரூர், மாநிலத்தின் முக்கிய நகரங்களான திருச்சி மற்றும் சென்னையில் இருந்து, சாலை வழியாக எளிதில் அடையும்படி அமைந்துள்ளது. திருவாரூரிலிருந்து, சென்னை, சுமார் 290 கி.மீ தொலைவிலும், திருச்சி, சுமார் 110 கி.மீ தொலைவிலும் உள்ளன. திருவாரூரிலிருந்து, டாக்ஸி மூலமாக திருச்சிக்கு செல்வதற்கு ரூபாய் 1500 வரை செலவாகும்.

## பணி நிரந்தரம் செய்யக்கோரி சென்னையில் பகுதி நேர ஆசிரியர்கள் போராட்டம்

**சென்னை, ஜன.10:**

*தமிழகத்தில் சுமார் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பகுதி நேர ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். இவர்கள் முக்கியமாக கலை, இசை, தையல், உடற்கல்வி போன்ற சிறப்புப் பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களாவர். பணி நிரந்தரம் செய்யக்கோரி தமிழ்நாட்டில் அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் பகுதி நேர ஆசிரியர்கள் தொடர்ந்து பல ஆண்டுகளாக போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.*

*2021 சட்டமன்றத் தேர்தலில் திமுக வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் இடம்பெற்ற வாக்குறுதியின் 181வது உறுதிமொழியில், பகுதி நேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்வதாகக் கூறப்பட்டது. ஆட்சிக்குவந்தபிறகுஇந்தவாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை எனக் கூறி ஆசிரியர்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தினர். பல நாட்கள் நீடித்த இந்தப் போராட்டத்தில் சாலை மறியல், உண்ணாவிரதம் உள்ளிட்ட அறவழிப் போராட்டங்கள் நடைபெற்றன. தினசரி போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி விரைவில் நல்ல செய்தி வரும் என உறுதியளித்தார். ஆனால் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏதும்ஏற்படவில்லை.இதேபோல் 2025 டிசம்பர் மாதத்திலும் உண்ணாவிரதம் உள்ளிட்ட போராட்டங்கள் நடைபெற்றன. இந்த நிலையில் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள டிபிஐ வளாகத்தில் பகுதி நேர ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். பணி நிரந்தரம், ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன முழக்கங்களை எழுப்பி போராட்டம் நடத்தினார்கள்.*

## மாணவன் வெட்டிக்கொலை: நண்பன் கைது

**பணகுடி, ஜன.10:**



*நெல்லை மாவட்டம் பணகுடி பகுதியை சேர்ந்தவர் மாரியப்பன். இவரது மகன் லெட்சுமணன் (வயது 15). இவன் அங்குள்ள ஒரு அரசு மேல்நிலைப் பள்ளியில் 10-ம் வகுப்பு படித்து வந்தான். இவனது வீட்டின் எதிர் வீட்டில் வசிப்பவர் ரத்தின வடிவேல். இவரது மகன் சபரி ராஜன்(23).*

*இவர்கள் 2 பேரின் குடும்பத்தினரும் உறவினர்கள் போலவே எப்போதும் சகஜமாக பழகி வந்துள்ளனர். இதனால் லெட்சுமணன் அடிக்கடி சபரிராஜன் வீட்டுக்கு சென்று விளையாடுவது உண்டு. கடந்த 5-ந்தேதி லெட்சுமணன் பள்ளி முடிந்து வீட்டிற்கு சென்று கொண்டிருந்த நிலையில், சபரிராஜன் அழைத்ததன் பேரில் அவரது வீட்டுக்கு லெட்சுமணன் சென்றுள்ளார்.*

*இருவரும் வீட்டின் வரவேற்பு அறையில் அமர்ந்து பேசிக்கொண்டே டி.வி. பார்த்துள்ளனர். அப்போது அவர்களுக்குள் வாய்த்தகராறு ஏற்பட்ட நிலையில், மதுபோதையில் இருந்த சபரிராஜன் திடீரென ஆத்திரமடைந்து மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து மாணவனை சரமாரியாக வெட்டினார். இதில் படுகாயம் அடைந்த மாணவன் லெட்சுமணன் ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடினான்.*

*உடனே சபரிராஜன் அதிர்ச்சி அடைந்து தனது மோட்டார் சைக்கிளில் அழைத்து சென்று பணகுடி அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்த்தார். அங்கு மாணவனுக்கு முதலுதவி அளிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக நாகர்கோவிலில் உள்ள ஆசாரிப்பள்ளம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டான்.*

*அங்கு சிகிச்சை பலனளிக்காமல் பரிதாபமாக இறந்தான். ஏற்கனவே அரிவாள் வெட்டு குறித்த புகாரின் பேரில் பணகுடி போலீசார் வழக்குப்பதிவு செய்து சபரிராஜனை அதிரடியாக கைது செய்திருந்தனர்.*

## 20% இடங்கள் ஒதுக்கக் கோரி வெளிநாட்டில் மருத்துவம் படித்த மாணவர்கள் உண்ணாவிரதம்

**சென்னை, ஜன.10:**

*மருத்துவக் கல்லூரிகளில் பயிற்சி மருத்துவர்களுக்கான இடங்களில் வெளிநாட்டில் மருத்துவம் படித்த மாணவர்களுக்கு 20 சதவீதம் ஒதுக்கக்கோரி சென்னையில் உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது.*

*வெளிநாடுகளில் மருத்துவம் படிக்கும் மாணவர்களுக்கு தற்காலிக சான்றிதழ் வழங்குவதற்கு, தமிழ்நாடு மருத்துவ கவுன்சில் காலம் தாழ்த்தி வருவதாக புகார் எழுந்துள்ளது.*

*மொத்த பயிற்சி இடங்களில், 20 சதவீதம் வெளிநாடுகளில் மருத்துவம் முடித்த மாணவர்களுக்கு ஒதுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, சென்னையில் நேற்று மருத்துவ மாணவர்கள் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.*

*சமூக சமத்துவத்துக்கான டாக்டர்கள் சங்கம், தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் சங்கத்துடன், வெளிநாட்டு மருத்துவ பட்டதாரி பிரிவினர் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர்.*

*இந்த போராட்டத்துக்கு தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, விசிக தலைவர் திருமாவளவன் ஆகியோர் வந்து ஆதரவு தெரிவித்தனர். அப்போது, திருமாவளவன் பேசும் போது "அரசு மருத்துவக் கல்லூரிகளில் பயிற்சி இடங்களில் 20 சதவீதம் வெளிநாடு மருத்துவ மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என்று கடந்த 2022-ல் முதல்வர் ஸ்டாலின், மத்திய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளார்.*

*அதனால், தமிழக அரசும் இந்த கோரிக்கையில் உடன்பட்டுள்ளது.*

*அதேநேரம், மாவட்ட அரசு மருத்துவமனைகளில் பயிற்சி பெறலாம் என தேசிய மருத்துவ ஆணையம் அனுமதித்தும் செயல்படுத்தாதது குறித்து தமிழக அரசின் கவனத்துக்கு எடுத்து செல்ல இப்போராட்டம் நடைபெறுகிறது.*

*தமிழக அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மாணவர்களின் கோரிக்கை தொடர்பாக மக்களவையில் பேசுவதுடன், மத்திய அமைச்சரிடமும் வலியுறுத்துவேன்" என்றார்.*

## ரூ.20.19 கோடி மதிப்பீட்டில் அதிநவீன இறைச்சிக்கூட கட்டிடம்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் அடிக்கல் நாட்டினார்

**சென்னை, ஜன.10:**



*மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் இன்று அடையாறு மண்டலம், சைதாபேட்டை ஆலந்தூர் சாலை ஆடுதொட்டியில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தில் ரூ.20.19 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள நவீன இறைச்சிக் கூடம் கட்டும் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியதாவது:-*

*முதல்-அமைச்சரின் வழிகாட்டுதலின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சைதாப்பேட்டையில்பெயர்பெற்ற ஆடுதொட்டி என்னுமிடத்தில் ரூ.20.19 கோடியில் 25,000 சதுர அடி பரப்பளவில் அதிநவீன இறைச்சிக் கூடம் கட்டும் பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டது. இந்த ஆட்டு இறைச்சி கூடம் 1960-ம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்டது. இன்றைய தமிழ்நாடு முதல்-அமைச்சர் அப்போது துணை முதல்-அமைச்சராக இருந்தபோது 2006-ம் ஆண்டு ரூ.9 கோடி செலவில் மிகப்பெரிய அளவில் நவீனப்படுத்தப்பட்ட ISO தரச்சான்றிதழ்களுடன் கூடிய ஆட்டிறைச்சி கூடமாக மாற்றப்பட்டது. தொடர்ந்து தற்போது பெருகிவரும் மக்கள் தொகை, அதேபோல் வியாபாரம் கூடுதல்படுத்தப்பட்டு வரும் நிலையில் முதல்-அமைச்சரின் வழிகாட்டுதலின்படி, இந்த அதிநவீன இறைச்சிக் கூடத்தில் பல்வேறு புதிய தொழில் நுட்பத்துடன் சுத்தமான பரிசோதிக்கப்பட்ட இறைச்சி மக்களுக்கு வழங்கப்பட உள்ளது. முதல்-அமைச்சரின் சிங்கார சென்னை 2.0 எனும் திட்டத்தின்கீழ் இந்த அமைப்பு உருவாக்கப்பட உள்ளது. இந்த அதிநவீன இறைச்சி கூடத்தில் ஒரே சமயத்தில் 700 ஆடுகள் இறைச்சிக்காக தயாராகும் வகையில் 105 கொக்கிகளுடன் 8,600 சதுர அடியில் ஒரு கூடம் அமைகிறது. இந்த நவீன இறைச்சி கூடத்தில் கால்நடை ஆய்வகம் ஒன்றும், கால்நடை மருத்துவர்களுக்கு ஒரு அறையும் கட்டப்பட உள்ளது. இந்த இறைச்சி கூடமானது நவீனமும், சுகாதாரத்தோடும், நிலையான நீடித்த சுற்றுச்சூழல் அமைப்பும் ஒருங்கே பெற்று இறைச்சி தயாரிக்கும் முறை மிகவும் நேர்த்தியாகவும், பொது சுகாதாரம் பாதிக்காத வகையில் புதிய விதிமுறைகளை கடைபிடித்து ஒரு சிறந்த இறைச்சி கூடமாக அமைய உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.*

## பவானிசாகர் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு



**ஈரோடு, ஜன.10:**

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;- ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையிலிருந்து, இரண்டாம் போக புன்செய் பாசனத்திற்கு, கீழ்பவானித் திட்டப் பிரதானக் கால்வாய் ஒற்றைப்படை மதகுகள் மற்றும் சென்னசமுத்திரம் பகிர்மான கால்வாய் இரட்டைப்படை மதகுகள் மூலமாக, பாசன நிலங்களுக்கு 09.01.2026 காலை 8.00 மணி முதல் 30.04.2026 காலை 8.00 மணி வரை 67 நாட்கள் தண்ணீர் திறப்பு மற்றும் 44 நாட்கள் தண்ணீர் நிறுத்தம் என்ற முறையில், 12000.00 மில்லியன் கன அடிக்கு மிகாமல், தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது. இதனால், ஈரோடு மாவட்டத்திலுள்ள சத்தியமங்கலம், நம்பியூர், கோபிசெட்டிபாளையம், பவானி, பெருந்துறை, ஈரோடு, மொடக்குறிச்சி, கொடுமுடி ஆகிய வட்டங்களிலுள்ள நிலங்களும், திருப்பூர் மாவட்டத்தில் காங்கேயம் வட்டத்திலுள்ள நிலங்களும் மற்றும் கரூர் மாவட்டத்தில் அரவக்குறிச்சி வட்டத்திலுள்ள நிலங்களும் என மொத்தம் 1,03,500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

## முன்னாள் அமைச்சர் கே.சி.வீரமணிக்கு எதிரான வழக்கு: சென்னை ஐகோர்ட் தள்ளுபடி

**சென்னை, ஜன. 10:**

கடந்த 2021 ம் ஆண்டு நடந்த சட்டமன்ற தேர்தலில், ஜோலார்பேட்டை தொகுதியில் போட்டியிட்ட அதிமுக முன்னாள் அமைச்சர் கே.சி.வீரமணி தோல்வியடைந்தார். அவர் தாக்கல் செய்த வேட்புமனுவில் சொத்து விவரங்களை மறைத்து, தவறான தகவலை தெரிவித்ததாக வேலூரைச் சேர்ந்த ராமமூர்த்தி என்பவர் தேர்தல் ஆணையத்தில் புகார் அளித்திருந்தார். அதன் அடிப்படையில், வீரமணியின் வருமானம் குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளிக்கும்படி, வருமான வரித்துறைக்கு தேர்தல் ஆணையம் கடிதம் அனுப்பியது. வீரமணி தாக்கல் செய்த வேட்புமனுவில் குறிப்பிட்டிருந்த சொத்துக்களையும், அவரது வருமான வரிக்கணக்குகளையும் ஆய்வு செய்த வருமான வரித்துறை, 14 கோடி ரூபாய் அளவுக்கு வித்தியாசம் உள்ளதாக இடைக்கால அறிக்கை அளித்தது. இறுதி அறிக்கையை தாக்கல் செய்ய உத்தரவிடக் கோரி, ராமமூர்த்தி தரப்பில் சென்னை ஐகோர்ட்டில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அடங்கிய அமர்வு, வேட்புமனுவில் தவறான தகவலை தெரிவித்ததாக தேர்தல் ஆணையம் வழக்கு தாக்கல் செய்துள்ளது. முழுமையான விசாரணை நடத்துவது குறித்து வருமான வரித்துறை முடிவு செய்யும். இதனால் மனுதாரர் எப்படி பாதிக்கப்படுகிறார் எனக் கேள்வி எழுப்பியது. மேலும், தேர்தல் நேரத்தில் அரசியல் காரணங்களுக்காக நீதிமன்றத்தை பயன்படுத்த அனுமதிக்க முடியாது எனக் கூறிய நீதிபதிகள், வழக்கை ஒரு லட்சம் ரூபாய் அபராதத்துடன் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

# எஸ்ஐஆர் பணிக்காக மேற்கு வங்கத்தில் ஆன்லைன் விசாரணை விரைவில் தொடக்கம்



**கொல்கத்தா, ஜன.10:**

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிக்காக மேற்குவங்கத்தில் ஆன்லைன் விசாரணை நடைமுறை விரைவில் தொடங்கப்பட உள்ளது.

மேற்குவங்கத்தில் கடந்த நவம்பர் 4ம் தேதி முதல் டிசம்பர் 11ம் தேதி வரை வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி (எஸ்ஐஆர்) நடைபெற்றது. கடந்த டிசம்பர் 16ம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இதில் 58,20,898 வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டன. மேலும் எஸ்ஐஆர் படிவங்களை முறையாக பூர்த்தி செய்யாத 95 லட்சம் பேருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டு உள்ளது.

வாக்காளர் பட்டியலில் இடம்பெறாதவர்கள், நோட்டீஸ் கிடைக்கப் பெற்றவர்கள் மாநில தேர்தல் ஆணைய அலுவலகங்களில் முறையிட்டு வருகின்றனர். அவர்களிடம் விசாரணை நடத்தி, அவர்களது ஆவணங்களின் நம்பகத் தன்மையை தேர்தல் அலுவலர்கள் ஆய்வு செய்து வருகின்றனர்.

மேற்குவங்கத்தை சேர்ந்த புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் மாணவர்கள் பல்வேறு மாநிலங்களுக்கு இடம்பெயர்ந்து உள்ளனர். தேர்தல் ஆணைய அலுவலகத்தில் அவர்கள் நேரில் ஆஜராக முடியாத சூழல் உள்ளது. இதை கருத்தில் கொண்டு மேற்கு வங்கத்தில் ஆன்லைன் விசாரணை நடைமுறையை தொடங்க மாநில தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது.

இது குறித்து மூத்த அதிகாரிகள் கூறியதாவது: வெளியூரில் தங்கியிருக்கும் வாக்காளர்களுக்காக ஆன்லைன் விசாரணை நடைமுறையை தொடங்க உள்ளோம். இதற்காக விரைவில் டிஜிட்டல் தளம் தொடங்கப்படும். இதில் வாக்காளர்கள் ஆன்லைன் வாயிலாக ஆவணங்களை சமர்ப்பிக்கலாம். விசாரணை நாளின் போது குடும்ப உறுப்பினர்களில் ஒருவர் நேரில் ஆஜராக வேண்டும்.

சம்பந்தப்பட்ட வாக்காளர் ஆன்லைன் வாயிலாக விசாரணையில் பங்கேற்று விளக்கம் அளிக்கலாம். சில தேர்தல் அலுவலர்களின் (பிஎல்ஓ) நடவடிக்கைகள் திருப்திகரமாக இல்லை. தவறிழைக்கும் பிஎல்ஓக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

## மார்கழி-26

**10-01-2026**

### திருப்பாவை - பாடல் -26

மாலே மணிவண்ணா! மார்கழி நீராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்துன் பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பாடு உடையனவே
சாலப் பெரும்பறையே பல்லாண்டு இசைப்பாரே
கோல விளக்கே கொடியே விதானமே
ஆலின் இலையாய்! அருளேலோர் எம்பாவாய்...

**பொருள்:** பக்தர்களிடம் மிகுந்த அன்பு கொண்டவனே! நீலக்கல் நிறத்தவனே! பெரிய கடலில் ஆலிலையில் மிதப்பவனே! பெரியவர்களால் வழிவழியாக மேற் கொள்ளப்படும் மார்கழி நோன்பிற்கு, உல கத்தையே அதிர வைக்கும் ஒலியையும், பால் சாதம் போன்ற நிறத்தையும், உன் சங்காகிய பாஞ்சஜன்யத்தைப் போன்றதுமான வலம்புரி சங்குகளையும், பெரிய முரசுகளையும், பல்லாண்டு பாடும் பெரியோரையும், மங்கள தீபங்களையும், கொடிகளையும் தந்து, இந்த நோன்பை நிறைவேற்றுவதற்குரிய இடத்தையும் அளித்து அருள் செய்ய வேண்டும்..

**விளக்கம்:** பாஞ்சஜன்யம் என்னும் சங்கை திருமால் ஏந்தியிருக்கிறார். இந்த சங்கின் கதையைக் கேளுங்கள். பஞ்சசன் என்ற அசுரன் சாந்தீபனி என்ற முனிவரின் மகனைக் கொன்று விட்டு, கடலில் போய் மறைந்து கொண்டான். கிருஷ்ணர் அவரிடம் மாணவராகச் சேர்ந்தார். குருதட்சணையாக தன் மகனைக் கொன்ற அசுரனை பழிவாங்க வேண்டும் என சாந்தீபனி முனிவர் உத்தரவிட்டார். கிருஷ்ணரும் பஞ்சசனைக் கொன்று அவனைச் சங்காக மாற்றி தனது கையில் வைத்துக் கொண்டார். அசுரசங்கு என்பதால் தான் குருக்ஷேத்திரக் களத்தில் அதை ஊதும்போதெல்லாம் அதன் பேரொலி கேட்டு எதிரிப்படைகள் நடுங்கின..

### திருப்பள்ளியெழுச்சி - பாடல்-6

பப்பற வீட்டிருந்து உணரும் நின்னடியார்
பந்தனையறுத்து வந்தறுத்தார் அவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத்து இயல்பில்
வணங்குகின்றார், அணங்கின் மணவாளா
செப்புறு கமலங்கள் மலரும் தண்வயல் சூழ்
திருப்பெருந்துறையுறை சிவபெருமானே!
இப்பிறப்பறுத்து எமையாண்டு அருள்புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே!

**பொருள்:** பார்வதிதேவியின் துணைவனே! செந்தாமரை மலர்கள் மலர்ந்த குளிர்ந்த வயல் கள் சூழ்ந்த திருப்பெருந் துறையில் வசிக்கும் சிவபெருமானே! எம்பெருமானே! உன் அருள் என்னும் பெருந்தகைமையை உள்ளத்தில் உணரும் அடியவர்கள், குடும்பம், பந்தபாசங்களை உதறிவிட்டு உன்னைத் தரிசிக்க வந்துள்ளார்கள். கண்ணில் மை தீட்டிய பெண்மணிகளும் மனித இயல்புக்கு ஏற்ப வணங்க உன்னை வணங்க வந்துள்ளனர். எங்களுடைய பிறப்பை நீக்கி எங்களை ஆட்கொண்டு முக்தி நிலை தர உடனே விழித்தருள வேண்டும்.

**விளக்கம்:** சாதாரண மனிதன் எப்படி இறைவனை வணங்குவான்? பூ கொண்டு வருவான், கற்பூர ஆரத்தி செய்வான், தூபதீபம் போடுவான், நெய் தீபம் ஏற்றுவான்... இதையெல்லாம் செய்து விட்டு, ஒரு கஷ்டம் வந்து விட்டால், இப்படியெல்லாம் செய்தும் என்னை சோதிக்கிறாயே! இது உனக்கே அடுக்குமா? என்று திட்டுவான். இப்படிப் பட்டவர்களும் கோயிலில் நிற்கிறார்கள். பந்தபாசமே வேண்டாமென்று அவனே கதியென சரணமடைய வந்தவர்களும் நிற்கிறார்கள். எப்படிப் பட்ட பக்தியாக இருந்தாலென்ன! உன்னை நம்பி அவர்கள் வந்து விட்டார்கள். அந்த இருதரப்புக்கும் பிறப்பற்ற நிலை தந்து பேரானந்தத்தில் திளைக்க வைக்க வேண்டும் என்று வேண்டுகிறார் மாணிக்கவாசகர்.

# க்ரைம் கார்னர்

## தெலுங்கானாவில் மரத்தில் கார் மோதல்: 4 கல்லூரி மாணவர்கள் பலி

**ரங்காரெட்டி, ஜன.10:**

தெலுங்கானா மாநிலம் ரங்கா ரெட்டி மாவட்டத்தில் உள்ள மோகிலா பல்கலைக்கழகத்தை சேர்ந்தவர்கள் சூர்யதேஜா, சுமித், ஸ்ரீநிகில், ரோகித், மாணவி நட்சத்திரா. இவர்கள் 5 பேரும் இன்று அதிகாலை மோகிலாவிலிருந்து ஐதராபாத்திற்கு காரில் புறப்பட்டு சென்றனர். மிர்ஜ குடா என்ற இடத்தில் சென்றபோது திடீரென கார் கட்டுப்பாட்டை இழந்து சாலையோரம் இருந்த மரத்தில் பயங்கர வேகத்தில் மோதியது. விபத்தில் காரில் இருந்த சூர்ய தேஜா, சுமித், ஸ்ரீ நிகில், ரோகித் ஆகியோர் காரின் இடிபாடுகளில் சிக்கி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தனர். நட்சத்திரா படுகாயம் அடைந்தார். விபத்து குறித்து தகவல் அறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று நட்சத்திராவை மீட்டு சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இறந்த 4 பேரின் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## நெல்லையில் 4.5 கிலோ கஞ்சா, பைக் பறிமுதல்: 3 பேர் கைது

**திருநெல்வேலி, ஜன.10:**

திருநெல்வேலி மாநகரம் மேலப்பாளையம், குறிச்சி வாய்க்கால் பாலம் அருகில் நேற்று காவல் துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அப்பகுதியில் சந்தேகப்படும்படி நின்று கொண்டிருந்த நபர்களில் மேலப்பாளையத்தைச் சேர்ந்த பீர் முஹம்மது என்பவர் தப்பி ஓடிவிட, மற்ற நபர்களை போலீசார் சோதனை செய்தனர். அதில் அவர்கள் திருநெல்வேலி, மேலப்பாளையத்தைச் சேர்ந்த கிருஷ்ணன் மகன் ராசப்பன், பஷீர் மகன் முஹம்மது ஹுசைன் மற்றும் அக்பர் அலி மகன் முஹம்மது பாதுஷா என்பதும், அவர்களிடமிருந்து சுமார் 4.5 கிலோ கிராம் கஞ்சா மற்றும் ஒரு இருசக்கர வாகனம் ஆகியவற்றை பறிமுதல் செய்து, அவர்கள் 3 பேரையும் போலீசார் கைது செய்தனர்.

## போக்சோ வழக்கு குற்றவாளி தடுப்பு காவல் சட்டத்தில் கைது

**திருநெல்வேலி, ஜன.10:**

திருநெல்வேலி மாவட்டம், மானூர், தெற்குப்பட்டியை சேர்ந்த ராமர் மகன் முருகன் (வயது 55), போக்சோ வழக்கு குற்றவாளி ஆவார். இவர் மீது தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்குமாறு திருநெல்வேலி ஊரக அனைத்து மகளிர் போலீஸ் இன்ஸ்பெக்டர் மாரியம்மாள், மாவட்ட எஸ்.பி.யிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இதனையடுத்து அவரது வேண்டுகோளின் பேரில், திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. பிரசண்ணகுமார் பரிந்துரையின்படி, மாவட்ட கலெக்டர் சுகுமார் உத்தரவின்பேரில் முருகன் தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

# வெனிசுலாவில் அமெரிக்க ஏகாதிபத்தியம் ஊடுருவியுள்ளது: கேரள முதலமைச்சர் கண்டனம்

**திருவனந்தபுரம், ஜன.10:**

வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ ஒரு போதை பொருள் பயங்கரவாதி என்றும் அந்நாட்டில் இருந்து அமெரிக்காவுக்குள் அபாயகர போதை பொருட்கள் கடத்தப்படுகின்றன என்றும் டிரம்ப் கடுமையான குற்றச்சாட்டுகளை கூறி வந்த நிலையில், நிக்கோலஸ் மதுரோவும், அவருடைய மனைவி சிலியா புளோரசும் அமெரிக்க ராணுவ வீரர்களால் கைது செய்யப்பட்டு வெனிசுலாவில் இருந்து நாடு கடத்தப்பட்டனர்.

இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. எனினும், வெனிசுலாவில் உள்ள எண்ணெய் மற்றும் பிற வளங்களை குறி வைத்து அமெரிக்கா இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு உள்ளது என உலக நாடுகளால் பார்க்கப்படுகிறது.

இதற்கு, ரஷியா மற்றும் ஈரான் போன்ற நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்து உள்ளன. இந்திய அரசு இதற்கு கவலை தெரிவித்துள்ளது.

நிலைமையை கவனித்து வருவதுடன், வெனிசுலா மக்களின் நலனுக்கான ஆதரவை மீண்டும் வலியுறுத்துகிறோம் என்றும் தெரிவித்து உள்ளது. சீனா, ஜப்பான் நாடுகளும், ஐ.நா. அமைப்பும் கூட வெனிசுலாவுக்கு ஆதரவாக பேசியுள்ளன.

இந்நிலையில், கேரள முதல்-மந்திரி பினராயி விஜயன் கூறும்போது, அமெரிக்க அரசு ஏகாதிபத்திய ஆணவத்துடன் நடந்து கொள்கிறது. வெனிசுலாவின் பிராந்திய ஒருமைப்பாட்டை கவனத்தில் கொள்ளாமல் நடந்து கொண்டு, அதன் தலைவரை சிறைபிடித்து வைத்துள்ளது என குற்றச்சாட்டாக கூறினார்.

அமெரிக்க ராணுவ நடவடிக்கையானது, பிற நாடுகளில் அத்துமீறி தலையிடும் அதன் நீண்டகால வரலாற்றை பிரதிபலிக்கிறது.

அமெரிக்காவின் பொருளாதார மற்றும் அரசியல் நலனிற்காக, அவற்றை பாதுகாப்பதற்காக, மோதல்களை உருவாக்கி, லட்சக்கணக்கான அப்பாவி மக்களை கடந்த காலங்களில் கொன்று குவித்துள்ளது என்றும் கூறியுள்ளார்.

# நீதிபதி யஷ்வந்த் வர்மா மனு மீதான தீர்ப்பு ஒத்திவைப்பு

**புதுடெல்லி, ஜன.10:**

டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதியாக பணியாற்றிய யஷ்வந்த் வர்மா வீட்டில் கடந்தாண்டு ஏற்பட்ட தீ விபத்தில் எரிந்த நிலையில் பண மூட்டைகள் கைப்பற்றப்பட்டன. இந்த விவகாரத்தில் தனது பதவியை ராஜினாமா செய்ய நீதிபதி யஷ்வந்த் மறுத்துவிட்டார்.

இதையடுத்து மக்களவையில் அவர் மீது பதவி நீக்க தீர்மானம் கொண்டுவரப்பட்டு 3 உறுப்பினர் கொண்ட விசாரணை குழுவை சபாநாயகர் ஓம் பிர்லா அமைத்தார். இதே தீர்மானம் மாநிலங்களவையில் நிராகரிக்கப்பட்டது.

இந்நிலையில், சபாநாயகரின் நடவடிக்கையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் நீதிபதி யஸ்வந்த் வர்மா மனுத் தாக்கல் செய்தார். அதில் விசாரணைக்கு குழு அமைத்தது அரசியல் சாசனம் மற்றும் நீதிபதிகள் விசாரணை சட்டத்துக்கு எதிரானது என கூறி சபாநாயகரின் நடவடிக்கையை ரத்து செய்யும்படி நீதிபதி வர்மா கூறியிருந்தார். இந்த மனு மீதான விசாரணை நீதிபதிகள் திபாங்கர் தத்தா மற்றும் எஸ்சி.சர்மா ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.

நீதிபதி யஷ்வந்த் வர்மா சார்பில் மூத்த வழக்கறிஞர்கள் முகுல் ரோத்தகி, சித்தார்த் லுத்ரா ஆஜராயினர். மத்திய அரசின் சார்பில் சொலிசிடர் ஜெனரல் துஷார் மேத்தா ஆஜரானார். இரு தரப்பு வாதங்களையும் பதிவு செய்து கொண்ட உச்சநீதிமன்றம் தீர்ப்பை மறு தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைத்தது.

# "எனது கட்சி சிவசேனாவை பிரதமர் மோடி உடைத்தார்" - உத்தவ் தாக்கரே குற்றச்சாட்டு

**மும்பை, ஜன.10:**




கடந்த 2022 ஜூன் மாதம் சிவசேனா கட்சி இரண்டாக உடைந்தது. தற்போது உத்தவ் தாக்கரே தலைமையில் ஓர் அணியும், மகாராஷ்டிர துணை முதல்வர் ஏக்நாத் ஷிண்டே தலைமையில் மற்றொரு அணியும் செயல்படுகின்றன.

இதுதொடர்பாக உத்தவ் தாக்கரே பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது: "கடந்த 2014, 2019ம் ஆண்டுகளில் நடைபெற்ற மக்களவைத் தேர்தல்களில் பிரதமர் நரேந்திர மோடிக்காக நான் தீவிர பிரச்சாரம் செய்தேன். இருமுறை மோடிக்கு உதவி செய்த போதிலும் அவர் எனது கட்சியை உடைத்தார். அவர் பிரதமராக வேண்டும் என்று நான் வலியுறுத்தினேன்.

ஆனால் நான் அழிக்கப்பட வேண்டும் என்று அவர் கூறுகிறார். மகாராஷ்டிராவில் இருந்து மும்பையை பிரிக்க வேண்டும் என்பது பாஜகவின் பழைய கனவு ஆகும். சிவசேனா நிறுவனர் பால் தாக்கரே கடந்த 2012-ம் ஆண்டு வரை வாழ்ந்தார். அவர் வாழ்ந்த காலத்தில் பாஜக வளைந்து நின்றது. தற்போது அவர் உயிரோடு இல்லாத சூழலில் காகித அளவில் சிவசேனாவை அழித்துவிட்டனர்.

ஆனால் மக்களின் மனங்களில் இருந்து சிவசேனாவை அழிக்க முடியாது. அரசியல் நாகரிகத்தை மீறி பாஜக செயல்படுகிறது. 20 ஆண்டுகளுக்கு பிறகு நானும் ராஜ் தாக்கரேவும் ஒன்றிணைந்துள்ளோம். இனிமேல் நாங்கள் ஒரு போதும் பிரிய மாட்டோம். இவ்வாறு உத்தவ் தாக்கரே தெரிவித்துள்ளார்.

# வணிகச் செய்திகள்

## பேண்டேஜ் துணி உற்பத்திக்கு தொழில் பூங்கா நிறுவ ராஜபாளையம் உற்பத்தியாளர்கள் கோரிக்கை

**ராஜபாளையம், ஜன.10:**

பேண்டேஜ் எனப்படும் மருத்துவத் துணி உற்பத்தியில் உலக அளவில் இந்தியா முன்னணியில் உள்ளது. சீனா 2-ம் இடத்தில் உள்ளது. இந்தியாவைப் பொருத்தவரை தமிழகத்தின் விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் பேண்டேஜ் துணி உற்பத்தியில் முன்னிலை வகிக்கிறது. இப்பகுதியில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறு விசைத்தறி கூடங்களும்,50-க்கும் மேற்பட்ட பெரிய நூற்பாலைகளும் உள்ளன. இதில் பெரும்பாலான விசைத்தறிகள் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களால் குடிசைத் தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ராஜபாளையம் பகுதியில் தினசரி ரூ.2 கோடி அளவுக்கு பேண்டேஜ் துணி நெசவு செய்யப்படுகிறது.

பேண்டேஜ் துணி உற்பத்தியில் தொழிலாளர்களை விட சிறு விசைத்தறி உரிமையாளர்களே அதிகம் உள்ளனர். இவர்கள் மருத்துவத் துணி உற்பத்தியாளர்களிடமிருந்து நூலை பெற்று நெசவு செய்து கொடுக்கின்றனர். அதன்பின் அந்த துணி சைசிங் செய்யப்பட்டு மருத்துவ துணியாக மாற்றப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்நிலையில் ஜிஎஸ்டி வரி சீரமைப்பில் வரி விதிப்பு இரு அடுக்குகளாக குறைக்கப்பட்டதால், பேண்டேஜ் துணி, நூல் ஆகிய இரண்டும் 5% வரி அடுக்கில் கொண்டு வரப்பட்டதால் உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும் பேண்டேஜ் துணி உற்பத்திக்கு தொழில் பூங்கா நிறுவ ராஜபாளையம் உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வெனிசுலா கச்சா எண்ணெய் ஏற்றுமதியை கட்டுப்பாட்டில் வைத்திருக்க அமெரிக்கா திட்டம்

**வாஷிங்டன், ஜன.10:**

அமெரிக்க எரிசக்தி துறை அமைச்சர் கிரிஸ் ரைட் கூறும்போது, "வெனிசுலாவில் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதற்கான தடை படிப்படியாக நீக்கப்படும். வெனிசுலா கச்சா எண்ணெயை மீண்டும் விற்கப் போகிறோம். இந்த வருமானத்தை வெனிசுலா கணக்கில் வரவு வைக்கப்படும். இந்தப் பணம் வெனிசுலா மக்களுக்காக பயன்படுத்தப்படும். 2000-ம் ஆண்டுகளில் அமெரிக்காவின் எக்ஸான் மொபில் கார்பரேஷன், கோனோகோபிலிப்ஸ் மற்றும் கம்பெனிகளை வெனிசுலாவின் முன்னாள் அதிபர் ஹுகோ சாவேஸ் அரசுடைமையாக்கினார். அந்த நிறுவனங்களுக்கு எல்லாம் இழப்பீடு அளிக்க வேண்டியுள்ளது. வெனிசுலா எண்ணெய் விற்பனை மூலம் முதலில் கிடைக்கும் பணம், அமெரிக்க நிறுவனங்களுக்கு திருப்பி கொடுக்க பயன்படுத்தப்படாது. அது நீண்ட கால பிரச்சினை" என்றார்.

# சோம்நாத் கோயிலில் தொடங்கியது சுயமரியாதை திருவிழா! பிரதமர் மோடி வாழ்த்து

**புதுடெல்லி, ஜன.10:**



குஜராத்தில் உள்ள பிரசித்தி பெற்ற சோம்நாத் கோயிலின் 1,000 ஆண்டுகால மீட்சியைக் குறிக்கும் வகையில் சுயமரியாதை திருவிழா வியாழக்கிழமை தொடங்கியது.

வேத மந்திரங்கள் முழங்க சிறப்பு பூஜைகள்-வழிபாடுகளுடன் நான்கு நாள்கள் நடைபெறவுள்ள இந்தத் திருவிழாவையொட்டி, பிரதமா் நரேந்திர மோடி மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளாா்.

நாட்டில் உள்ள பன்னிரு ஜோதிா்லிங்க திருத்தலங்களில் ஆதி ஜோதிா்லிங்கமாக விளங்கும் சோம்நாத் கோயில், குஜராத் மாநிலம், பிரபாஸ் பட்டன் பகுதியில் அமைந்துள்ளது. இக்கோயில் மீது கடந்த 1026-ஆம் ஆண்டில் முகலாய படையெடுப்பாளா் கஜினி முகமது முதல் முறையாகத் தாக்குதல் நடத்தி, பெரும் செல்வங்களைக் கொள்ளையடித்தாா். அதன் பிறகு முகலாய படையெடுப்பாளா்களால் சோம்நாத் கோயில் பலமுறை சூறையாடப்பட்டது.

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு சா்தாா் வல்லபபாய் படேல் உள்ளிட்ட தலைவா்களின் முயற்சியால் கடந்த 1951-இல் சோம்நாத் கோயில் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டது. கஜினி முகமது தாக்குதல் நடத்தி 1,000 ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில், சோம்நாத் கோயில் கம்பீரமாக மீண்டெழுந்ததைக் கொண்டாடும் 4 நாள் சுயமரியாதை திருவிழா (சோம்நாத் ஸ்வாபிமான் பாவ்) வியாழக்கிழமை தொடங்கியது. நிறைவு நாள் (ஜன. 11) பூஜைகளில் பிரதமா் மோடி பங்கேற்கவுள்ளாா்.

பிரதமா் மோடி பெருமிதம்: இதையொட்டி, எக்ஸ் வலைதளத்தில் பிரதமா் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: சோம்நாத் சுயமரியாதை திருவிழா தொடங்கியுள்ளது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னா் சோம்நாத் கோயில் முதல் தாக்குதலை எதிா்கொண்டது. அந்தத் தாக்குதலோ, அதன் பிறகு நடத்தப்பட்ட பல தாக்குதல்களோ கோடிக்கணக்கான மக்களின் நித்திய நம்பிக்கையை சிறிதளவுகூட சீா்குலைக்கவில்லை; சோம்நாத் கோயிலை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் என்ற வலுவான உணா்வை உடைக்க முடியவில்லை.

சோம்நாத் சுயமரியாதை திருவிழா, தனது கோட்பாடுகள் மற்றும் நெறிமுறைகளில் ஒருபோதும் சமரசம் செய்து கொள்ளாத பாரத தாயின் எண்ணற்ற குழந்தைகளை நினைவுகூரும் தருணமாகும். காலங்கள் எவ்வளவு கடினமாக இருந்தபோதும், நெறிமுறைகளுக்கான அவா்களின் உறுதிப்பாட்டை எள்ளளவும் அசைக்க முடியவில்லை. இந்திய நாகரிக மீட்சியின் கொண்டாட்டம் இது. கடந்த 1951-இல் சோம்நாத் கோயில் மீண்டும் கட்டமைக்கப்பட்டதில் சா்தாா் படேல், கே.எம்.முன்ஷி உள்ளிட்டோரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். கடந்த 2001-இல் கோயிலின் 50-ஆம் ஆண்டு விழாவில் அப்போதைய பிரதமா் வாஜ்பாய், மூத்த தலைவா் எல்.கே.அத்வானி உள்ளிட்டோா் பங்கேற்றுச் சிறப்பித்தனா்.

நடப்பாண்டில் 75-ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடவுள்ளோம் என்று பிரதமா் மோடி குறிப்பிட்டுள்ளாா்.

சோம்நாத் கோயில் மறுகட்டமைக்கப்பட்டதன் 50-ஆம் ஆண்டு விழா, கடந்த 2001, அக்டோபா் 31-இல் நடைபெற்றது. இது தொடா்பான புகைப்படங்களையும் பிரதமா் பகிா்ந்துள்ளாா்.

# தெருநாய்களை கட்டுப்படுத்துவதில் மாநில அரசுகள் தீவிரம் காட்ட வேண்டும்: சுப்ரீம் கோர்ட் உத்தரவு

**புதுடெல்லி, ஜன.10:**





நாடு முழுவதும் தெரு நாய்கள் பொதுமக்களை அச்சுறுத்தி வருகின்றன. நாய்க்கடியால் ஏற்படும் 'ரேபிஸ்' நோய் தாக்கி பலர் இறக்கிறார்கள். இது மட்டுமல்லாமல் விபத்துகளும் ஏற்படுகின்றன.இதற்கிடையே கடந்த நவம்பர் மாதம் தெருநாய்களை கட்டுப்படுத்துவது தொடர்பான வழக்குகளை விசாரித்த சுப்ரீம் கோர்ட், 'பஸ் நிலையம், ஆஸ்பத்திரி, பள்ளி வளாகம், விளையாட்டு மைதானங்கள் உள்ளிட்ட பொது இடங்களில் சுற்றித்திரியும் தெருநாய்களை அப்புறப்படுத்த வேண்டும். பொது இடங்களில் தெருநாய்கள் நுழையாமல் கண்காணித்து தடுக்க வேண்டும்' என பல்வேறு வழிகாட்டுதல்களை உருவாக்கி அதனை மாநில அரசுகள் முறையாக பின்பற்ற உத்தரவிட்டது.

மேலும், 'தெரு நாய்களை பிடித்து காப்பகங்களில் அடைக்க வேண்டும்' என்றும் உத்தரவு பிறப்பித்தது. இந்த உத்தரவை மாற்றியமைக்க வேண்டும் என விலங்குகள் நல ஆர்வலர்கள் சார்பில் தனியாக மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்குகள் அனைத்தும் நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா மற்றும் என்.வி. அஞ்சாரியா ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. தெருநாய்களை கட்டுப்படுத்தக்கோரிய மனுதாரருக் காக ஆஜரான வக்கீல், 'தெரு நாய்களால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இந்த விவகாரத்தில் சர்வதேச நடைமுறைகளை நாமும் பின்பற்றலாம். ஜப்பான் மற்றும் அமெரிக்காவில் கருணைக் கொலை மையங்கள் உள்ளன.

கைவிடப்பட்ட நாய்கள் அங்கு அழைத்துச்செல்லப்படும். குறிப்பிட்ட நாட்கள் தங்கவைக்கப்படும். யாரும் அந்த நாய்களை தத்தெடுக்கவில்லை என்றால் அவை கருணைக்கொலை செய்யப்படும். ஜப்பானில் தெரு நாய் பிரச்சினை இல்லாததற்கு இதுவே காரணம். 1950-ம் ஆண்டு முதல் அங்கு வெறிநாய்க்கடி மரணங்கள் எதுவும் இல்லை என்றார்.

விலங்கு நல ஆர்வலர் ஒருவர் கோர்ட்டில் ஆஜராகி, 'அனைத்து தெரு நாய்களையும் காப்பகங்களில் அடைப்பது சரியான நடைமுறையாக இருக்காது. நாய்களை ஒழித்து விட்டால் சில மாநிலங்களில் குரங்குகள் பிரச்சினை கற்பனை செய்து பார்க்கவே முடியாத அளவுக்கு அதிகரித்துவிடும்' என தெரிவித்தார்.

நாய்களை பிடிப்பதற்கு எதிராக ஆஜரான மூத்த வக்கீல், 'தெருநாய்களுக்கு கருத்தடை தடுப்பூசி போட்டு, மீண்டும் அதே இடத்தில் விட்டு விடலாம். இதன்மூலம் நகரங்களில் தெருநாய் பிரச்சினையை ஒழிக்க முடியும்' என்றும் வாதிட்டார்.

அப்போது நீதிபதிகள், 'நாங்கள் ஏற்கனவே உத்தரவை மாற்றி அமைத்துள்ளோம். இப்போது கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட பகுதிகளில் மட்டுமே நாய்கள் இருக்கக்கூடாது என சொல்லியுள்ளோம். ஆஸ்பத்திரிகள், பள்ளிகள், நீதிமன்றங்களுக்குள் தெரு நாய்கள் சுற்றி திரிவதால் என்ன மாதிரியான பாதிப்பை பொதுமக்கள் சந்திக்க நேரிடும்? என்பது எல்லோருக்கும் தெரியும்.

எனவே, இதுபோன்ற இடங்களில் தெருநாய்களை அகற்றுவதில் என்ன பிரச்சினை? எனக் கேள்வி எழுப்பினார்.

மேலும் நீதிபதிகள், 'தெருநாய்கள் மீது எங்களுக்கும் அக்கறை உள்ளது. பொதுமக்களுக்கு பாதிப்பு என வருகிற போது, அந்த பாதிப்பை தடுக்க என்னென்ன மாதிரி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அந்த அடிப்படையில் தான் தெருநாய்களை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை இந்த நீதிமன்றம் எடுத்து வருகிறது.

சாலைகளை பொறுத்தமட்டில் தெருநாய்கள் இல்லாமல் இருக்க வேண்டும். தெருநாய்கள் கடிப்பதால் மட்டுமல்ல அவை சாலைகளில் சுற்றித்திரிவதாலும் உயிரிழப்பு போன்ற பெரும் ஆபத்தை பொதுமக்கள் தினம்தோறும் சந்தித்து வருகின்றனர். . சில மாநிலங்கள் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரங்கள் திருப்தி அளிக்கும் வகையில் இல்லை' எனக்கூறி விசாரணையை தள்ளிவைத்தனர்.

## விளையாட்டு செய்திகள்

### சிஎஸ்கே திருவள்ளூர் டிசிஏ கிரிக்கெட்: வேலம்மாள் பள்ளிகள் வெற்றி

**திருவள்ளூர், ஜன.10:**

சிஎஸ்கேதிருவள்ளூர் மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்தும் பள்ளிகளுக்கான கிரிக்கெட் லீக் போட்டியில் வேலம்மாள் பள்ளிகள் வெற்றி பெற்றன.

குரூப் இ பிரிவில் விளையாடிய வேலம்மாள் வித்யாலயா (அனெக்சர்) அணி, 30 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 280 ரன்கள் குவித்தது. எஸ். புவனேஷ் 77 பந்துகளில் 16 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 115 ரன்கள் எடுத்து அசத்தினார். ஆர்.வி. புவனேந்திரா 79 ரன்கள் சேர்த்தார். அதைத் தொடர்ந்து களம் இறங்கிய ஸ்ரீ வெங்கடேஸ்வரா (புழல்) அணி 21.1 ஓவர்களில் 51 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. அனிருத் நாயர் 3/4 என்ற சிறப்பான பந்துவீச்சை பதிவு செய்தார்.

குரூப் எச் போட்டியில் எபெனேசர் (கொரட்டூர்) அணி 30 ஓவர்களில் 3 விக்கெட்டுக்கு 367 ரன்கள் குவித்து ஆதிக்கம் செலுத்தியது. கே.எம். நிவாஸ் 108 ரன்களுடன் அவுட்டாகாமல் இருந்தார், எஸ்.என். தர்ஷன் 64 பந்துகளில் 103 ரன்கள் எடுத்தார். ஆர்.டி. வெற்றிசெல்வன் 87 ரன்கள் சேர்த்தார். பெரிய இலக்குடன் களம் இறங்கிய எஸ்பிஓஏ குளோபல் பள்ளி 20.5 ஓவர்களில் 58 ரன்களுக்கு வெளியேறியது. கே.எஸ். பிரணவ் ஆதித்யா (3/3), ஏ. பரிநாய் ஜெயின் (3/15) பந்துவீச்சில் சிறந்தனர்.

குரூப் ஜி பிரிவில் களம் இறங்கிய வேலம்மாள் வித்யாலயா (ஆலப்பாக்கம்) 212/8 ரன்கள் எடுத்தது. ஜே. முகம்மது சுஹைல் 51, லோஹித் 71 ரன்கள் சேர்த்தனர். அதைத் தொடர்ந்து களம் இறங்கிய வேலம்மாள் நியூஜென் (மாதவரம்) அணி 19.5 ஓவர்களில் 79 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. ஏ. நரேஷ் குமார் (3/12), ஆர். ராகுல் கிருஷ்ணா (3/2) அபார பந்துவீச்சை வெளிப்படுத்தினர்.

குரூப் எப் போட்டியில் செயின்ட்.தாமஸ் (மணலி) அணி 25.5 ஓவர்களில் 123 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. எஸ். சாய் சந்தோஷ் 5/35 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இலக்கை விரட்டிய ஆலிவ் ட்ரீ குளோபல் பள்ளி 22.2 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 125 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. பி. தர்ஷன் 38 ரன்களுடன் அவுட்டாகாமல் இருந்தார்.

இந்த போட்டிகள், எதிர்கால நட்சத்திரங்களாக உருவாகும் பள்ளி மாணவர்களின் திறமையை வெளிப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

### மலேசிய ஓபன் பேட்மிண்டன்: பி.வி.சிந்து அரையிறுதிக்கு முன்னேற்றம்

**கோலாலம்பூர், ஜன.10:**

மலேசிய ஓபன் சர்வதேச பேட்மிண்டன் போட்டி கோலாலம்பூரில் நடந்து வருகிறது. இதில் இன்று நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதி சுற்று ஆட்டம் ஒன்றில் இந்திய நட்சத்திர வீராங்கனை பி.வி.சிந்து, ஜப்பானின் யமாகுச்சி உடன் மோதினார்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய பிவி சிந்து 21-11 என முதல் சுற்றை கைப்பற்றினார். தொடர்ந்து நடைபெற்ற 2வது சுற்று ஆட்டத்தின் போது யமாகுச்சிக்கு காயம் ஏற்பட்டது. இதனால் அவர் போட்டியிலிருந்து விலகினார். இதனால் பி.வி.சிந்து அரையிறுதிக்கு முன்னேறினார்.

### மகளிர் பிரீமியர் லீக்: மும்பை அணிக்கு எதிராக பெங்களூரு பந்துவீச்சு தேர்வு

**நவிமும்பை, ஜன.10:**

5 அணிகள் இடையிலான மகளிர் பிரீமியர் லீக் டி20 கிரிக்கெட் போட்டி நவிமும்பையில் இன்று தொடங்குகிறது. முதலாவது லீக் ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் மும்பை இந்தியன்ஸ்- பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ் அணிகள் மோதுகின்றன.

இந்த போட்டிக்கான டாஸ் போடப்பட்டது. அதில் டாஸ் வென்ற பெங்களூரு அணியின் கேப்டன் ஸ்மிருதி மந்தனா பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி, மும்பை அணி முதலில் பேட்டிங் செய்கிறது.

பெங்களூரு : ஸ்மிருதி மந்தனா , கிரேஸ் ஹாரிஸ், தயாளன் ஹேமலதா, ரிச்சா கோஷ் , ராதா யாதவ், நாடின் டி கிளர்க், அருந்ததி ரெட்டி, ஸ்ரேயங்கா பாட்டீல், பிரேமா ராவத், லின்சி ஸ்மித், லாரன் பெல்.

மும்பை: நாட் ஸ்கிவர்-பிரண்ட், ஜி கமலினி, அமெலியா கெர், ஹர்மன்பிரீத் கவுர், அமன்ஜோத் கவுர், நிக்கோலா கேரி, பூனம் கெம்னார், ஷப்னிம் இஸ்மாயில், சமஸ்கிருதி குப்தா, சஜீவன் சஜானா, சைகா இஷாக்.

## 21-ம் தேதி டெல்லியில் தலைமை தேர்தல் அதிகாரிகள் மாநாடு

**புதுடெல்லி, ஜன.10:**

டெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் வருகிற 21-ந் தேதி முதல் 23-ந் தேதி வரை 'இந்திய சர்வதேச ஜனநாயகம் மற்றும் தேர்தல் மேலாண்மை மாநாடு-2026' நடைபெற உள்ளது. இதில் உலகம் முழுவதிலும் இருந்து தேர்தல் மேலாண்மை அமைப்புகள் பங்கேற்கின்றன.

சுமார் 100 சர்வதேச பிரதிநிதிகள், தூதரக அதிகாரிகள் மற்றும் நிபுணர்கள் கலந்து கொள்கிறார்கள். மேலும் 4 ஐ.ஐ.டி.கள், 6 ஐ.ஐ.எம்.கள், 12 என்.எல்.யு.க்கள் மற்றும் ஐ.ஐ.எம்.சி. உள்ளிட்ட முன்னணி கல்வி நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் கலந்து கொள்கிறார்கள். மாநாட்டில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகள், தேசிய மற்றும் சர்வதேச கல்வி வல்லுனர்கள் தலைமையில் 36 கருப்பொருட்களில் குழு விவாதங்கள் நடக்கிறது. இந்த மாநாட்டின் முன்னோட்டமாக மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளின் மாநாட்டை இந்திய தேர்தல் கமிஷன் டெல்லியில் நேற்று நடத்தியது. இதில் தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ்குமார், தேர்தல் கமிஷனர்கள் சுக்பீர் சிங் சந்து மற்றும் விவேக் ஜோஷி ஆகியோர் சர்வதேச மாநாட்டின் நுணுக்கங்கள் மற்றும் அவற்றின் குறிப்பிட்ட பாத்திரங்கள் குறித்து விளக்கினர்.

## ஆதார் சேவைகளுக்காக 'உதய்' அடையாளச் சின்னம் அறிமுகம்

**புதுடெல்லி, ஜன.10:**

ஆதார் சேவைகள் குறித்து பொதுமக்கள் எளிமையாக தெரிந்துகொள்ள 'உதய்' என்ற அடையாளச் சின்னம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (யுஐடிஏஐ) வியாழக்கிழமை தெரிவித்தது.

இதுகுறித்து யுஐடிஏஐ வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'ஆதார் சேவைகளை பொதுமக்கள் எளிதாக அணுகுவதற்கு உதவிடும் வகையிலான அடையாளச் சின்னத்தை வடிவமைத்தல் மற்றும் அதற்கு பெயரிடுதல் தொடர்பாக 'மைகவர்ன்மென்ட்' வலைதளம் வாயிலாக போட்டி நடத்தப்பட்டது.

இதைத்தொடர்ந்து மாணவர்கள், கல்வியாளர்கள் மற்றும் வடிவமைப்பாளர்களிடம் இருந்து சுமார் 875 முன்மொழிவுகள் பெறப்பட்டு, அதில் இருந்து 'உதய்' என்ற சின்னம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

திருவனந்தபுரத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் 'உதய்' சின்னத்தை யுஐடிஐஏ தலைவர் நீல்காந்த் மிஸ்ரா அறிமுகப்படுத்தினார். அதைத்தொடர்ந்து, போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அவர் பரிசுகளை வழங்கினார்.

ஆதார் சேவைகளில் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் புதிய மாற்றங்கள், நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு, குறிப்பிட்ட தகவல் பரிமாற்றம் உள்ளிட்டவை குறித்து தகவல்களை வழங்க இந்த அடையாளச் சின்னம் பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## தண்ணீர் விவகாரத்தை அரசியலாக்க வேண்டாம்: தெலங்கானாவுக்கு ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு வேண்டுகோள்

**அமராவதி, ஜன.10:**



தண்ணீர் விவகாரத்தை அரசியலாக்க வேண்டாம் என்று தெலங்கானா அரசுக்கு ஆந்திர முதல் வர் சந்திரபாபு நாயுடு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கோதாவரி நதி மீது கட்டப்பட்டு வரும் போலவரம் அணைக் கட்டு கட்டுமானப் பணிகளை ஹெலிகாப்டர் மூலம் முதல்வர் சந்திர பாபு நாயுடு பார்வையிட்டார்.

பின்னர் அவர் போலவரத்தில் செய்தியாளர்களிடம் பேசியதாவது: போலவரம் அணை கட்டுவது குறித்து தெலங்கானா அரசு, ஆட்சேபம் தெரிவித்து வருவது வருந்தத்தக்கது. கடலில் கலக்கும் நதி நீரை யார் வேண்டுமானாலும் உபயோகப் படுத்திக் கொள்ளலாம். இதில் அரசியல் தேவையற்றது.

தெலங்கானா மக்களும் இதை புரிந்து கொள்ள வேண்டும். தெலுங்கு இன மக்கள் அனைவரும் சமமானவர்களே. மக்களுக்காக அரசியல் செய்தால் நல்லது. ஆனால், அரசியலுக்காக மக்களை அவதியுறச் செய்யக்கூடாது. ஆர்டிஎஸ் பகுதியில் தண்ணீர் பிரச்சினை வந்தபோது மகபூப் நகருக்கு நாங்கள் தண்ணீர் வழங்கினோம்.

கல் வகுர்த்தி, தேவாதுலா அணைகளை நான்தான் தொடங்கி வைத்தேன். சமீபகாலமாக சிலர் பேசுவதைக் கேட்கையில், பல விஷயங்கள் புரியாத புதிராக உள்ளது. தேவாதுலா அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிட்டால், அது போலவரம் அணைக்கு வரும். கீழ்த் தட்டில் உள்ள போலவரத்துக்கு தண்ணீர் வருவது இயற்கை. இதில் என்ன தவறு ? கோதாவரி நதியில் தேவைக்கேற்ற அளவுக்கு தண்ணீர் உள்ளது.

தேவையான தண்ணீரை உபயோகப் படுத்திக் கொள்ளுங்கள். உபரி நீரை நாகார்ஜுன சாகர், ஸ்ரீசைலம் போன்ற அணைகளிலும் நிரப்பிக் கொள்ளுங்கள். கிருஷ்ணா நதிக்கு நீர் வரத்து குறையும்போது, அதன் மேல்பாகத்தில் அணை கட்டினால் நஷ்டம் வரும்.

கிருஷ்ணா டெல்டா பகுதிகளைக் காப்பாற்றி கோதாவரியுடன் கிருஷ்ணா நதி நீரை இணைத்தால்தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். ஒரு பொய்யை நூறு முறை சொன்னாலும் உண்மையாகாது. கடலில் வீணாக கலக்கும் நீரை, தடுத்து நிறுத்தினால் உங்களுக்குத் தான் (தெலங்கானா) நஷ்டம்.

ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் போலவரம் அணையை கண்டுகொள்ளவில்லை. இதனால் 6 ஆண்டு காலம் நாம் நஷ்டம் அடைந்தோம். தற்போது மீண்டும் அப்பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகின்றன. விரைவில் போலவரம் அணை நாட்டுக்கு அர்ப்பணிக்க முடியும். இவ்வாறு அவர் பேசினார்.

## குஜராத் காந்தி நகரில் 70 பேருக்கு டைஃபாய்டு: மனித உரிமைகள் ஆணையம் விசாரணை

**புதுடெல்லி, ஜன.10:**



குஜராத் காந்தி நகரில் மாசுபட்ட குடிநீரால் ஏற்பட்ட டைஃபாய்டு பாதிப்பு குறித்து விரிவான அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என மாநில அரசுக்கு தேசிய மனித உரிமைகள் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இது குறித்த செய்திக் குறிப்பு: குஜராத் மாநிலம் காந்தி நகரில் மாசுபட்ட குடிநீரை குடித்ததால் டைஃபாய்டு பாதிப்பால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்தது குறித்து ஊடகங்களில் வெளியான செய்தியை அடுத்து, தேசிய மனித உரிமைகள் ஆணையம் தாமாக முன்வந்து விசாரணையை மேற்கொள்கிறது.

காந்தி நகரின் குறிப்பிட்ட பகுதியில் டைஃபாய்டு காய்ச்சலால் 70 பேர் பாதிக்கப்பட்டுள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளதாக மாநில சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. குஜராத் மாநிலம் காந்தி நகரில் புதிதாக நிறுவப்பட்ட தண்ணீர் விநியோக அமைப்பில் ஏற்பட்ட குறைபாடு காரணமாக இந்தப் பாதிப்பு உண்டானது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

குடிநீர் விநியோகத்துடன் கழிவு நீரும் கலந்துள்ள தண்ணீர்க் குழாயில் 7 இடங்களில் கசிவுகள் இருப்பது கண்டறியப்பட்டது. செய்திகளில் வெளியான தகவல்கள் உண்மை எனில், இதில் மனித உரிமைகளை மீறும் செயல் என்று ஆணையம் கருதுகிறது.

இதையடுத்து இரண்டு வாரங்களுக்குள் விரிவான அறிக்கை தாக்கல் செய்யுமாறு குஜராத் மாநில தலைமைச் செயலாளருக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

## இந்திய பொருளாதாரம் 7.4 சதவீதமாக உயரும்: மத்திய புள்ளியியல் துறை தகவல்

**புதுடெல்லி, ஜன.10:**



இந்திய பொருளாதரம் 7.4 சதவீதமாக உயரும் என மத்திய புள்ளியியல்துறை தகவல் தெரிவித்துள்ளது.

இந்திய பொருளாதாரத்தின் வளர்ச்சி நிலையை அளவிடும் முக்கியமான குறியீடாக மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜ.டி.பி.) கருதப்படுகிறது. நாட்டில் ஒரு ஆண்டில் உற்பத்தி செய்யப்படும் அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளின் மொத்த மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆகும்.

தொழிற்துறை, சேவைத் துறை, வேளாண்மை போன்றதுறைகளின் செயல்திறன் நேரடியாக இந்திய பொருளாதார வளர்ச்சியுடன் இணைந்துள்ளது. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி உயர்ந்தால் அந்த நாட்டின் பொருளாதாரம் உயர்ந்ததாக கருதப்படும். ஒவ்வொரு நிதியாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியை குறிப்பிட்ட அளவில் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டு அதற்காக பொதுத்துறை மற்றும் தனியார்த்துறை நிறுவனங்கள் உழைத்து வருகின்றன. மேலும் ஒவ்வொரு நிதியாண்டு இறுதியில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி எவ்வளவாக இருந்தது எனவும் தகவல் தெரிவிக்கப்படுகிறது.

நடப்பு நிதியாண்டில் (2025-26) நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 6.7 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்பட்டது. தற்போது மத்திய புள்ளியில் துறை அதனை திருத்தி உயர்த்தி அறிவித்துள்ளது. புவிசார் அரசியல் அழுத்தம், வரிவிதிப்பு உள்ளிட்டவற்றையும் கடந்து உள்நாட்டு நுகர்வு அதிகரிப்பு காரணமாக நாட்டின் பொருளாதாரம் 7.4 சதவீதமாக மதிப்பிட்டுள்ளது. இது 2024-25 நிதியாண்டில் பதிவான 6.5 சதவீதத்தை காட்டிலும் 0.9 சதவீதம் அதிகமாகும். மேலும் மத்திய ரிசர்வ் வங்கி கணித்த இந்திய பொருளாதார மதிப்பை காட்டிலும் 0.1 சதவீதம் அதிகமாகும்.

உற்பத்தித்துறை மற்றும் சேவைத்துறைகளின் மேம்பட்ட செயல்திறனே இந்த உயர்ந்த வளர்ச்சிக்கு காரணங்களாகும் என மத்திய அரசு தகவல் தெரிவித்துள்ளது.

தேசிய வருமானத்தின் முதல் முன்மதிப்பீட்டின்படி உற்பத்தி மற்றும் கட்டுமானத்துறைகள் தலா 7 சதவீதம் வளர்ச்சியடையும் என புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் கணித்துள்ளது. சேவைத்துறை வளர்ச்சி 7.3 சதவீதமாக இருந்து நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தும் முக்கிய இயக்க சக்தியாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

நடப்பு விலைகளை கொண்டு கணக்கீடப்படும் பெயரளவு ஜி.டி.பி. 8 சதவீதமாகவும், பணவீக்கத்தை கொண்ட கணக்கீடப்படும் உண்மையான ஜி.டி.பி. 7.4 சதவீதமாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அகமதாபாத்தில் பிரதமர் மோடி-ஜெர்மனி அதிபர் 12-ந்தேதி பேச்சுவார்த்தை

**புதுடெல்லி, ஜன.10:**

பிரதமர் அலுவலகம் வெளியிட்டு உள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:-

பிரதமர் மோடி அழைப்பின்பேரில் ஜெர்மனி அதிபர் பிரீட்ரிக் மெர்ஸ் வருகிற 12, 13ந் தேதிகளில் இந்தியாவிற்கு பயணம் மேற்கொள்கிறார்.

இது ஜெர்மனி அதிபரின் இந்தியாவிற்கான முதல் அதிகாரப்பூர்வ பயணமாகும். 12-ந்தேதி அகமதாபாத்தில் பிரதமர் மோடி-ஜெர்மனி அதிபர் பிரீட்ரிக் மெர்ஸ் பேச்சு வார்த்தை நடத்துகிறார்கள்.

வர்த்தகம், முதலீடு, தொழில் நுட்பம், கல்வி, திறன் மற்றும் இயக்கம் ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேலும் தீவிரப்படுத்துவது குறித்தும், பாதுகாப்பு, அறிவியல், புதுமை மற்றும் ஆராய்ச்சி, பசுமை, நிலையான மேம்பாடு, மக்களிடையேயான உறவுகள் போன்ற முக்கிய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் அவர்கள் விவாதிப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

ஜெர்மனி அதிபரின் இந்தியாவிற்கான முதல் பயணம் இதுவாகும்.

# அமெரிக்க - இந்திய வர்த்தக ஒப்பந்தம் நிறைவேறாதது ஏன்? - ஹோவார்டு லூட்னிக் விளக்கம்

**வாஷிங்டன், ஜன.10:**

அமெரிக்க - இந்திய வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்காக அதிபர் ட்ரம்ப்புடன், பிரதமர் மோடி தொலைபேசியில் பேசாததே ஒப்பந்தம் நிறைவேறாததற்குக் காரணம் என்று அமெரிக்க வர்த்த அமைச்சர் ஹோவார்டு லூட்னிக் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாகப் பேசிய ஹோவார்டு லூட்னிக், "இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், வியட்நாம் ஆகிய நாடுகளுடன் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தி, பின்னர் அந்த நாடுகளுடன் பல ஒப்பந்தங்களை நிறைவேற்றினோம். இந்த ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்படுவதற்கு முன்பாகவே, அமெரிக்க - இந்திய ஒப்பந்தம் கையெழுத்தாகும் என நாங்கள் கருதினோம். அதற்காக நான் அதிக முக்கியத்துவம் கொடுத்து பேச்சுவார்த்தை நடத்தினேன்.

இப்போது பிரச்சினை என்னவென்றால், அந்த ஒப்பந்தம் அதிக வரி விதிப்புகளைக் கொண்டதாக இருந்தது.

அதனால், அதை ஒப்புக்கொள்ள இந்தியா தயங்கியது. இது தொடர்பாக இந்தியப் பிரதமர் மோடியுடன் நான் பேசினேன்.

ஒப்பந்தத்தை இறுதி செய்ய அதிபர் டொனால்டு ட்ரம்ப்புடன் பேசுமாறு கோரினேன்.

அதற்கு அவர், ஒப்பந்தத்தை ஏற்பதை இந்தியாவுக்கு உகந்ததாக உணரவில்லை என கூறினார். இதனால், அவர் ட்ரம்ப்புடனான தொலைபேசி அழைப்பை தவிர்த்தார்.

ஆனால், நாங்கள் ஒப்பந்தத்தை ஏற்கதயாராக இருக்கிறோம் என்று இந்தியா பின்னர் கூறியது. எதற்கு தயாராக இருக்கிறீர்கள் என்று நான் அவர்களிடம் கேட்டேன்" என தெரிவித்துள்ளார்.

## தொடர் எண்ணெய் திருட்டில் அமெரிக்கா அட்லாண்டிக் கடலில் ரஷ்யக் கப்பலையும் கடத்தியது

**வாஷிங்டன், ஜன.10:**

கரீபியன் கடல் பகுதியில் வெனிசுலாவின் கச்சா எண்ணெய்க் கப்பல்களை கடத்தி எண்ணெய் திருடி வந்த அமெரிக்க ராணுவம் தற்போது மெரினோரா என்ற ரஷ்ய எண்ணெய்க் கப்பலை, வடக்கு அட்லாண்டிக் கடலில் கடத்தியுள்ளது. அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளை மீறி, வெனிசுலாவிலிருந்து சட்டவிரோதமாக கச்சா எண்ணெய் கொண்டு செல்ல முயன்றது எனவும் டிரம்ப்பின் உத்தர வின் பேரில் கடத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்த கடத்தலுக்கு பிரிட்டன் ராணுவமும் உதவி செய்துள்ளது என அந்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இக்கப்பல் ஏற்கெனவே 'பெல்லா 1' என்ற பெயரில் செயல்பட்டது. கடந்த ஆண்டு இறுதியில் இருந்தே இக்கப்பலை கடத்த அமெரிக்கா முயற்சித்து வந்தது. அப்போது தப்பித்து அட்லாண்டிக் கடலுக்குள் அக்கப்பல் நுழைந்தது. அச்சமயத்தில் கப்பலின் பெயர் மாற்றப் பட்டு, ரஷ்யக் கொடி ஏற்றப்பட்டது என கூறப்பட்டுகிறது. மெரினோரா கப்பலைப் பிடித்த அதே நேரத்தில், கரீபியன் கடல் பகுதியில் 'சோபியா' என்ற இன்னொரு எண்ணெய்க் கப்பலையும் அமெரிக்கா கடத்தி யுள்ளது. கடந்த டிசம்பர் முதல் ஜனவரி முதல் வாரம் முடிவதற்குள் மொத்தம் 4 கச்சா எண்ணெய்க் கப்பல்களை அமெரிக்கா கடத்திச் சென்றுள்ளது. அமெரிக்காவின் இத்தகைய தொடர் நடவடிக்கைகள் சர்வதேச கடல் எல்லைகளில் பதற்றத்தை உருவாக்கியுள்ளது.

## ஐரோப்பா நாடுகளில் பால் உணவுப் பொருட்களை திரும்பப் பெறுகிறது 'நெஸ்லே' நிறுவனம்

**அபுதாபி, ஜன. 10:**

குழந்தைகளுக்கு வாந்தி மற்றும் மயக்கம் போன்ற பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய நச்சு மாசுபாடு இருக்கலாம் என்ற சந்தேகத்தைத் தொடர்ந்து, நேஸ்லே நிறுவனம் தனது சில குழந்தை ஊட்டச்சத்து தயாரிப்புகளின் தொகுப்புகளை திரும்பப் பெறுவதாக அறிவித்துள்ளது. முதற்கட்டமாக ஐரோப்பா நாடுகளில் நடவடிக்கையை மேற்கொண்டுள்ள இந்த நிறுவனம் அதனைத் தொடர்ந்து ஆப்ரிக்கா, அமெரிக்கா, ஆசியா ஆகிய கண்டங்களிலும் இந்த நடவடிக்கை விரிவுப்படுத்துகிறது.

குழந்தைகளுக்கான உணவுப் பொருட்களை தயாரிப்பதில் உலக அளவில் முன்னணி நிறுவனமாக இருப்பது நெஸ்லே நிறுவனம். இந்தியா மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் உள்ள தாய்மார்கள் பிறந்த குழந்தைகளுக்கு தாய் பாலுக்கு பதிலாக நெஸ்லே பால் பொருட்களையே பயன்படுத்தி வருகின்றனர். சுவிட்சர்லாந்தை தலைமையிடமாகக் கொண்ட நேஸ்லே நிறுவனம், ARACHIDONIC ACID (ARA) OIL மற்றும் அதனுடன் தொடர்புடைய எண்ணெய் கலவைகளில் மேற்கொண்ட பரிசோதனைகளில், முன்னணி விநியோகஸ்தரிடமிருந்து பெறப்பட்ட ஒரு மூலப்பொருளில் தரக் குறைபாடு கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து, ஐரோப்பா நாடுகளில் சில தயாரிப்புத் தொகுப்புகளை திரும்பப் பெற்றதாக அறிவித்தது. இந்த திரும்பப் பெறல் நடவடிக்கை, நெஸ்லே நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து தன்னார்வமாகவும் முன்னெச்சரிக்கை யாகவும் மேற்கொள்ளப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த பொருட்களின் உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட ஒரு மூலப்பொருளில் பேசிலஸ் செரியஸ் என்ற ஒருவகையான பாக்டீரியா இருப்பதாக கண்டறியப்பட்டதாகவும், அது செருலைடு என்ற நச்சுப் பொருளை உருவாக்கக்கூடும் என்பதால், நுகர்வோர் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவித்துள்ளது.

## பிரான்ஸ் அதிபருடன் ஜெய்சங்கர் சந்திப்பு

**பாரிஸ், ஜன.10:**

6 நாட்கள் அரசு முறை பயணமாக இந்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கர் பிரான்ஸ், லக்சம்பர்க் நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில், பிரான்ஸ் சென்றுள்ள ஜெய்சங்கர் அந்நாட்டு அதிபர் இம்மானுவேல் மேக்ரானை சந்தித்தார். இந்தச் சந்திப்பின்போது இருநாட்டு உறவு, சர்வதேச அரசியல் சூழ்நிலை உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இருவரும் ஆலோசனை நடத்தினர். இதனிடையே, பிரான்ஸ் அதிபர் மேக்ரான் அடுத்த மாதம் டெல்லி வர உள்ளார். அவர் டெல்லியில் நடைபெற உள்ள செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்கா, இஸ்ரேலின் பயங்கரவாத ஏஜெண்ட்களே போராட்டங்களை தூண்டிவிட்டனர்: ஈரான் குற்றச்சாட்டு

**தெஹ்ரான், ஜன.10:**

ஈரானில் நடந்துவரும் போராட்டங்கள் மற்றும் வன்முறையைத் தூண்டியதற்கு அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் 'பயங்கரவாத ஏஜெண்டுகளே' காரணம் என்று ஈரான் அரசு ஊடகம் குற்றம் சாட்டியுள்ளது.

ஈரான் அரசு தொலைக்காட்சியில் இன்று காலை 8 மணி செய்தி ஒளிபரப்பில் வெளியான அறிக்கையில், 'நாட்டில் நடந்துவரும் போராட்டங்கள் மற்றும் வன்முறையை தூண்டியதற்கு அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் 'பயங்கரவாத ஏஜெண்டுகளே' காரணம். இந்தப் போராட்டங்களில் வன்முறை வெடித்து உயிரிழப்புகள் ஏற்பட்டன.

இந்தப் போராட்டங்களின்போது மக்களின் தனிப்பட்ட கார்கள், மோட்டார் சைக்கிள்கள், மெட்ரோ ரயில் சேவை போன்ற பொது இடங்கள், தீயணைப்பு வாகனங்கள் மற்றும் பேருந்துகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன." என்று தெரிவிக்கப்பட்டது.

ஈரானில் பொருளாதார வீழ்ச்சி மற்றும் ஈரானிய ரியாலின் மதிப்பு சரிவுக்கு எதிராக நாடு தழுவிய போராட்டங்கள் கடந்த இரண்டு வாரங்களாகத் தொடர்கின்றன.

இப்போராட்டம் நேற்று (வியாழக்கிழமை) மிகப்பெரிய அரசாங்க எதிர்ப்பு போராட்டமாக உருவெடுத்தது. நாட்டின் நகரங்கள் மற்றும் கிராமப்புறங்களில் இன்றும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன.

போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக சந்தைகள் மற்றும் பஜார்கள் மூடப்பட்டிருக்கும் நிலையில், போராட்டங்களால் ஏற்பட்ட வன்முறை காரணமாக 45 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 2,260-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. டிசம்பர் 28 அன்று தெஹ்ரான் பஜாரில் கடையடைப்புடன் தொடங்கிய இந்தப் போராட்டங்கள், தற்போது ஈரானின் 31 மாகாணங்களுக்கும் பரவியுள்ளன.

போராட்டம் பரவுவதை தடுக்க ஈரான் அரசாங்கம் நாட்டில் இணைய சேவையை முடக்கியதுடன், சர்வதேச தொலைபேசி அழைப்புகளையும் துண்டித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் இரவு 8 மணிக்கு மக்கள் தெருக்களில் இறங்க வேண்டும் என்று நாடு கடத்தப்பட்ட பட்டத்து இளவரசர் ரெசா பஹ்லவி விடுத்த அழைப்பைத்தொடர்ந்து, ஈரானில் போராட்டங்கள் வியாழக்கிழமை அன்று தீவிரமடைந்தன.

## "கிரிமினல்களிடம் இருந்து அமெரிக்கா அதிகாரத்தை பறிக்கும்" - ஜே.டி.வான்ஸ்

**வாஷிங்டன், ஜன.10:**

வெனிசுலா அதிபர் நிகோலஸ் மதுரோவையும் அவரது மனைவியையும் அமெரிக்கா தங்கள் நாட்டுக்கு கொண்டு சென்ற நிலையில், குற்றவியல் கும்பல்களிடம் இருந்து அதிகாரத்தை அமெரிக்கா பறிக்கும் என்று அந்நாட்டின் துணை அதிபர் ஜே.டி. வான்ஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பேசிய ஜே.டி. வான்ஸ், "அமைதியை நிலைநாட்டுவதற்கான வழிகளில் ஒன்று, அமெரிக்கா அதைச் செய்யும் என்பதை தெளிவுபடுத்துவது. இதன்மூலம் அமெரிக்கா மதிக்கப்படும். குற்றவியல் கும்பல்களிடம் இருந்து அதிகாரத்தை அமெரிக்கா பறிக்கும் என்பதை தெளிவுபடுத்த நாங்கள் விரும்புகிறோம். அத்தகைய கும்பல்களிடம் இருந்து அதிகாரத்தைப் பறித்து, அதை சட்டப்பூர்வ அரசாங்கங்களுக்கு வழங்க அமெரிக்கா தயாராக உள்ளது.

குற்றவியல் கும்பல்களுக்கு எதிராக உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் உள்ளது. அதிகாரத்தை நிலைநாட்டுவது மற்றும் சட்டப்பூர்வமான அரசாங்கங்களை வலுப்படுத்துவது ஆகியவற்றில்தான் அமைதி உள்ளது" என தெரிவித்துள்ளார்.

வெனிசுலா தலைநகர் கராகசில் உள்ள அதிபர் மாளிகையில் இருந்து அதிபர் நிகோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவியை அமெரிக்க ராணுவம், அதிரடியாக கைது செய்து தங்கள் நாட்டுக்குக் கொண்டு சென்றதை அடுத்துப் பேசிய அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், "போதைப் பொருள் கடத்தல் கும்பல்கள் உள்ள நிலப்பரப்பின் மீது நாங்கள் தாக்குதல் நடத்தப் போகிறோம். போதைப்பொருள் கும்பல்தான் மெக்ஸிகோவை ஆள்கின்றன." என தெரிவித்திருந்தார். இந்நிலையில், ட்ரம்ப்பின் கூற்றை உறுதிப்படுத்தும் விதமாக ஜே.டி. வேன்ஸ் கருத்து தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப் நிர்வாகம் கடந்த சனிக்கிழமை, வெனிசுலா அதிபர் நிகோலஸ் மதுரோ அவரது மனைவி சிலியா புளோரஸ் ஆகியோரை கைது செய்தது. போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டுக்கள் அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன. இது தொடர்பாக நியூயார்க் நீதிமன்றம் அவர்களிடம் விசாரணை நடத்தி வருகிறது. வெனிசுலாவின் எண்ணெய் வளத்தை குறிவைத்தே அவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக ஜனநாயக கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் அதிபர் வேட்பாளருமான கமலா ஹாரிஸ் குற்றம் சாட்டி இருந்தார்.

இதை உறுதிப்படுத்தும் விதமாக, வெனிசுலாவின் எண்ணெய் வளத்தையும் அந்த நாட்டையும் அமெரிக்கா தற்காலிகமாக நிர்வகிக்கும் என்று ட்ரம்ப் அறிவித்தார். அந்த நாடு 30 மில்லியன் முதல் 50 மில்லியன் பீப்பாய் எண்ணெயை அமெரிக்காவுக்கு வழங்கும் என்று செய்திகள் வெளியாகி உள்ளன.

அமெரிக்காவின் இந்த ராணுவ நடவடிக்கைக்கு ரஷ்யா, சீனா, பிரேசில், மெக்ஸிகோ உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்தன.

## இலங்கைக்கு 10 கடற்படை ஹெலிகாப்டர்களை வழங்கும் அமெரிக்கா!

**டாக்கா, ஜன.10:**

இலங்கை அரசுக்கு 10 கடற்படை ஹெலிகாப்டர்களை அமெரிக்கா வழங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கக் கடற்படையின் டிஹெச்-57 ரகத்தைச் சேர்ந்த 10 ஹெலிகாப்டர்களை இலங்கையின் மீட்புப் படைகளின் பயன்பாட்டிற்காக விரைவில் வழங்கப்படும் என அமெரிக்க தூதர் ஜூலி சங் அறிவித்துள்ளார். இதுபற்றி, அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப் பதிவில் கூறப்பட்டதாவது: "நம்பகத்தன்மைக்காக வடிவமைக்கப்பட்ட இந்த ஹெலிகாப்டர்கள் அதிகப்படியான பாதுகாப்புப் பொருள்கள் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன. உபகரணங்களுக்கான எந்தவிதச் செலவும் இன்றி இந்த ஹெலிகாப்டர்கள் வழங்க முடிகிறது என்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்" எனக் கூறியுள்ளார். இத்துடன், திட்வா புயல் போன்ற பேரிடர் காலங்களில் ஹெலிகாப்டர்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்துள்ளதாகக் கூறிய அவர் அமெரிக்காவில் இருந்து நிகழாண்டின் (2026) துவக்கத்தில் அந்த 10 ஹெலிகாப்டர்களும் இலங்கை வந்து சேரும் எனத் தெரிவித்துள்ளார்.

## உக்ரைன் மீது ரஷியா தாக்குதல்; 3 பேர் பலி

**கீவ், ஜன.10:**

உக்ரைன் , ரஷியா இடையே இன்று 1 ஆயிரத்து 415வது நாளாக போர் நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இப்போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன. அதேவேளை, போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் முயற்சித்து வருகிறார். ஆனாலும் போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்நிலையில், உக்ரைன் தலைநகர் கீவ் மீது நேற்று இரவு ரஷியா ஏவுகணை, டிரோன் தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் 3 பேர் உயிரிழந்தனர். மேலும், 16 பேர் படுகாயமடைந்தனர்.

## பூமியை நெருங்கும் வியாழன் கோள்..! வெறும் கண்களால் பார்க்கலாம்



**வாஷிங்டன், ஜன.10:**

நமது சூரியக்குடும்பத்தில் ஐந்தாவது கோளாக இருப்பது வியாழன் கோள் ஆகும். இது தான் சூரியக்குடும்பத்திலேயே மிகப்பெரிய கோளாகும். நமது பூமியை போல 1,300 பூமியை வியாழனில் அடக்கிவிடலாம் என்றால், அதன் அளவை நீங்களே யோசித்துப்பாருங்கள். இந்த வியாழன் கோளை 75 க்கும் மேற்பட்ட துணைக்கோள்கள் சுற்றிவருவதாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இதற்கும், பூமிக்கும் இடையே உள்ள தொலைவு சுமார் 63.3 கோடி கிலோ மீட்டர் ஆகும். இந்த கோளின் நகர்வை அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசா விஞ்ஞானிகள் ஆய்வு மேற்கொண்டனர். இந்த பிரம்மாண்ட கோள் தான் பூமிக்கு அருகில் வரவிருக்கிறது என்று நாசா தெரிவித்துள்ளது. இதுகுறித்து அவர்கள் கூறுகையில், "வியாழன் கோளானது பூமியை நோக்கி நெருங்கி வருவது தெரிய வந்துள்ளது. எனவே இன்று (வெள்ளிக்கிழமை) அதனை வெறும் கண்களால் கூட பார்க்க முடியும். சூரியன் மறைந்த பிறகு கிழக்கு திசையில் ஜெமினி விண்மீன் கூட்டத்துக்கு அருகில் இந்த கோளை காணலாம். அதேபோல் இன்று (சனிக்கிழமை) சூரியன், வியாழன், பூமி ஆகிய 3 கோள்களும் ஒரே நேர்கோட்டில் காணப்படும்" என நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## கிரீன்லாந்து தொடர்பான பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்த அமெரிக்கா

**கோபன்ஹேகன், ஜன.10:**

டென்மார்க்கின் தன்னாட்சி பிரதேசமான கனிம வளங்கள் நிறைந்த கிரீன்லாந்தை அமெரிக்காவுக்கு சொந்தமானது என்று ஜனாதிபதி டிரம்ப் கூறி வருகிறார். கிரீன்லாந்தை கைப்பற்ற ராணுவ நடவடிக்கை உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளும் பரிசீலனையில் உள்ளதாக அமெரிக்க வெள்ளை மாளிகை தெரிவித்தது. மேலும் பாதுகாப்பு காரணங்களுக்காக கிரீன்லாந்து தனக்கு தேவை எனவும், தேவைப்பட்டால் ராணுவ நடவடிக்கை மூலம் அதனை இணைக்க தயார் எனவும் டிரம்ப் கூறி இருந்தார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து டென்மார்க் அங்கு தனது படைகளை குவித்து வருகிறது. இந்த நிலையில் கிரீன்லாந்து இணைப்பு தொடர்பாக நேரடி பேச்சுவார்த்தையில் ஈடுபட அமெரிக்க வெளியுறவு மந்திரி மார்கோ ரூபியோ அழைப்பு விடுத்துள்ளார்.

## புரதத்துக்கு 'யெஸ்', சர்க்கரைக்கு 'நோ': அமெரிக்கர்களுக்கு ட்ரம்ப் அரசின் புதிய 'டயட் சார்ட்'

**வாஷிங்டன், ஜன.10:**

அமெரிக்க சுகாதாரத் துறைச் செயலர் ராபர்ட் கென்னடி ஜூனியர், அமெரிக்கர்களுக்கான புதிய ஊட்டச்சத்து வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளார். அதில், அமெரிக்கர்கள் தங்கள் உணவில் அதிக புரதச்சத்தை சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், சர்க்கரை, பதப்படுத்தப்பட்ட உணவுகளை குறைத்துக் கொள்ள வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.



அமெரிக்க வேளாண் துறை மற்றும் சுகாதாரம், மக்கள் சேவைகள் துறை ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை அமெரிக்க மக்களுக்கு இத்தகைய வழிகாட்டுதல் நெறிமுறைகளை வெளியிடுவது வழக்கம்.

அதன்படி, அமெரிக்கர்கள் இனி புரதச்சத்து நிறைந்த உணவுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. முழு கொழுப்பு கொண்ட பால் சார்ந்த உணவுப் பொருட்களை ஒருநாளின் மூன்று வேளை உணவிலும் சேர்க்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதேபோல் மது பானங்கள் அருந்துவதைக் கட்டுப்படுத்த வலியுறுத்தியுள்ளது. இந்த வழிகாட்டு நெறிமுறைகள், ஃபெடரல் அரசின் பள்ளிகளுக்கான ஊட்டச்சத்து திட்டங்களுக்கும் அடிப்படையாக அமையும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பாக வெள்ளை மாளிகையில் செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய கென்னடி, "எனது அறிவிப்பு மிகவும் தெளிவானது. உணவை உண்ணுங்கள். பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களை அல்ல" என்றார்.

புரதச் சத்து நிறைந்த, முழு கொழுப்பு நிரம்பிய பால் பொருட்கள், நார்ச்சத்து நிறைந்த முழு தானியங்கள், பழங்கள், காய்கறிகள் ஆகியனவற்றை உண்ண வேண்டும். சிப்ஸ் வகைகள், குக்கீஸ், கேண்டி வகை உணவுப் பொருட்களைத் தவிர்க்க வேண்டும் என்பதே வழிகாட்டுதலாக உள்ளது.

அமெரிக்கர்கள் உணவுப் பழக்கவழக்கத்தில் மாற்றம் கொண்டு வர வேண்டும். அவர்கள் சேச்சுரேட்ட் ஃபேட் எனப்படும் நிறைவுபெற்ற கொழுப்பை அதிகம் உண்வதை கட்டுப்படுத்த இந்த புதிய வழிகாட்டுதல் உதவியாக இருக்கும் என்று அரசுத் தரப்பு நம்புகிறது. அதன்படி, சமையலுக்கு ஆலிவ் எண்ணெய் பயன்படுத்தலாம் அல்லது மாட்டிறைச்சி கொழுப்பைப்பயன்படுத்தலாம் என்று பரிந்துரைக்கிறது.

அதேபோல் புதிய வழிகாட்டுதல் நெறிமுறைகளின் படி, அமெரிக்கர்கள் உடல்நலத்தைப் பேண மது அருந்துவதை குறைத்துக் கொள்ளுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

முன்பு ஆண்கள், பெண்கள் ஒருநாளில் இவ்வளவு மது அருந்திக் கொள்ளலாம் என்ற கட்டுப்பாடுகள் இருந்த நிலையில், தற்போது அப்படியான பரிந்துரைகள் இல்லாமல் மது அருந்துவதை குறைத்துக்கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது. மேலும், கர்ப்பிணிகள், நோயாளிகள் மது அருந்துவதை முழுக்க முழுக்க கைவிட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

இந்தப் பரிந்துரைகளுக்கு ஒருபுறம் ஆதரவும், மறுபுறம் ஊட்டச்சத்து நிபுணர்கள் பலரின் எதிர்வினையும் எழுந்துள்ளது.